உதயன்

www.onlineuthayan.com

36: பக்கங்கள் சுடர் 27 கதிர் 245 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 13 சனிக்கிழமை (28/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00



09

## ஆணைக்குழுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்

# அரசின் செயற்திட்டத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை

### அது ஒளிவுமறைவானது எனச் சாடுகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூலை 28

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் செயற் திட்டத்தில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை. அந்தச் செயற் திட்டம் காலத்தை இழுத்தடித்து ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல நல்ல பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ளது போலவே எமக்குப் படுகிறது. அந்தச் செயற்திட்டத்தை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தாமல் அரசு ஒளிவு மறைவு காட்டுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனச் சாடியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

பார்க்க பக்கம் 4

### தமிழக மீனவர் நேற்று விடுதலை

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 23பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் வைத்தே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்றும் இலங்கை கடற்படையினரின் கப்பல்களை மோதினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் மேற்படி 23 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள், மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களை மன்னார் மாவட்ட

பார்க்க பக்கம் 4

**2** பல்கலைக் கழகங்களுக்கு இந்த வருடம் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக இணைக்கப்படவுள்ளனர்.

**8** சென்னை வடபழனியில் துறைமுகப் பாதையில் மெட்ரோ ரயில் மேம்பாலத்தின் ஒரு பகுதி நேற்றுமுன்தினம் சரிந்து விழுந்தது.

**23** இந்திய கழற்பந்து வீச்சாளர் ஹர்பஜனை 'டுவிட்டரில்' ஒருவர் கெட்ட வார்த்தைகளாலும் மக்கிப் போன மரம் என்றும் திட்டித் தீர்த்துள்ளார்

**24** ஐ.சி.சியின் டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் குமார் சங்ககார தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறார்.

## இலங்கையில் என்னை கொல்லச் சதி நடந்தது

### சொல்ஹெய்ம் பரபரப்புப் பேட்டி




ஒஸ்லோ, ஜூலை 28

2000ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவை சந்திப்பதற்காகதான் இலங்கை வந்திருந்த போது குண்டுத்தாக்குதல் மூலம் கொலை செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் 12 வருடங்களின் பின்னர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு நேற்று வழங்கிய பேட்டியின்

பார்க்க பக்கம் 4



உலக ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த லண்டன் ஒலிம்பிக் போட்டி இன்று துவங்கியது. இங்கலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் ஒலிம்பிக் போட்டியை துவக்கி வைத்தார்.

## பரிந்துரைகளின் செயற்பாடு; ஐ.நாவுக்கும் அறிக்கையாம்

கொழும்பு,ஜூலை 28

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு,மூன்று நாள்களுக்குள் இந்த அறிக்கை ஐ.நாவிடம் கையளிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

பார்க்க பக்கம் 4

### எதிரணியில் இருந்து 15 பேர் அரசுடன்

கொழும்பு, ஜூலை 28

மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் எதிர்க்கட்சியிலிருந்து சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அரசுக்கு

பார்க்க பக்கம் 4

## புலிகளின் செயற்பாடுகளை அறிய இலங்கை வருகிறது சுவிஸ் குழு

கொழும்பு, ஜூலை 28

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக சுவிற்ஸர்லாந்தில் இருந்து 15 பேர் கொண்ட குழு ஒன்று இலங்கை வரவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்குப் பயணத்தை மேற்கொள்ளும் இக் குழு, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இலங்கையில் இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வரும் இக்குழு

பார்க்க பக்கம் 4

## கைதிகளைப் பார்வையிட மன்னார் ஆயருக்குத் தடை

வவுனியா, ஜூலை 28

வவுனியா சிறைச்சாலையில் இருந்து மஹர சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளை நேற்றுச் சந்திக்கச் சென்ற மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகைக்குக் கைதிகளைச் சந்திக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி மறுத்துள்ளார்.

குறித்த சிறைச்சாலையில் 4 கத்தோலிக்க கைதிகள் உள்ளனர்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோர் நேற்றுப் பகல் மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வவுனியா சிறைச்சாலையிலிருந்து இட

பார்க்க பக்கம் 4

## கைதிகளை விடுவித்துவிட்டு பரிந்துரைகள் பற்றிப் பேசுங்கள்

### அரசிடம் கேட்கிறார் மனோ

கொழும்பு, ஜூலை 28

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட செயலணியை அமைத்துள்ளதாக அரசு நேற்று அறிவித்துள்ளது. இந்த அரசினால் வழமையாக அமைக்கப்பட்டுக் காலத்தை கடத்தும் இன்னொரு குழு இதுவல்ல என்று உங்களால் நிரூபிக்க முடியுமா என்று இந்தச் செயலணியை நான் கேட்க விரும்புகிறேன். உடன் தீர்வு காணக்கூடியதும், இன்று எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினையுமான தமிழ் அரசியல் கைதிகளின்

பார்க்க பக்கம் 4

## சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை இலங்கை மீது இந்தியா கடும் அதிருப்தி

### இராஜதந்திர ரீதியில் எதிர்ப்பை வெளிக்காட்டவும் தயாராகிறது டில்லி

கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தொடர்பிலான அதிருப்தி வலுத்துவரும் தற்போதைய சூழ்நிலையில், சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங் க்வாங்லீ அடுத்த வாரம் கொழும்பு வரவிருப்பது இந்தியாவுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாக இந்தியாவின் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றிரவு 'உதயனி'டம் தெரிவித்தன.

அடுத்தவாரம் இலங்கைக்கு வரும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில

பார்க்க பக்கம் 4

EXPOAIR your friend in the skies...

ஒரு மணித்தியாலத்தில் கொழும்பில் !

• தினமும் கொழும்பிற்கான விமான சேவைகள்
• இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யலாம்
• எக்ஸ்போ எயார் நிர்வகிக்கும் தங்குமிட வசதிகளுடன்
• ... கற்றுலா ஒழுங்கமைப்பு



EXPO AVIATION (PVT) LTD.
No 141 F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: +94 21 2223891/2223790 Fax: +94 21 2226297 - Mobile: 0773 788795
Email: jaffna@expoavi.com - Website: www.expoavi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களில் இந்த ஆண்டு 3000 மாணவர்கள் மேலதிக அனுமதி

## 'இசற்' புள்ளிப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்க

யாழ்ப்பாணம், ஜூலை 28

'இசற்' புள்ளி கணிப்பீட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக இந்த வருடம் பல்கலைக்கழக அனுமதியில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக அதிகரிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகளுக்கு அமைய 'இசற்' புள்ளிக் கணிப்பீட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக இந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதி அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் எமது அமைச்சு கலந்துரையாடலை நடத்தியுள்ளது. இதனடிப்படையில் இந்த ஆண்டு 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் மாணவர்கள் வரையில் பல்கலைக்கழகத்துக்கு மேலதிகமாக அனுமதிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான வசதிகள் மற்றும் தங்குமிடம் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம்.

மேலும் குறித்த 'இசற்' புள்ளி பாதிப்பால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பான விவரங்களையும் திரட்டி வருகின்றோம். இந்த விடயத்தை அரசு ஒரு முக்கியமான விடயமாக கருதி மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சகல நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளது - என்றார். (த-5)

# ஆண்டு தோறும் விபத்துகளில் நாட்டில் 12, 000 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை 28

இலங்கையில் விபத்துச் சம்பவங்களின் மூலம் வருடத்துக்கு 12,000 பேர் உயிரிழப்பதாகச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவற்றில் நூற்றுக்கு 22 வீதமான உயிரிழப்புக்கள் வாகன விபத்துச் சம்பவங்களின் மூலமாக நேர்வதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

விபத்துக்களின் மூலமாக உலகம் முழுவதிலும் 5.5 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்தத் தகவல்களை குறிப்பிட்டார்.

விபத்துச் சம்பவங்களை குறைத்துக் கொள்வதற்கு அதிகாரிகள், மக்கள் என அனைத்துத் தரப்பினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார். (த)

# மீளக்குடியமர்த்துமாறு நீதிமன்றத்தில் வழக்கு

## தயாராகுகின்றனர் மயிலிட்டி மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

**எம்மை மீளக்குடியமர்த்துமாறு பலரிடம் மனுக்கள் கையளித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் இல்லை. எனவே எங்களை மீளக்குடியமர்த்துமாறு கோரி நீதிமன்றத்தை நாடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இதற்கு வலி.வடக்கு பிரதேச சபையும் எமக்கு உதவி வழங்க வேண்டும் என மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மயிலிட்டி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் நலன்புரி முகாம்களிலும் வாழும் மக்களின் மீளக்குடியமர்வினை துரிதப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் வலி.வடக்கு பிரதேச சபையின் தலைமையலுவலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி உறுதிமொழி மக்களால் வலி. வடக்கு பிரதேச சபைக்கு வழங்கப்பட்டது.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த உங்களை சொந்த இடத்தில் குடியமர்த்தாது, வலி.கிழக்கு பிரதேசத்தில் உள்ள 'அக்கரை' என்னும் இடத்தில் குடியமர்த்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நடைபெறுவதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது. எனவே இந்த விடயம் தொடர்பில் உங்கள் அபிப்பிராயங்கள் எமக்குத் தேவையாக உள்ளது என மக்களிடம் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் தமது தலைமையுரையில் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள் மயிலிட்டி பிரதேசமானது மண்வளமும், கடல் வளமும், கைத்தொழில் வளமும் கொண்ட பிரதேசமாக இருந்தது. சொந்தத் தொழில் செய்தே நாங்கள் வருமானம் ஈட்டினோம். நாங்கள் யாரிடமும் கையேந்தும் தேவை எழவில்லை.

ஆனால் தற்போது நாங்கள் படுகின்ற துன்பங்கள் ஏராளம். இடம்பெயர்ந்து வாடகை வீடுகளில் வசித்து வருகின்ற நாங்கள் வீடுகள் மாறிமாறி தொடர்ந்தும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். வீட்டு உரிமையாளர்கள் எங்களை வீடுகளை விட்டு வெளியேறச் சொல்லியுள்ளனர். இதனால் நாம் நிர்கதியான நிலையில் உள்ளோம்.

கடற்றொழில் தவிர மாற்றுத் தொழில் தெரியாத நிலையில் வேறு எவ்விடத்திலும் தொழில் செய்ய முடியாத நெருக்கடிக்குள் நாம் வசித்து வருகின்றோம். இலங்கையின் இரண்டாவது பெரிய மீன்பிடித்துறைமுகமாக மயிலிட்டித் துறைமுகம் இருந்தது. மயிலிட்டித் துறையில் கடற்றொழில் செய்பவர்களைத் தவிர அந்தத் தொழிலை அண்டித் தொழில் செய்பவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். கட்டுடை நலன்புரி முகாமில் 23 குடும்பங்கள் வசித்து வருகின்றோம். நாம் இங்கிருந்தும் இடம்பெயர வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம்.

மயிலிட்டியில் அமைந்திருந்த காசநோய் வைத்திய சாலை மிகப்பெரிய வைத்திய சாலையாகும். இந்தப் பிரதேசமே வைத்தியசாலைக்கு ஏற்ற காலநிலையினைக் கொண்டதாகும்.

வளம் நிறைந்த இந்தப் பூமியினை நாம் ஒரு போதும் விட்டுக் கொடுப்பதற்கு தயாராகவில்லை.

மயிலிட்டி, பலாலி, காங்கேசன்துறை, ஊறணி பிரதேச இடம்பெயர் மக்கள் சார்பில் சமாசம் ஒன்று உள்ளது. இதன் சார்பில் எம்மை மீளக்குடியமர்த்துமாறு மனுக்களை நாம் அனைவரிடமும் வழங்கியுள்ளோம். ஆனால் இதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை இல்லை. எனவே எம்மை மீளக்குடியமர்த்துமாறு இடம்பெயர் மக்கள் சார்பில் சட்ட ரீதியான நடவடிக்கை - உரிமையைக் கேட்டுப் பெறுவதற்குரிய வழியாக - நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று தெரிவித்தார்.

இதற்கமைவாக நீதிமன்ற நடவடிக்கைக்குரிய குழு ஒன்று நேற்று தேர்வு செய்யப்பட்டது. (த-10-5)

## அமெரிக்கா பாதுகாப்பற்ற நாடு

அமைச்சர் விமல் கூறுகிறார்



கொழும்பு,ஜூலை 28

உலகிலுள்ள நாடுகளில் மிகவும் பாதுகாப்பற்ற நாடு அமெரிக்காதான் என அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

கொழும்பு, சௌசிறிபாயவில் நடைபெற்ற சர்வதேச கியூப ஒருமைப்பாட்டு தினத்தில் பேசும்போதே அமைச்சர் விமல் வீரவன்ஸ மேற்படி கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இந்த உலகத்தில் மிகவும் பாதுகாப்பான நாடென்றால் அது அமெரிக்காதான். அமெரிக்கர்கள் பாதுகாப்பற்ற மனநிலையிலேயே வாழ்ந்து வருகிறார்கள். அதனால் தான் அமெரிக்கப் பொலிஸார் எந்தவிதமான குற்றச்செயல்களிலும் ஈடுபடாத கியூபப் போதகர்கள் ஐவரைக் கைது செய்து அவர்களுக்குப் பயங்கரவாத முத்திரையும் குத்தியிருந்தார்கள் என்று குறிப்பிட்டார். (த)

# சிறைச்சாலை திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ்

கொழும்பு,ஜூலை 28

சிறைச்சாலைகள் திணைக்களத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகிறது.

சிறைச்சாலைகளை நிர்வகிப்பதற்கு மட்டும் தனியொரு அமைச்சு உருவாக்குவது தொடர்பாக முன்னர் யோசனை தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மத்தியில் நன்னடத்தைகளை பேணுவதற்கும், பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டும் தற்போது இதனைப் பாதுகாப்புஅமைச்சின்கீழ்கொண்டு வருவது தொடர்பாக ஆலோசிக்கப்படுவதாக, அரச் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்தால், சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சு நீக்கப்படும்.**

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் போதைப் பொருள் கடத்தல், பாதாள உலகச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்களாவர். அண்மைக் காலத்தில் கலகங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையில், சட்ட ரீதியற்ற பல்வேறு பாவனைப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகள் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்தால், சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சு நீக்கப்படும். (த)

# லங்கா – இந்தியன் எண்ணெய் நிறுவன ஊழியர் புறக்கணிப்பு

Lanka IOC

திருகோணமலை,ஜூலை 28

திருகோணமலையில் உள்ள லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவன ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வழங்க வேண்டிய சம்பள நிலுவையை வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த பணிப் புறக்கணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 500 கொல்கலங்களில் அடைக்கப்பட்டுள்ள எண்ணெய் வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# வடக்கு மருத்துவர் திங்கள் முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். போதனா வைத்திய சாலை உட்பட வடமாகாணத்திலுள்ள அனைத்து வைத்திய சாலைகளினதும் மருத்துவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கச் செயலாளர் சந்திக்க அறிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பான உண்மைகள் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

எனவே அந்த விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துமாறு கோரி வடமாகாண வைத்தியர்கள் ஒருநாள் முழுவதுமாக கடந்த 24ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்க நிறைவேற்றுக் குழு கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வடமாகாண மருத்துவர்கள் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவுக்கு எதிரான ஆரம்ப விசாரணைகள் நீதியாக பக்கச்சார்பின்றித் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதை சுகாதார அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரியே தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# முன்னாள் போராளிகளுக்கு அலரிமாளிகையில் ஜனாதிபதி கடன்

புனர்வாழ்வு அதிகாரசபையினால் தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் கடனுக்கான காசோலைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்படவுள்ளது. எனவே தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் பயண ஏற்பாடுகளுடன் நாளை பிற்பகல் 5 மணிக்கு முன்னதாக யாழ். மாவட்ட செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விவரங்கள் நாளைய 'உதயனில்' வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுமிகளை ஓட்டோவில் ஏற்றிச் செல்ல யாராவது முற்பட்டால் தகவல் தாருங்கள்

## சாவகச்சேரிப் பொலிஸார் அறிவிப்பு

*தென்மராட்சி,ஜூலை 28*

*18 வயதுக்குக் குறைந்த சிறுமிகளைத் தனிமையில் அழைத்துச் செல்ல யாராவது முற்பட்டால் அதற்கு உடந்தையாக இருக்காமல் தமக்கு உடனடியாகத் தகவல் வழங்குமாறு சாவகச்சேரிப் பொலிஸார் அந்தப் பகுதியில் உள்ள ஓட்டோ சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.*

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட ஓட்டோ சாரதிகளுக்கான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகராட்சி மன்றக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் சந்திரசேகர தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியும் கலந்துகொண்டார்.

பொலிஸார் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களுக்கு ஓட்டோ சாரதிகள் துணை போவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு எமது பிரிவுக்குட்பட்ட ஓட்டோ சாரதிகள் முன்னுதாரணமாக திகழ வேண்டும். குறிப்பாக இளம் பெண்களைக் கடத்துவதற்கு ஓட்டோக்கள் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. 18 வயதுக்குக் குறைந்த யுவதிகளை தனிமையில் அழைத்துச் செல்ல எவரும் முற்பட்டால் அதற்கு உடந்தையாக இருக்க வேண்டாம். அவர்கள் தொடர்பாகச் சந்தேகம் எழுந்தால் பொலிஸாரிடம் தொடர்பு கொள்ளுங்கள். மேலும் மதுபோதையில் ஓட்டோ செலுத்துவதாக முறைப்பாடுகள் வந்துள்ளன. மதுபோதையில் ஓட்டோ செலுத்துவது கண்டறியப்பட்டால் அவர்களது சாரதிய அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஓட்டோ சாரதிகள் சங்கம் அமைத்து மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

எமது பிரதேச எல்லைக்குள் குற்றச் செயல்கள் இடம்பெறுவது அவதானித்தால் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. (த-9)

## கிணறு வெட்டச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

தென்மராட்சி,ஜூலை28

கிணறு வெட்டுவதற்காகச் சென்றவர் மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

மிருசுவில் உசனைச் சேர்ந்த கந்தையா யோகநாதன் (வயது-60) என்பவரே கிணறு வெட்டுவதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை எழுதுமட்டுவாழ் சென்றதாகவும் இரவு வீட்டுக்கு வராததால் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தேடிச் சென்றபோது எழுதுமட்டுவாழ் சந்திக்கும் ஆசைப்பிள்ளை ஏற்றத்திற்கும் இடையில் ஏ-9 வீதியோரமாக சடலமாகக் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளையின் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்ததையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட பதில் நீதிவான் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திப் பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

## குப்பைக்கு மூட்டிய தீ குடிசையை நாசமாக்கியது

*தென்மராட்சி,ஜூலை28*

*வளவு துப்புரவு செய்யப்பட்டு எரிக்கப்பட்ட குப்பையிலிருந்து பறந்து வந்த தீப்பொறி ஒரு குடும்பத்தின் இருப்பிடத்தையே எரித்து நாசமாக்கியது.*

*இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கச்சாய் தெற்கு புங்கடிப்பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்றது.*

*எரிந்து கொண்டிருந்த குப்பையில் இருந்து காற்றில் பறந்து வந்த தீப்பொறி ஒன்று வீட்டுக் கூரையில் விழுந்தமையால் அது தீப்பற்றிக் கொண்டது.*

*வீட்டில் குடும்பத் தலைவி இருந்த போதிலும் வீடு எரிந்த போது உதவி கிடைக்காதமையால் அங்கிருந்த அனைத்து உடைமைகளும் அக்கினியுடன் சங்கமமாகின.*

*சேதுலிங்கம் கணேசலிங்கம் என்பவரது வீடே எரிந்து நாசமாகியதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-9)*

## சிறுமி மீது துஷ்பிரயோகம்; ஆசிரியர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை28

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பிரத்தியேக வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், அவரிடம் கல்வி கற்ற மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

சத்தியவேல் பிரகாஷ் (வயது- 26) என்ற ஆசிரியரே அச்சுவேலிப் பொலிஸாரால் கடந்த 25 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடக மத்திய நிலையம் கூறியது.

பிரத்தியேக வகுப்புக்களை எடுக்கும் குறித்த ஆசிரியர் தன்னிடம் கல்வி கற்ற 14 வயதுச் சிறுமியை கடந்த 18 ஆம் திகதி கொடிகாமத்துக்கு ஏற்றிச் சென்றுள்ளார்.

**கற்ற 14 வயதுச் சிறுமியை கடந்த 18 ஆம் திகதி கொடிகாமத்துக்கு ஏற்றிச் சென்றுள்ளார்.**

இதன் பின்னர் குறித்த சிறுமி தாயாரால் மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சிறுமி கடந்த 25 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பிரத்தியேக வகுப்புக்களை எடுக்கும் குறித்த ஆசிரியர் கடந்த 25 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (த-5)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல்

தென்மராட்சி,ஜூலை28

குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வரணி இயற்றாலையில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த தம்பு நவரத்தினம் (வயது-54) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

## நிகழ்வுகள் இன்று

**இறுவட்டு வெளியீடு**

வடமராட்சி, ஜூலை 28

உடப்பூர் பார்த்தசாரதி பெருமாள் ஸ்ரீ திரௌபதை அம்மன்மீது பாடப்பட்ட 'கோபுரகானங்கள்' என்னும் பக்திப் பாடல் இறுவட்டு வெளியீட்டுவிழா இன்று 8மணிக்கு 108 அடி உயரம் கொண்ட கோபுர உச்சியில் வைத்து வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கவிஞர் பொன். சுகந்தனால் இயற்றப்பட்ட தென்னிந்திய முன்னணிப் பாடகர்களினால் பாடப்பட்ட இந்தப் பக்திப் பாடல் இறுவட்டை சமூக சேவையாளர் சின்னத்துரை தயாபரன் வெளியிட்டு வைப்பார். (த-8)

**இளம் கலைஞர் அறிமுக நிகழ்வு**

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் கோண்டாவில் பொதுநூலகம் நடத்தும் நூலக வலுவூட்டல் நிகழ்வில் இளம் கலைஞர்களை அறிமுகம் செய்தலும், கௌரவிப்புச் செய்தலும் ஆரம்பநிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் இ.தர்மரட்ணம், யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் திறன் விரிவுரையாளர் எம். இளம்பிறையன், யாழ். தேசியகல்வியியற் கல்லூரி இசைத்துறை விரிவுரையாளர் திருமதி எஸ். குகனேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-14-7)

**நாட்டிய மயில் நிகழ்வு**

நாட்டியமயில் -2012 இன் நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திலங்க சுமதிபால, திருமதி மாலினி பொன்சேகா உட்பட பலர் கலந்துகொள்வர். (த-122)

**செயலமர்வு**

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் ஏற்பாட்டில் கொடிகாமம், கச்சாய் பிரதேசங்களின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் அரங்கம் தொடர்பான செயலமர்வு இன்று கொடிகாமம் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தச் செயலமர்வில் ஆசிரியர் ஜெயந்தி வளவாளராகக் கலந்துகொள்வார். (த-9)

**செயற்குழுக் கூட்டம்**

புதுவை கலை பண்பாட்டுப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் மாலை 4 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-9)

## அலுவலகங்களில் இப்போது ஜெனரேற்றர் பாவனையில்

### அடிக்கடி மின்தடையே காரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

குடாநாட்டில் பரவலாக திடீர் திடீரென இடைநிறுத்தப்படும் மின்சாரத் தடை காரணமாகத் தற்போது அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஜெனரேற்றர் பயன்படுத்தி மின்சாரம் பெறுவதில் ஆர்வம் காட்டியுள்ளன.

இலங்கை மின்சார சபையால் முன்னறிவித்தல் வழங்கப்படும் நேரத்துக்கு மாறாகத் திடீர் திடீரென மின்சாரம் இடைநிறுத்தப்படுவதால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணிகள் முடக்கப்படுகின்றன.

இதன் காரணமாக மின்சார சபையின் மின்விநியோகத்தை நம்பி இருக்காமல் ஜெனரேற்றர்களைப் பயன்படுத்தி நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டப்படுகிறது. அத்துடன் ஜெனரேற்றர்கள் இல்லாத அலுவலகங்களில் மின்தடை நேரத்தில் அலுவல்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுவதன் காரணமாகவும் மின் விநியோகத் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாகவும் மின்சாரம் தடைப்படுவதாக இலங்கை மின்சார சபை அடிக்கடி கூறுகிறது. ஆயினும் அந்த நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரத்திலும் மின்தடை ஏற்படுகிறது. இதனால் அரச, தனியார் அலுவலகங்களில் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

மின்சார சபைக்கு மாதாந்த மின்கட்டணம் செலுத்துகின்றபோதும் ஜெனரேற்றர் பாவனை மூலம் மின்சாரம் பெற வேண்டி இருப்பதால் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மின் பாவனையால் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

## சங்கிலியை வாங்கியதும் கம்பி நீட்டினார் காதலன்

### காதலி பொலிஸில் முறைப்பாடு

*யாழ்ப்பாணம்,ஜூலை28*

*தங்கச் சங்கிலியையும் சைக்கிளையும் வாங்கிக் கொண்ட காதலன் வவுனியா வருவதாகக் கூறி தலைமறைவாகிவிட்டார். அவரை நம்பி வவுனியா சென்ற காதலி ஏமாற்றப்பட்ட நிலையில் மீண்டும் சுன்னாகத்துக்குத் திரும்பி வந்தார்.*

*சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த காதலனால் ஏமாற்றப்பட்ட காதலி வவுனியாவில் இருந்து திரும்பி வந்த கையோடு சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.*

*அந்த முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளதாவது:-*

*எனது காதலன் என்னிடம் இருந்த தங்கச் சங்கிலி மற்றும் சைக்கிள் ஆகியவற்றை வாங்கிக் கொண்டு தான் வவுனியா வருவதாகவும் என்னை வவுனியா செல்லுமாறும் அனுப்பிவைத்தார். எனினும் அவர் அங்கு வரவில்லை.*

*இதனால் நான் ஏமாற்றப்பட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார். இதேவேளை உடுவில் நாகம்பாள் வீதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரையும் ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரையும் காணவில்லை எனச் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இது தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-86)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசற் புள்ளி குறித்து விசாரிப்பதற்கு அமைச்சு அதிகாரிகளுக்கு அழைப்பு

## மனித உரிமை ஆணைக்குழு விடுத்தது

கொழும்பு,ஜூலை 28

கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் உயர் அதிகாரிகள், மனித உரிமை ஆணைக்குழுவில் ஆஜராக வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள இசற் புள்ளி தொடர்பான சர்ச்சை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கே மனித உரிமை ஆணைக்குழுவினால் உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இசற் புள்ளியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக 800 மாணவ, மாணவியர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி பிரதீபா மனமேந்திர தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியதில் இருந்து இன்று வரை இது குறித்த சர்ச்சை தொடர்ந்து வருகின்றது.

இதனால் பெருமளவிலான மாணவர்கள் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், அரசினது கவனயீனமான இந்தச் செயற்பாட்டுக்கு பலர் கண்டனத்தையும் தெரிவித்து வருவதுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைவிடப்பட்ட வாகனங்களின் உதிரிப் பாகங்கள் திருட்டு

இறுதிப்போரின் பின்னர் மீட்கப்பட்டு கிளிநொச்சியில் வைக்கப்பட்டுள்ளன. வாகனங்களின் உதிரிப் பாகங்கள் தினமும் களவாடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிப் போரின்போது மக்களால் கைவிட்டுச் சென்ற வாகனங்களுக்கே இன்று இந்த நிலை நேர்ந்துள்ளது.

இதேவேளை அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆளும்தரப்பு ஆதரவாளர்கள் சிலரும் பெறுமதியான வாகன உதிரிப்பாகங்களைக் களவாக எடுத்துச் செல்கின்றனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க பின்னடிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-6)

## தமிழக மீனவர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். இவர்களைப் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டதை அடுத்து குறித்த மீனவர்கள் அனைவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிடுக்கக் கோரி இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டதன் விளைவாக மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து மன்னார் கடற்கரைப் பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மீனவர்கள் இன்று ராமேஸ்வரத்தை சென்றடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## இலங்கையில் என்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது அவர் இந்தவிடத்தை வெளியிட்டுள்ளார். தன்னை கொலை செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததை இலங்கை பொலிஸாரும் உறுதிப்படுத்தினர் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தக் காலப்பகுதியில் இலங்கையில் பெரும் பாதுகாப்பு நெருக்கடி இருந்தது. இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதே பேராபத்தாக இருந்தது. அந்நேரத்திலும் நான் பாதுகாப்புப் படை இல்லாமலேயே பயணித்தேன். ஆனால் இலங்கையிலுள்ள அரசியல் தலைவர்கள் பலத்த பாதுகாப்புடனேயே இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அப்போது இராணுவ பலம் மிக்கவர்களாக இருந்தனர். இதனால் கொழும்பில் பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவியதை அவதானிக்க முடிந்தது.

2000ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை நான் அங்கு தங்கியிருந்தபோதே கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மீது இனந்தெரியாத நபர்கள் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் நோர்வேக்கு ஒரு எச்சரிக்கையை வழங்கும் பொருட்டே நடத்தப்பட்டது என நம்பக் கூடியதாக அமைந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புலிகளின் செயற்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காலப்பகுதியில் 26 பேரை விசாரணை செய்யவிருக்கிறது எனவும் கூறப்படுகிறது. ஏற்கனவே இவர்களால் சுவிட்ஸர்லாந்தில் வைத்து 120 சாட்சியாளர்கள் மற்றும் தகவல் வழங்கியவர்களையும் விசாரணை செய்யப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## பரிந்துரைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் இந்தச் செயற்திட்டம் பகிரங்கப்படுத்தப்படும். வடக்கில் இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் மீளக்குடியேற்றப்பட்டுவிட்டனர்.அங்கு எல்லா உயர் பாதுகாப்பு வலயங்களும் அகற்றப்பட்டு விட்டன.ஆகப் பலாலியில் மட்டும் தான் ஒரே ஒரு உயர் பாதுகாப்பு வலயம் உள்ளது. என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (த)

## கைதிகளைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகளைப் பார்வையிடச் சென்றனர். இதன்போது மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்குக் குறித்த கைதிகளைப் பார்க்க அனுமதி வழங்க முடியாது எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்ததைத் தொடர்ந்து டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மாத்திரம் குறித்த கைதிகளைச் சென்று சந்தித்தார்.

இதனைத் தொடர்ந்து வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்து, ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ்க் கைதிகளை மன்னார் ஆயரும்,ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் நேரில் சென்று சந்தித்துள்ளனர். சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் இந்த நடவடிக்கையானது இலங்கை அரசியலமைப்புக்கு முரணானது என டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார். (த)

## கைதிகளை விடுவித்துவிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைக்குத் தீர்வை தந்து உங்கள் நம்பகத்தன்மையை வெளிப்படுத்த முடியுமா? என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், மக்கள் கண்காணிப்பு குழுவின் அமைப்பாளருமான மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார் .

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் பகிரங்க மனுவில் கையெழுத்திடும் இயக்கம், மனித உரிமை செயற்பாட்டாளர் அமைப்பினால் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மனுவில் கையெழுத்திட்டபின் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

நல்லிணக்க ஆணைக்குழு கணிசமான சிபாரிசுகளை செய்துள்ளது. அவற்றில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் மிக முக்கியமானது தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பிரச்சினையாகும். இது இன்று கைதிகளை அடித்துக் கொலை செய்யும் பிரச்சினையாகவும், கைதிகளைப் படுகாயப்படுத்தும் பிரச்சினையாகவும் மாறியுள்ளது. அதனால் தான் இதை நாம் இன்று எரியும் பிரச்சினை என அழைக்கிறோம். இதை உடனயாகத் தீர்த்து வையுங்கள்.

சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு தேவை என்று சொல்கிறீர்கள். இன்னும் சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய பிரச்சினையின் அரசியல் தீர்வு தேவை என சொல்கிறீர்கள். அரசின் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல, சில சிபாரிசுகளை நிறைவேற்றஅரசியல்அமைப்பை திருத்த வேண்டும் எனச் சொல்கிறார்.

ஆனால் அரசியல் கைதிகளின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அரசியல் தீர்வு, தெரிவுக்குழு, அரசியலமைப்பு திருத்தம் ஆகியவை தேவை இல்லை. ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த பல கைதிகளை நீங்கள் சாதாரண சட்டங்களைப் பயன்படுத்திப் புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றி வீட்டுக்கும் அனுப்பி வைத்துள்ளீர்கள். புதிய சட்டங்கள் தேவையென்றால் உடனடியாகச் சர்வகட்சிகளின் ஆதரவை பெற்றுத்தர நாம் தயார் என ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

சமீபத்தில், புலிகளின் மகளிர் அணித்தலைவி தமிழினியை, சிறைச்சாலையிலிருந்து புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றி, அவருக்கு இப்போது, மணமகள் அலங்காரப் பயிற்சி வழங்குகிறீர்கள். இந்த அரசியல் கைதிகள் செய்ததாக சொல்லப்படும் குற்றங்களைச் செய்த சிலருக்கும், இந்தக் கைதி சந்தேக நபர்களுக்கு ஆணைகள் வழங்கிய சிலருக்கும், நீங்கள் இன்று பொதுமன்னிப்பு வழங்கியுள்ளீர்கள். இன்னும் சிலருக்குப் பதவிகளும் வழங்கியுள்ளீர்கள். சிலருக்கு வீ.ஐ.பி அந்தஸ்த்தும் வழங்கியுள்ளீர்கள்.

எனவே சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களையும் வீட்டுக்கு அனுப்புங்கள். அல்லது அவர்கள் சுயமாக விரும்புவார்களேயானால். அவர்களையும் புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றி, தொழில் பயிற்சி அளித்து அவர்களையும் அவர்களது வீடுகளுக்கு அனுப்புங்கள்-என்றார். (த)

## சீனப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ உட்பட்ட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன், நாட்டின் முக்கியமான பல இடங்களுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்புத் தொடர்பாடல்களை மேம்படுத்துதல், பரஸ்பர படைப்பயிற்சி ஒத்துழைப்புகள் உட்பட்ட பல விடயங்கள் குறித்து சீனப் பாதுகாப்பு அமைச்சர் தனது இந்த விஜயத்தின்போது பேச்சுகளை நடத்தவுள்ளார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் இந்த இலங்கை விஜயம் இந்தியாவை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. ஏற்கனவே இலங்கையில் சீனாவின் தலையீடு குறித்து அதிருப்தியடைந்து அதுதொடர்பில் இராஜதந்திர ரீதியில் எதிர்ப்புகளை வெளிக்காட்டிவரும் இந்திய அரசு, தற்போது சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகையால் கடும் சினமடைந்திருப்பதாகத் தெரிகிறது.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் தொடர்பான அதிருப்தியை எதிர்வரும் காலங்களில் இந்தியா இராஜதந்திர ரீதியில் வெளிப்படுத்துமென இந்தியாவின் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## எதிரணியில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு தெரிவித்து ஆளுங்கட்சியுடன் இணைந்துகொள்ளவுள்ளார்களென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு அலரிமாளிகையில் நடைபெற்றது. சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், அமைச்சர்மார், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

முன்னைய காலங்களில் எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு வருபவர்களுக்கு நாம் பதவிகளையும், உதவிகளையும் வழங்குவதாகக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. ஆனால் இப்போது நிலைமை மாறியிருக்கிறது. எமது கட்சிக்கு உதவிகளை வழங்கத் தயாராக இருக்கும் பலர் எம்முடன் இணைந்து செயற்பட விருப்பம் வெளியிட்டுள்ளனர். தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையில் இந்த வருகைகள் உங்களுக்குத் தெரியும். எம்மைப் பொறுத்தவரை எமது கொள்கை தெளிவானது. யாரையும் நாம் வற்புறுத்தி அழைக்கப்போவதில்லை. எமது அரசின் கதவுகள் திறந்தே இருக்கின்றன. யாரும் வரலாம், போகலாம். நாம் தடுக்கமாட்டோம்.

மாகாணசபைத் தேர்தலில் நாம் மூன்று மாகாண சபைகளையும் கைப்பற்றுவோம். அதற்காக ஆளுங்கட்சி வேட்பாளர்கள் தேர்தல் சட்டதிட்டங்களை மீறி வன்முறையில் ஈடுபடக்கூடாது. எமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அந்தக் கட்சிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படவேண்டும். தேர்தல் சட்டதிட்டங்களை மீறி எவராவது அகப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன் - என்றும் குறிப்பிட்டார் ஜனாதிபதி. (த)

## அரசின் செயற்திட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு புதிய செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசு நேற்றுமுன்தினம் அறிவித்தது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

இந்த செயற்திட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்டது. பின்னர் கடந்த ஆண்டு டிசெம்பரில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது நடந்து இப்போது 9 மாதங்கள் கடந்து விட்டன. ஆயினும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசு அக்கறையுடன் செயற்படவில்லை. அத்துடன் அந்தப் பரிந்துரைகள் குறித்து அரசு நாட்டு மக்களுக்கு பகிரங்கமாகத் தெளிவுபடுத்தவில்லை. தொடர்ந்தும் மறைமுகத் திட்டங்களிலேயே அரசு ஈடுபட்டு வருகிறது. அரசின் இந்தச் செயற்பாடு எமக்கு திருப்தி அளிப்பதாக இல்லை. பரிந்துரைகளைச் செயற்படுத்தும் விடயத்தில் அரசு தொடர்ந்தும் தாமதம் காட்டிவருகிறது. இந்தத் தாமதம் தொடர்ந்தால் அது அரசுக்கு நல்லதல்ல.

பரிந்துரைகளில் பல நல்ல விடயங்கள் உள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்து இழுத்தடிப்பதற்குத்தான் அரசு மறைமுக முயற்சிகளை எடுக்கிறது. இப்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இந்தச் செயற்திட்டமும் இழுத்தடிப்புக்களை மேற்கொள்வதற்கு என்றே நாங்கள் கருதுகிறோம்.


பரிந்துரைகள் நடைமுறைப்படுத்துவது தாமதப் படுவதால் புரிந்துணர்வு, சமாதானம் என்பனவும் தள்ளிப்போகின்றன. ஏன் இவ்வளவு தாமதம்? ஒளிவு மறைவான திட்டம் ஒன்றை வைத்துக்கொண்டே இந்த விடயத்தில் அரசு செயற்படுகிறது என நாம் நினைக்கிறோம். அவ்வாறு இல்லை என்றால் அந்தச் செயற்திட்டத்தை நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கவேண்டியது தானே. அரசின் இந்தப் போக்கு இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தை - ஒற்றுமையை - புரிந்துணர்வை வளர்ப்பதற்கு ஒருபோதும் உதவாது - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலை வைக்கப்படும்
உயிர் நிலைகள்





ஈழத் தமிழர்
பிரச்சினையும்
இந்திய புதிய
ஜனாதிபதியும்




தமிழீழத்தை
அமெரிக்கா
ஆதரிக்குமா?

தூதுவரின் பதில்



பட்டங்கள் பலவிதம்
நாமும் ஒருவிதம்

நாளைய

# சூரியகாந்தி

யில்

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர வகுப்புகளில் தமிழ் ஆசிரியர் இல்லை

## கண்டாவளை, பூநகரி பாடசாலைகளில் அவலம்

கிளிநொச்சிக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கண்டாவளை, பூநகரி ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள உயர்தர வகுப்பில் தமிழ் ஆசிரியர் இல்லாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள மாணவர்கள் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர்.

இது ஒரு புறமிருக்க மேற்படி கல்வி வலயத்தின் கீழ் உள்ள 21 பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகள் இயங்கி வருகின்றன.

இவற்றில் 7 பாடசாலைகளில் தமிழ்ப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. குறிப்பாக கண்டாவளை மற்றும் பூநகரி ஆகிய கல்விக் கோட்டங்களில் உள்ள பாடசாலைகளிலேயே இந்த நிலை அதிகளவில் காணப்படுகின்றது.

இதனைவிட ஏனைய வகுப்புகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)


### விற்பனைக்கு

NP WA xxxx Glamuor - HERO HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0778422432 (21026) (3.14)

### மணல் விற்பனைக்கு

கட்டடவேலைக்கான பூச்சுவேலைக்கான டிப்பர்- (4 ட்ரக்ரர்) மணல்

ரூபா15000/=

தொடர்பு-RAM 0774735228


### கண்ணீர் அஞ்சலி



E.S.P நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி

**பேரம்பலம் மாணிக்கம்(E.S.P)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஞானம் றேட்ஸ் மெயின் வீதி, இளவாலை.*

(சி/1752) (3.14)

### கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மட்டுவில் தெற்கு குடும்ப நல உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி ச.சுவேதினி அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா யோகநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

*சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.* (சி/1755) (15-14) *சுகாதார வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள் ஊழியர்கள்.*

### E.S. பேரம்பலம் நிறுவனத்தின் முழுமையான ஆதரவுடன் யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 12 ஞானக்குழந்தைகள் இல்ல

பாலர் பாடசாலைகளுக்கிடையிலான

**46 ஆவது விளையாட்டு விழா- 2012**

இடம் : யாழ். இந்துக்கல்லூரி மைதானம்

காலம்: 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 9.00 மணி

**தலைவர்**

திரு.S.B. காசிநாதன் அவர்கள்

(தலைவர் பாலர் கல்விக்கழகம், ஆசிரியர் - சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)

**பிரதம விருந்தினர்**

செல்வி. ஜெயா தம்பையா அவர்கள்

(பணிப்பாளர், ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு, வடமாகாணம்)

**சிறப்பு விருந்தினர்**

திரு.லயன் E.S.P நாகரத்தினம் அவர்கள்

(உரிமையாளர், E.S.P நிறுவனம்)

**கௌரவ விருந்தினர்**

வணக்கத்திற்குரிய

கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்கள்

(முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை, யாழ்ப்பாணம்.)

**அனைவரும் வருகை தந்து பாலர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*யாழ். பாலர் கல்விக்கழக உறுப்பினர்கள், ஞானக்குழந்தை இல்ல ஆசிரியர்கள், பாலர்கள்*

(21031) (15-14)

### கண்ணீர் அஞ்சலி



E.S.P. நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி

**பேரம்பலம் மாணிக்கம்(E.S.P)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அருண் ஹார்ட்வெயார் அன் மல்ரி றேடர், அருண் மோட்டோர்ஸ், பெரிய நாவலடி, கண்டி வீதி, கொடிகாமம்.*

(சி/1753) (3.14)

### மரண அறிவித்தல்



*பொன்னம்பலம் சுப்பிரமணியம்*

சித்திரமேழி இளவாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (26.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கப்பிள்ளையின் அன்புக்கணவரும் ஜீவானந்தம், குகானந்தன், மதிவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமலதா, நித்தியகலா, இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனும் லக்ஷன், காலஞ்சென்ற சிவகரன், மற்றும் குகதீசன், தர்மிகா, துளசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் தெட்சணாமூர்த்தி, மகேந்திரம், காலஞ்சென்ற அருமைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சேந்தாங்குளம் காளியானை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*சித்திரமேழி, இளவாலை.* (சி/1754) (15-14) *தகவல் குடும்பத்தினர்.*

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை



வடமராட்சி கிழக்கு, அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் 26.07.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - செம்பாத்தை தம்பதியரின் பாசமிகு மருமகளும் தவனேஸ்வரி (நோர்வே), புவனேஸ்வரி, நவரத்தினம் (சுவிஸ்), கமலேஸ்வரி (சுவிஸ்), ஞானேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் சண்முகநாதன் (நோர்வே), ரவீந்திரநாதன், புஸ்பரத்தினம் (சுவிஸ்), காலஞ்சென்ற சாந்தசொரூபன் (சுவிஸ்) மற்றும் யாழினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் தங்கராசா, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவாஜினி (நோர்வே), பாஸ்கரன் (நோர்வே), ஜெனனி, சந்திரகாந்தன், ஜெயாணி (நோர்வே), ஜெயகரன் (அம்பன் அ.மி.த.க. பாடசாலை) ஜெனதரன் (அம்பன் அ.மி.த.க. பாடசாலை), ராகுலன் (சுவிஸ்), சகானா (சுவிஸ்), சசிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனேகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பன் மேற்கு மணல்திடல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அம்பன், வடமராட்சி கிழக்கு. (21023)(15-14) **தகவல்: குடும்பத்தினர்.**


### வாடகைக்கு

மானிப்பாயில் நிறுவனங்கள் பயன்படுத்தக் கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.

தொடர்பு - 0776790726

0772845189 (21032) (3.14)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம். அழையுங்கள்

0779086737

GUNAA BEST PC

### பசு விற்பனைக்கு

பத்துப்போத்தல் பாலிற்கு மேல் கறக்கக் கூடிய நல்லின ஏழு மாதச் சினைப்பசு விற்பனைக்குண்டு

*S.சண்முகலிங்கம்*

*402, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.* T.P 0777110169

(21024) (15-14)


### கண்ணீர் அஞ்சலி

எமது கழகச் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுப்பவரும் கொடைக்காருணியனுமாகிய திரு.E.S.P நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி.பேரம்பலம் மாணிக்கம்**

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையை இட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஞானக்குழந்தை இல்லங்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*49/5 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.* (21030)(15-14) *பாலர் கல்விக்கழகம், யாழ்ப்பாணம்.*


### வாகனம் விற்பனைக்கு

WP-GXXX தொடரிலக்க நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி கன்ரர் ரக வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0770711259


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



*அமரர்*

**கனகேந்திரம் அன்னலிங்கம்**

தோற்றம் 28*08*1948

மறைவு 28*06*2012

கடந்த 28.06.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கனகேந்திரம் அன்னலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2012) சனிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த் தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் நாவலர் வீதி, சொர்ணாம்பிகை மண்டபத்திலும் (T.C.T) நடை பெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்த னையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

*[illegible] துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (21028) (3.14) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொலிஸார் மீது குறைபாடா ஆணைக்குழுவில் முறையிடலாம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண அலுவலகம் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளது. இதன் பொறுப்பதிகாரியாக எஸ்.சிறிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதி மக்களுக்கு இந்த அலுவலகம் நிறுவப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும். நீண்டகாலமாக இருந்து வந்த ஒரு குறைபாடு இதன் மூலம் நீக்கப்பட்டிருப்பதாகவே கருதப்பட வேண்டும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பொலிஸாரின் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுபவர்கள் இந்த அலுவலகத்தில் தமக்கேற்பட்ட பாதிப்புகள் பற்றி முறைப்பாடுகளைச் செய்யலாம் என்றும் அவ்வாறு தவறாகச் செயல்படும் பொலிஸார்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொறுப்பதிகாரி சிறிதரன் தெரிவித்திருக்கின்றார்.

வீதிகளில் மற்றும் கிராமப் புறங்களில் பொலிஸாரைக் காணும் பொதுமக்களில் அநேகர் அவர்களைப் பற்றி தங்களுக்குள்ளேயே விமர்சித்துக்கொள்வது வழக்கமாகியுள்ளது. குற்றச்செயல்கள் பெருமளவில் பெருகியிருப்பதற்கு பொலிஸாரின் அசமந்தமே காரணம் என்றும் கூட குறைகூறப்படுகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸாரின் ஊழல் நிலைமை குறித்து நாடாளுமன்றத்திலேயே உறுப்பினர் ஒருவர் வெளிப்படையாக சில குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருந்தார். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு வர்த்தகர்களால் மாதத் தவணையில் இலஞ்சம் வழங்கப்படுவதாக எடுத்துக் கூறியிருந்தார். அவரது குற்றச்சாட்டு பொதுவாக இருந்ததே தவிர, குறிப்பாக எந்தவொரு பொலிஸ் நிலையத்தையோ பொறுப்பதிகாரியையோ சுட்டிக் காட்டுவதாய் இருக்கவில்லை. ஆனால் இனிமேல் இந்த மாதிரிக் குற்றச்சாட்டுக்களை மக்கள் முழு விவரங்களுடன் பொலிஸ் ஆணைக்குழுவிடம் தெரிவிக்க முடியும் என்று தெரிகின்றது.

பொதுமக்களும் சரி பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகளும் சரி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அவைபற்றி விசாரணை செய்யப்படும் என்று தெரிவித்துள்ள பொறுப்பதிகாரி சிறிதரன், மேலதிகாரிகளுக்கு தெரிவித்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் தவறான செயற்பாடுகளை முறையிடலாம் என்ற வகையில் பொலிஸார் மீது தமக்கு ஏற்படும் குரோதங்களை முறைப்பாடாக தெரிவிப்பதும் பழிவாங்க நினைப்பதும் பொதுமக்கள் தரப்பில் தவறான செயல்களாக அமைந்துவிடும். எனவே முறைப்பாடுகளை ஆதாரத்துடன் முன்வைப்பதும் நிரூபிக்கக்கூடிய முறைப்பாடுகளையே முன்வைக்க வேண்டும் என்பதும் பொதுமக்கள் தரப்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம். அதுமட்டுமல்ல முறைப்பாடுகளை முன்வைக்கும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கோ பழிவாங்கல்களுக்கோ உள்ளாகாத முறையில் விசாரணைகள் நடைபெறுவதும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பொலிஸாரின் தவறான செயற்பாடுகளைப் பற்றிய முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற இடங்களிலும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் துறையானது பொதுமக்களுக்குச் சேவைபுரிவதற்காகவே உருவாக்கப்பட்டது. சமூகத்தில் குற்றம் புரிகிறவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதும் அவர்கள் கடமையே. ஆனால் பெரும்பாலான சமயங்களில் பொதுமக்கள் எல்லோரையுமே குற்றவாளிகள் போல் நடத்த முற்படும் நிகழ்வுகளைப் பார்க்கின்றோம். இப்பொழுது தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயல்படத் தொடங்கியிருப்பதால் பொலிஸாரும் உஷார் அடைந்து செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். அதனால் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் நடவடிக்கைகளும் குறையும். இது பொலிஸ் பொதுமக்கள் உறவைப் பலப்படுத்தும் என்றும் நம்பலாம் அல்லவா!

பொலிஸ் துறையில் உள்ளவர்களின் செயற்பாடுகள் குறித்து மட்டுமல்ல ஏனைய ஆயுதப்படையினரின் செயற்பாடுகள் குறித்தும் கூட மக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை விசாரித்து நடவடிக்கைகள் எடுப்பதற்கான பொறிமுறை ஒன்று இருந்தால்கூட வரவேற்கக்கூடியதே. ஏனென்றால் வடக்கில் படைத்தரப்பினர்- குறிப்பாக இராணுவத்தினர் மக்களுடன் தொடர்புடைய பல விடயங்களிலும் தலையிட்டு வருகின்றனர். அவர்கள் மீதும் பல முறைப்பாடுகள் கிடைக்கவே செய்கின்றன. அவற்றை விசாரிக்கவும் ஆணைக்குழு நியமிக்கலாம் அல்லவா!

# அரச காணிப் பிணக்குகள் குறித்து எழுத்து மூலம் விண்ணப்பிக்க வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

அரச காணி தொடர்பான பிணக்குகள் இருப்பவர்கள், காணிக் கோரிக்கைகளை முன்வைக்க விரும்புபவர்கள் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக அதற்கு விண்ணப்பிக்க முடியும்.

'பிம்சவிய' படிவத்தின் ஊடாகவோ அல்லது எழுத்து மூலக் கோரிக்கைகளின் ஊடாகவோ இதனைச் சமர்ப்பிக்க முடியும் என்று வடமாகாணக் காணி ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நிறுத்தப்பட்டிருந்த 'பிம்சவிய' வேலைத்திட்டம் தற்போது நீதிமன்றத் தடை விலக்கப்பட்டதை அடுத்துத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாற்பண்ணை, அரியாலை கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள அரச காணிகள் நில அளவை திணைக்களத்தால் அளவிடப்படுகின்றன.

கிளிநொச்சியில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கணேசபுரம், ஊற்றுப்புலம், ஜெயந்தி நகர் கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள அரச காணிகள் நில அளவைத் திணைக்களத்தால் அளவிடப்பட்டு வருகின்றன.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மரத்தியம்பற்று பிரதேச செயலர் பிரிவிலும், மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலர் பிரிவிலும், வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவிலும் அரச காணிகள் நில அளவைத் திணைக்களத்தால் அளவிடப்படுகின்றன.

இந்தக் காணிகள் முன்னர் வழங்கப்பட்டபோது இருந்ததற்கும், தற்போது எவ்வாறு இருக்கின்றன என்றுமே அளவிடப்பட்டு வருகின்றன.

இதேவேளை-

வடமாகாணத்தின் எந்தப் பகுதியிலும் அரச காணிகள் தொடர்பிலான பிணக்குகள் இருப்பவர்கள் 'பிம்சவிய' படிவத்தினூடாகவோ, எழுத்து மூல கோரிக்கை மூலமாகவோ தமது காணிக்கோரிக்கையை முன்வைக்க முடியும்.

மேலும் தனியார் காணி தொடர்பில் விண்ணப்பிக்கப்பட்டால் அது தொடர்பில் காணி நிர்ணயத் திணைக்களமே நடவடிக்கை எடுக்கும் - என்றார். (த-5)

# மனித உரிமை ஆனைக்குழுவின் சிவில் ஒருங்கிணைப்புக் கூட்டம்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் 4 ஆவது சிவில் சமூக ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக சிவில் சமூகங்களுக்கு ஏற்கனவே அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அழைப்புகள் கிடைக்காத யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சிவில் அமைப்புகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையுடன் நேரடியாகவோ அல்லது 0212222021 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொண்டு கலந்துரையாடலில் பங்குபற்ற முடியும்.

மேலும் இந்தக் கலந்துரையாடல் ஊடாக சிவில் சமூகத்திற்கும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் இடையேயான இணைப்பை பலப்படுத்துவதும், அத்துடன் மாவட்ட வலையமைப்பு உருவாக்குவதும், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாக அமையுமென்று யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (த-5)

# கூட்டுறவு அமைப்புகளுக்கிடையே முகாமைத் திறன்காண் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 28

சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு- இடையே முகாமைத்திறன்காண் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன என்று வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இரண்டாம் படிச் சங்கங்கள் போன்ற அமைப்புகளுக்கிடையே இந்த முகாமைத்திறன்காண் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிக்கு மேற்படி சங்கங்கள் தம்மைத் தயார்படுத்த வேண்டும்.

மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் வெற்றி பெறும் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன- என்றார். (த-17)

# நீதிபதி மீதான அச்சுறுத்தல்: பிரதேச சபை கண்டனம்

மன்னார் மாவட்ட நீதிபதியை அவமதித்த செயலுக்கும் நீதிமன்றத்தைத் தாக்கிய செயலுக்கும் வலி. மேற்கு பிரதேச சபை கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பான தீர்மானமும் சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை சபைத் தலைவர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற போது சபை உறுப்பினர்களின் ஏகமனதான முடிவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் செயல்பாட்டை விமர்சிப்பதும் அதனை தவறான முறையில் கையாள்வதும் நீதித்துறையை நெருக்கடிக்குள் தள்ளி இருப்பதுடன் நீதித்துறையின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளதாகவும் அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்கான தீர்வு காணப்படவேண்டும் எனவும் கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# அடுத்த ஆண்டு ஆசிரியர் இடமாற்றத்துக்கு தயாராகிவருகிறது கல்வித் திணைக்களம்

## கடந்த ஆண்டுக்கானதே முடியவில்லை என பலர் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

கடந்த ஆண்டு வழங்கப்பட்ட இடமாற்றத்தையே வடமாகாண சபை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாத நிலையில் 2013 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்துக்கு ஆசிரியர்களை விண்ணப்பிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது குறித்து ஆசிரியர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு இடமாற்றச் சபையால் வழங்கப்பட்ட இடமாற்றம் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வன்னிப் பகுதியில் ஆசிரியர் சேவைக் காலத்தை நிறைவு செய்த 104 ஆசிரியர்களுக்கே இதுவரையில் இடமாற்றம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த இடமாற்றம் இழுத்தடிக்கப்பட்டு வருவது தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையிடம் 104 ஆசிரியர்களும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.

இதற்கான விசாரணைகளின் போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டும் அவர்கள் விசாரணைக்கு சமுகமளிக்காத நிலையில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரையில் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் 2013 ஆம் ஆண்டுக்குரிய ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; கடந்த ஆண்டு வழங்கப்பட்ட இடமாற்றத்தில் உள்ளடக்கப்பட்ட ஆசிரியர்கள் 2013 ஆம் ஆண்டுக்குரிய புதிய இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை.

மேலும் வழங்கப்படாதுள்ள இடமாற்றங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார்.

கடந்த ஆண்டு இடமாற்றம் வழங்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்படாமையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த ஆண்டு முறையாக விண்ணப்பித்து எமக்குச் சரியான முறையில் இடமாற்றச் சபையினூடாக இடமாற்றம் வழங்கப்பட்டது. இருப்பினும் அதனை இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை. அவ்வாறானதொரு சூழலில் புதிய இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்குமாறு கோரியிருப்பது அர்த்தமற்றது - என்றார்.

2013 ஆம் ஆண்டுக்குரிய இடமாற்ற விண்ணப்பங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் இடமாற்றத்தைச் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணத்துடன், முதல் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் இணைத்து உரிய வலய கல்விப் பணிப்பாளருக்கு பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடும் இல்லை; சாப்பாடும் இல்லை நெருக்கடிக்குள் பல்கலை மாணவர்கள்

## வவுனியா வளாகம் மாற்றப்பட்டதால் சிரமம்

நெளுக்குளம், ஜூலை 28

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு வகையிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிய வருகின்றது.

முன்னர் வவுனியா வளாகம் வவுனியா பார்க் வீதியில் இயங்கி வந்தது. கடந்த ஆண்டிலிருந்து பம்பைமடுப் பகுதியிலுள்ள புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

பம்பைமடு வவுனியா நகரத்திலிருந்து 10 மைல்களுக்கும் அப்பால் உள்ளது. இங்கு மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் தினமும் வவுனியாவிலிருந்து பஸ் மூலமாக பம்பைமடு சென்று வருகின்றனர். ஆனால் சீரான பஸ் சேவைகளும் இவர்களுக்கு இல்லாததால் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் வவுனியா வளாகத்துக்கு அருகில் வீடுகளற்ற காணிகளே பெருமளவில் காணப்படுகின்றன. இதனால் வீடுகளையும் பெறமுடியாத நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

மேலும் வளாகத்தை அண்மித்த பகுதியில் மாணவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குரிய சிற்றுண்டிச் சாலைகளோ அல்லது உணவுச்சாலைகளோ இல்லாததால் தமது உணவைப் பெறுவதில் பல்வேறு இடர்களை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். பலர் உணவு அருந்தாமலேயே தமது கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் என மாணவர்கள் கூறுகின்றனர். சிலர் வேறு இடங்களுக்கு உணவுதேடி பஸ்களில் செல்கின்றனர்.


இதனால் வளாகத்தை அண்மித்த பகுதியில் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு வர்த்தக நிலையங்களும் தோன்றுமாயின் தாம் தங்கி நிற்பதற்கும், உணவைப் பெற்றுக் கொள்வதற்கும் இலகுவாக இருக்கும் என மாணவர்கள் பொறுப்பான அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் பிரயாணத்துக்கும், உணவுக்குமென அதிக நேரத்தைச் செலவிடுவதால் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் அதிக சிரமங்களை எதிர் நோக்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

(க-402)

# காட்டில் இருந்து ஊருக்கு வந்தது சிறுத்தைப் புலி



துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் பகுதி கடந்த 25 ஆம் திகதி காலை பரபரப்பாகக் காணப்பட்டது.

வயலில் அழிவுகளை ஏற்படுத்தி வரும் பன்றிகளைப் பிடிப்பதற்கென வைக்கப்பட்ட தடத்தில் ஆறு அடி நீளமான சிறுத்தைப் புலியொன்று பிடிபட்டதாகக் கிடைத்த தகவலே இதற்குக் காரணமாகும்.

புலியைப் பார்ப்பதற்கு கிராமவாசிகள் பெருமெடுப்பில் அந்த இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். சிறுத்தை அகப்பட்டதை அறிந்த அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் ஐயன்கன்குளம் பொலிஸுக்குத் தகவல் வழங்க பொலிஸாரும் விரைந்து அந்த இடத்துக்கு வந்தனர்.

தடத்தில் அகப்பட்ட சிறுத்தையின் சீற்றம் (கர்ச்சனை) அந்தப் பிரதேசத்தையே அதிர வைத்துக் கொண்டிருந்தது. பொலிஸார் மக்களைப் சிறுத்தைக்கு அருகில் அனுமதிக்கவில்லை.

பிற்பகல் 2.30 மணிவரை இந்த நிலையே நீடித்தது. அப்போது அங்கே வருகை தந்தனர் வவுனியா வனத் திணைக்கள அதிகாரிகளும், கால்நடை மருத்துவர்களும் எட்ட நின்றபடியே துப்பாக்கி மூலம் செலுத்தப்பட்ட மயக்க ஊசியின் தாக்கத்தினால் அடுத்த 15 நிமிடங்களில் புலி மயக்க நிலையை அடைந்தது. மேலும் இரண்டு அல்லது மூன்று மயக்க ஊசிகள் ஏற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து புலி அகப்பட்டிருந்த கேபிள் அறுக்கப்பட்டது. ஆனால் மயக்கத்தில் இருந்த சிறுத்தை திடீரென எழுந்து காட்டுக்குள் ஓடித்தப்பியது.

புலியைப் பார்க்க வந்து காலை முதல் கூடியிருந்த மக்கள் ஏமாற்றத்துடனும், அங்கலாய்ப்புடனும் அகன்று சென்றனர்.

புலிக்கு 'புனர்வாழ்வு' கிடைத்து விட்டது என்று கூறிக் கொண்டனர் அவர்கள்.

(க-18)

# துன்பமே தொடர் கதையான முல்லை. கடற்றொழிலாளர்கள்

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்தே வருகின்றனர் என்றும் தமக்கு இன்னமும் விடிவு கிட்டவில்லை என்றும் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கொக்கிளாய் தொடக்கம் சுண்டிக்குளம் நல்ல தண்ணீர் தொடுவாய் வரையான சுமார் 75 கிலோமீற்றர் நீளமான கடலை நம்பிச் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் இவர்கள் கடற்றொழில் செய்யக்கூடிய சூழல் இதுவரை உருவாகவில்லை. ஏனென்றால் மேற்படி கடற்கரையோரப் பகுதிகளிலும், ஆழ் கடற்பகுதிகளிலும் பெரும்பான்மையினத் தொழிலாளர் தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால் தாங்கள் தொழில் செய்வதற்குப் பல்வேறு கெடுபிடிகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

> ஏழைத் தொழிலாளர்களாகிய தாங்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள், தமது விருப்பம் போலத் தொழில்செய்து வருகின்றனர். நாங்கள் தொழிலில் ஈடுபடும் போது எமது கடற்றொழில் உபகரணங்கள் அறுத்துச் சேதமாக்கப் படுகின்றன. நாங்கள் எவரிடம் முறையிட்டாலும் அதற்கு தீர்வுகள் எவையும் கிடைப்பதில்லை. குறிப்பாகக் கொக்கிளாய், நாயாறு போன்ற இடங்களில் வீச்சு வலை, தூண்டல், போன்ற சிறுபாரம்பரிய தொழில்களே செய்ய வேண்டும் என்று கடந்த 1970களுக்கு முன்னரே சட்டம் இயற்றப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆனால் இன்று வேறுபகுதிகளைச் சேர்ந்தவர்கள் இயந்திரப் படகுகள், தடைசெய்யப்பட்ட கூட்டுவலைகள், வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் என்பவற்றைப் பயன்படுத்திச் சட்ட விரோதத் தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் ஏழைத் தொழிலாளர்களாகிய தாங்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

முல்லைத்தீவில் உள்ள சூசைநாதர் என்ற தொழிலாளி கூறுகையில், தான் கடந்த காலப் போர், சுனாமி என்பவற்றால் பெரும் சொத்திழப்புக்களைச் சந்தித்து இன்று மீளக்குடியமர்ந்து இரண்டு வங்கிகளில் கடன்களைப் பெற்றும், தமது உறவினரிடம் ஒரு தொகைப் பணத்தை வட்டிக்கு கடனாகப் பெற்றும் சுமார் 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்துள்ள போதிலும் இன்று தொழில் செய்யமுடியாமல் தமது உணவுத் தேவைக்கு ஒரு கிலோ மீனை 400 ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலையில் இருப்பதாகக் கூறினார்.

இவ்வாறு முல்லைத் தீவுப் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

(க-6)

# வாகனங்களால் அவலங்கள்

அக்கராயன், ஜூலை 28

அக்கராயனில் அதிகரித்துக் காணப்படும் கனரக வாகனங்களின் போக்குவரத்தால் வீதிகளில் பயணிக்கும் பொது மக்கள் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இங்குள்ள அநேகமான வீதிகள் கிரவல் மண்ணினால் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேடு, பள்ளங்கள் நிறைந்தும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் தினமும் அதிகளவில் கனரக வாகனங்கள் அக்கராயனிலிருந்து கிரவல் மண்ணை ஏற்றிக் கொண்டு பூநகரிக்குச் செல்கின்றன. இதன் காரணமாக வீதிகளில் எப்போதுமே புழுதிப்படலம் எழுந்து காணப்படுகின்றது.

இதனால் பாடசாலைக்குச் சென்று வரும் மாணவர்களின் வெள்ளை நிறத்திலான சீருடைகள் நிறம் மாறிக் காணப்படுகின்றன. அத்துடன் சுவாச நோய்களும் ஏற்படுகின்றன.

இங்குள்ள வீதிகளைத் தார் வீதிகளாக அமைக்கும் வரை இந்த அவலம் தொடருமெனப் பாதிக்கப்பட்டுவரும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

(க-18)

# முள்ளியவளை மயானம் அருகில் சகிக்க முடியாத துர்நாற்றம்

## மூக்கைப் பொத்திப் பிடிக்கும் அவலம்

முள்ளியவளை, ஜூலை 28

தண்ணீரூற்றிலிருந்து நெடுங்கேணி செல்லும் பாதையில் முள்ளியவளை மயானத்துக்கு அருகில் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் மூக்கைப் பொத்தியவாறு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இங்கு வீதியின் இருமருங்கிலும் இறைச்சிக்காகக் கொல்லப்படும் மிருகங்களின் கழிவுகள், ஏனைய கழிவுகள் என்பன கொட்டப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து எழும் துர்நாற்றம் சகிக்க முடியாதளவுக்குக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் தமது மூக்குகளைப் பொத்தியவாறு செல்வதைக் காணமுடிகின்றது.

போருக்கு முன்னர் இந்தப் பகுதியில் குப்பை கொட்டுவதற்குத் தடை என அறிவிக்கும் அறிவித்தல் பலகை பிரதேச சபையால் நடப்பட்டு இருந்தது. ஆனால் எவரும் இதனை மதிப்பதாகத் தெரியவில்லை. தொடர்ந்து இந்த இடத்தில் கழிவுகள் கொட்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. துர்நாற்றமும் வீசிக் கொண்டே இருக்கின்றது.

ஆனால் கரைதுறைப் பற்றுப் பிரதேச சபையினர் இதனைக் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

இனியாவது பிரதேச சபையினர் இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-433)



கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் புனரமைக்கப்பட்டு எழிற்கோலத்துடன் காணப்படும் முருகன் ஆலயம்.

(க-18)

# காணியை வழங்குவதற்கு இராணுவம் பின்னடிப்பு

## அரிசி ஆலை அமைக்க இடமின்றி பனங்காமம் சங்கம் அவதி

முல்லைத்தீவு ஜூலை 28

முல்லைத்தீவு விநாயகபுரம் பகுதியில் உள்ள பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குரிய காணியை வழங்குவதற்கு இராணுவம் தொடர்ந்தும் பின்னடித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விநாயகபுரம் பகுதியில் உள்ள பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான காணியை ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் நெல் வாணிபப் பிரிவு பயன்படுத்தி வந்தது.

தற்போது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு யூ.என்.டி.பி. நிறுவனம் அரிசி ஆலை ஒன்றை அமைப்பதற்கான உதவியை வழங்க முன்வந்துள்ளது. குறித்த காணியில் அரிசி ஆலையை அமைப்பது என பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் காணியை விட்டு வெளியேறுவதற்கு இராணுவத்தினர் பின்னடித்து வருவதுடன் மேற்படி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமானவேறு இடங்களில் உள்ள காணி ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுமாறும் இந்தக் காணியை தமக்கு வழங்குமாறும் வற்புறுத்தி வருகின்றனர்.

இந்தக் காணியை வழங்க மறுத்து மக்கள் நெருக்கமாகவுள்ள அல்லது சிறிய காணியில் அரிசியாலையை அமைக்குமாறு இராணுவம் கூறுவது எந்த விதத்திலும் பொருத்தமானது இல்லையெனக் கூட்டுறவு நாட்டமுள்ள பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜெனரேற்றரும் பழுது நயினாதீவு மக்கள் இருளில்

## 24 மணி நேர மின்சாரம் வெறும் வாய்ச்சொல் மட்டுமே

யாழ்ப்பாணம்,ஜூலை28

நயினாதீவுப் பிரதேசம் கடந்த மூன்று தினங்களாக மின்சாரம் இல்லாமல் இரவில் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. புதிதாக எடுத்து வரப்பட்ட ஜெனரேற்றர் மூலமும் அங்கு சீரான மின்விநியோகம் இடம்பெறவில்லை. இதனால் நயினாதீவு மக்கள் கடும் விரக்தியடைந்துள்ளனர்.

நயினாதீவுக்கான 24 மணிநேர மின்விநியோகத்தை மேற்கொள்வதற்கென அண்மையில் புதிய ஜெனரேற்றர் ஒன்று அங்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பொருத்தப்பட்டது.

**இதுவரை 5 இற்கும் மேற்பட்ட ஜெனரேற்றர்கள் எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவற்றின் மூலம் சீரான மின்விநியோகம் அங்கு மேற்கொள்ளப்படவில்லை.**

மின்விநியோகம் ஆரம்பமாகி ஒரு மாதம் கடப்பதற்குள் ஜெனரேற்றர் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நயினாதீவுப் பிரதேசம் கடந்த மூன்று தினங்களாக இருளில் மூழ்கிக் கிடக்கிறது. புதிய ஜெனரேற்றர் எடுத்து வரப்பட்டபோதும் அதன் முழுமையான பயன் நயினாதீவு மக்களுக்குக்கிடைக்கவில்லை என அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவுக்கான மின்விநியோகத்துக்கென இதுவரை 5 இற்கும் மேற்பட்ட ஜெனரேற்றர்கள் எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவற்றின் மூலம் சீரான மின்விநியோகம் அங்கு மேற்கொள்ளப்படவில்லை எனவும் மின்விநியோகம் ஆரம்பமாகிய ஒரு சில நாள்களிலேயே ஜெனரேற்றர்கள் பழுதடைகின்றன என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-7)

# வியாபாரிமூலையில் மீனவருக்கு மீன் ஏல விற்பனைச் சந்தை

## 15 லட்சம் ரூபா செலவில்

வடமராட்சி,ஜூலை28

வியாபாரிமூலை எரிஞ்ச அம்மன் கோயில் கடற்கரைப் பகுதியில் மீனவர்களுக்கான மீன் ஏலம்கூறும் சந்தை ஒன்று 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீன்களைச் சந்தைப்படுத்த போதிய வசதியின்மையால் திறந்த வெளியிலேயே வைத்துச் சந்தைப்படுத்துவதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

இந்தச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மீன்களை ஏலம் கூறிச் சந்தைப்படுத்தக் கடற்கடைப் பகுதியில் சந்தை ஒன்றைக் கட்டித் தருமாறு மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நீண்டகாலமாக விடுத்த கோரிக்கையை ஏற்று யாழ்.மாவட்ட மீன்பிடி, நீரியல் திணைக்களம் ஏலம் கூறும் சந்தையை நிர்மாணிக்க 15 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனையடுத்து ஏலம் கூறும் சந்தைக் கட்டட நிர்மாணப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மயிலிட்டிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (த-8)

# குடிதண்ணீர் குறித்த தகராறு முடிந்தது கோடாரி வெட்டில்

### நான்கு பேர் பொலிஸாரால் கைது

குடிதண்ணீர் பெறுவது தொடர்பாக இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கோடாரி வெட்டுடன் முடிந்த சம்பவம் கடந்த வாரம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்தவர்களும் ஏற்கனவே முகாமில் குடியிருந்தவர்களும் மோட்டார் பொருத்திக் குடிதண்ணீர் பெறுவது தொடர்பாக வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்த வாய்த்தர்க்கம் முற்றிக் கோடாரி வெட்டில் முடிந்தது.

இந்தச்சம்பவத்தில் தொடர்புடைய ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். கைது செய்யப்பட்ட நால்வரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார். (த-86)

# நிமலரூபன் படுகொலைக்கு கண்டனம் வலி.வடக்கு பிரதேச சபையில் தீர்மானம்

## எதிர்க்கட்சியினரின் எதிர்ப்புக்கும் மத்தியில் நிறைவேறியது.

யாழ்ப்பாணம்,ஜூலை 28

வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதியான எஸ்.நிமலரூபன் அடித்துப் படுகொலை செய்யப்பட்டதற்கு பலி.வடக்கு பிரதேச சபை கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான தீர்மானமும் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை சபை தவிசாளர் சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சபையின் துணைத்தவிசாளர் எஸ்.சஜீவனால் நிமலரூபனின் கொலைக்கு எதிரான தீர்மானமும் கொண்டுவரப்பட்டது. இதற்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினரான பா. உதயகுமார் கடும் எதிர்பார்ப்பை வெளியிட்டதுடன் தமது உறுப்பினர்கள் அறுவரும் இந்தத் தீர்மானத்தை எதிர்பார்ப்பதாக சபையில் தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினரான பா. உதயகுமார் கடும் எதிர்பார்ப்பை வெளியிட்டதுடன் தமது உறுப்பினர்கள் அறுவரும் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாக சபையில் தெரிவித்தார். எனினும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆதரித்ததுடன் உறுப்பினர் சி.ஹரிகரன் தீர்மானத்தை மும்மொழிய ம.சிவகுமரன் வழிமொழிந்தார்.

ஆளும் கட்சியின் 15 உறுப்பினர்களது ஆதரவுடன் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது. (16)

# வடமராட்சிக்கான மின் சீரானது

வடமராட்சி,ஜூலை28

வடமராட்சிப் பிரதேசத்துக்கான மின்சார விநியோகம் கடந்த சில தினங்களாகச் சீரடைந்துள்ளது.

கடந்த பல மாதங்களாக வீதி அகலிப்புதிருத்தவேலைக்காக மின்தடை என பத்திரிகைகளில் மின்தடை அறிவிப்புக்கள் வெளியானபோதும் அதற்கு மேலாக மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

அத்துடன் காலநேரமின்றித் தடைப்பட்டிருந்த மின்சாரம் தற்போது சீராகக் கிடைத்து வருவதையிட்டு மின்பாவனையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதேவேளை நாள்கணக்கில் மின்வெட்டு நடைமுறையில் இருந்ததால் அரச அலுவலகங்களில் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் பெறப்பட்டது. தற்போது அரச அலுவலகங்களில் ஜெனரேற்றர் சத்தம் ஓய்ந்துள்ளது. (த-8)

# கடும் வெப்பநிலையால் பயிர்ச் செய்கை பாதிப்பு

### தோட்டக் கிணறுகளில் நீர்மட்டம் குறைவு

குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். கடும் வெப்பத்தினால் தோட்டங்களில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

கிணறுகளில் நீர் மட்டம் வற்றியுள்ளமையால் பயிர்களுக்குப் போதியளவு நீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் காலை முதல் மாலை வரை கிணற்றில் நீர் ஊறும் வரை காத்திருந்து பயிர்களுக்கு நீர் பாய்ச்சி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடும் வெப்பம் காரணமாக பயிர்களும் வாடி வதங்கிக் காணப்படுகின்றன. கடந்த சில நாள்களாக வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுகிறது. வெப்பத்துக்கு ஈடு கொடுக்கக் கூடிய அளவில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்குக் கிணறுகளில் போதியளவு நீர் இல்லை. இதனால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வெப்பம் காரணமாக மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமையால் அவற்றின் விலைகள் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கடுமையான வெப்பத்தால் கால் நடைகளும் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றன. (த-17)

# குழு மோதலில் 4 பேர் காயம்

இரு குழுக்கள் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 24 ஆம் திகதி குப்பிளான் கற்கரைப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது. ஏழாலைப் பகுதியைச் சேர்ந்தவர்களும் குப்பிளான் பகுதியைச் சேர்ந்தவர்களும் முன்விரோதத்தால் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென இரு பகுதியினரிடையேயும் மோதல் ஏற்பட்டது.

இதன்போது கற்கள் மற்றும் தடி, பொல்லுகளைப் பயன்படுத்தி மோதிக் கொண்டதில் 4 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டனர். (த-86)

# பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைதான இரு இளைஞர்கள் நிரபராதிகள்

## விடுதலை செய்தது யாழ். மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அரசவிரோத செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2009ஆம் ஆண்டு பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இருவர், குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் நிரபராதிகளென யாழ். மேல் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த இருவர் மீதான வழக்குகளும் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டன.

சுழிபுரம் பொன்னாலைச் சந்தி, மூளாயைச் சேர்ந்த நாதன் என்று அழைக்கப்படும் பொன்னையா சிதம்பரநாதன் 2009 ஒக்ரோபர் 17ஆம் திகதி கொழும்பு பயங்கரவாதப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவருடையது என்று கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்கு எதிரான விசாரணை முன்னெடுக்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத காலப் பகுதியில் சாவகச்சேரியில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றதாக அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்றது. விசாரணையின் போது சந்தேக நபர் தானாக விரும்பி எந்தவித நிர்ப்பந்தத்துக்கும் உட்படுத்தப்படாத நிலையில் எழுதிக்கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என முடிவுக்கு வரமுடியாத நிலையில் மன்றினால் அது நிராகரிக்கப்பட்டது. இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக கடந்த மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே அவருக்கு எதிரான வேறு எந்த ஆதாரமும் இல்லாதமையால் உண்மை விளம்பல் விசாரணையின் பின்னர் அவர் நிரபராதியாக இனங்காணப்பட்டு மன்றினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

ம்ற்றையவரான முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த பாஸ்கரன் வனஜன் என்பவர் 2009ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி வவுனியா பயங்கரவாதப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

2007ஆம் ஆண்டு ஜனவரிக்கும் ஓகஸ்ட் மாதத்துக்கும் இடையிலான காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்து முகமாலை முன்னரங்க இராணுவக் காவலரண் மீது தாக்குதல் நடத்தினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபரது விசாரணை கடந்த வருடம் யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

விசாரணையின் போது சந்தேகநபர் சுயமாக வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எந்தவித நிர்ப்பந்தங்களுக்கும் உட்படாத நிலையில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரமுடியாத நிலையில் மன்றினால் கடந்தமாதம் 14ஆம் திகதி அது நிராகரிக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பின்னர் அவருக்கு எதிராக வேறுஎந்த ஆதாரமும் இல்லாதமையால் அவரை நிரபராதி என இனங்கண்ட நீதிமன்று நேற்றுமுன்தினம்விடுதலைசெய்தது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்கள் 16 பேர் சாவு

## அமர்நாத் யாத்திரையின்போது விபத்து

ஜம்மு, ஜூலை 28

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் அமர்நாத் யாத்திரை சென்றுவிட்டு திரும்பிய பக்தர்களுடன் வந்து கொண் டிருந்த வான் ஒன்று விபத்திற்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர்.


பக்தர்களைஏற்றிக் கொண்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்த இந்த வான், சம்பா மாவட்டத்தில் சாலையில் இருந்து தவறி கீழே இருந்த பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து குறித்துத் தகவல் அறிந்ததும் பொலிஸார் மற்றும் இராணுவத் தரப்பினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களை மீட்டனர். விபத்தில் படுகாயமடைந்தவர்கள் ஜம்மு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை கடந்த 14ஆம் திகதி இதேபோன்ற விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. இதில் 15 யாத்திரிகர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது.



பக்தர்களை ஏற்றிக்கொண்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்த இந்த வான், சம்பா மாவட்டத்தில் சாலையில் இருந்து தவறி கீழே இருந்த பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானது.

# மெட்ரோ ரயில் மேம்பாலம் சரிந்தது



சென்னை, ஜூலை 28

சென்னை வடபழனி நூறடிப் பாதையில் மெட்ரோ ரயில் மேம்பாலத்தின் ஒரு பகுதி நேற்றுமுன்தினம் சரிந்து விழுந்தது. இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை வடபழனி நூறடிப் பாதையில் மெட்ரோ ரயில் பணிகள் 2008ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன.

சென்னை கோயம்பேடு தொடக்கம் பறங்கிமலை வரை மெட்ரோ ரயில், மேம்பாலப் பாதையில் செல்கிறது. இதற்காக தூண்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்து, தண்டவாளங்கள் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் நடந்த பொருத்தப் பணியின்போது ஏற்பட்ட கோளாறு காரணமாக, பாலத்தில் இருந்த பெரிய இரும்புக் கம்பிகள் இருந்த ஒரு பகுதி சரிந்து விழுந்தது. இதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகளும், பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் விரைந்தனர்.

அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பஸ்ஸின் துவாரம் வழியே விழுந்து

## சிறுமி சுருதி உயிரிழந்த கோரம் குறித்து பலதரப்பட்ட அதிகாரிகளிடம் விசாரணை



பாடசாலை பஸ்ஸின் துவாரம் வழியாக விழுந்து சிறுமி சுருதி உயிரிழந்த சம்பவத்தை ஏன் கொலை வழக்காகப் பதிவு செய்யக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இக்பால் கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்போது, பஸ்ஸை ஆய்வு செய்யாமல் அதற்கு அனுமதி அளித்த போக்குவரத்துத்துறை ஆய்வாளர் பதவிநீக்கம் செய்யப்பட்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என தமிழக அரசு வழக்கறிஞர் விளக்கம் அளித்தார். குழந்தையை இழந்த பெற்றோருக்கு சியோன் பாடசாலை சார்பில் ரூ.50 ஆயிரத்தை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். அத்தோடு தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 லட்சம் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வழங்கப்படும் எனவும் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணையின்போது நீதிபதிகள் மேலும் கூறியதாவது:-

போக்குவரத்துத்துறை அதிகாரிகள் மீதான நடவடிக்கை வெறும் கண் துடைப்பாக இருக்கக் கூடாது. பாடசாலை வாகனங்கள் குறித்துப் புதிய விதிமுறைகளைத் தமிழக அரசு இன்னும் இரு வாரங்களில் உருவாக்க வேண்டும். அதில் தவறு செய்யும் அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யவழி முறைகள் இருக்க வேண்டும். புதிய விதி முறைகளைத் தமிழக அரசு உடனடியாகத் தாக்கல் செய்ய வேண்டும். தவறிழைத்த அதிகாரிகள் மீது சிவில் மற்றும் குற்றவியல் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமை நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலையின் போக்குவரத்து ஒழுங்கு படுத்துநர் என். விஜயன், பஸ் ஓட்டுநர் ப. சீமான், பஸ் உரிமையாளர் யோகேஸ்வரன், நடத்துநர் சண்முகம் ஆகியோரை பொலிஸார் கைதுசெய்தனர்.

## நீதித்துறையை மிரட்டுகிறார் மோடி

நடந்த தவறுக்கு மக்களிடம் மன்னிப்பு கேட்காமல், நீதித்துறையை மிரட்டிப் பார்க்கிறார் என்று காங்கிரஸ் கட்சியின் ஆலோசகர்களில் ஒருவரும் மத்திய அமைச்சருமான வீரப்ப மொய்லி நரேந்திர மோடிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002ல் குஜராத்தில் மதக்கலவரம் நடந்த போது, 100 க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது கலவரக்காரர்களுக்கு ஆதரவாளர் போல மதவாதியான நரேந்திர மோடி செயல்பட்டதாக அதிகாரிகள், காவல் துறையினர் மூலம் நிரூபிக்கப் பட்டதாகவும், தற்போது நடைபெறவிருக்கும் குஜராத் சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு, மோடி நிரபராதி போல நடித்து நாடகமாடுவதாகவும் வீரப்ப மொய்லி தெரிவித்துள்ளார்.

நடந்த தவறுகளுக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்பதை விடுத்து தூக்கில் தொங்கத் தயார் என்று நீதித்துறையை மிரட்டிப் பார்க்கிறார் என்றும் வீரப்ப மொய்லி மோடிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

## சோனியா – ஹசாரே குழுக்களிடையே மோதல்

லக்னோ, ஜூலை 28

உத்தரப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ்காரர்களுக்கும், அன்னா ஹசாரே குழுவினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

உத்தரப்பிரதேசம் லக்னோவில், தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணித் தொடங்கவிருப்பதால், அங்கு அடிக்கல் நட்டுத் தொடங்கி வைக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சென்றிருந்தார்.

இந்த நிலையில் சோனியா அடிக்கல் நடும் இடத்துக்குள் நுழைந்த அன்னா குழுவினர், சோனியாவை அவதூறாகப் பேசி கோஷமிட்டனர் எனவும் இதனால் காங்கிரஸ்காரர்கள்- அன்னா குழுவினருக்கு இடையில் மோதல் உருவானதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர் பொலிஸார் தலையிட்டு மோதலைத் தடுத்து நிறுத்தினர் எனவும் உத்தரப் பிரதேசத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புதுடெல்லி ஜந்தர்மந்திரில் அன்னா ஹசாரே குழுவினர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் பகுதிக்கு வந்த இளைஞர் காங்கிரஸைச் சார்ந்தவர்கள் நேற்று முன்தினம் கலவரத்தில் ஈடுபட்டனர் என்றும் தகவல் வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## வறுமையால் தற்கொலைக்கு முயற்சி

தென்காசி அருகே வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் ஒரு குடும்பமே தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளது. இதில் குடும்பத் தலைவி உயிரிழந்தார்.

இந்தக் குடும்பத்துக்கு வருமானம் போதாமையால் வெளியில் கடன் வாங்கி குடும்பச் செலவுகளைக் கவனித்து வந்த நிலையில், கடன்கொடுத்தவர்கள் கடனை திருப்பிக் கேட்டுத் தொல்லை கொடுத்தனர். இதனால் மனமுடைந்த குடும்பத் தலைவி நேற்றுக் காலை பாலில் விஷத்தைக் கலந்து பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் கொடுத்துவிட்டு தானும் குடித்துத் தற்கொலை செய்ய முயன்றார். இதனால் குடும்பத் தலைவி மட்டும் பரிதாபமாக உயிர் இழந்தார். உயிருக்குப் போராடிக் கொண் டிருந்த மற்றவர்களை தென்காசி மாவட்ட மருத்துவமனை காப்பாற்றியுள்ளது.

## அஸாமுக்குச் சென்ற நீதிபதியும் தாக்கப்பட்டார்

அஸாம், ஜூலை 28

அஸாம் மாநிலத்தில் இரு பிரிவினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள கலவரத்தைப் பார்வையிடச் சென்ற நீதிபதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள சம்பவம் மேலும் அந்த மாநிலத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அஸாம் மாநிலத்தில் போடா பழங்குடியினருக்கும் சிறுபான்மை இனத்தவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள கலவரம், அஸாமின் மேற்குப்பகுதி முழுவதும் பரவியுள்ளதால் 500க்கும் மேற்பட்ட கிராமங்கள் வன்முறைக் களமாக மாறியுள்ளன.

இந்த வன்முறையால் வீடுகளை இழந்த 2 லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 150 பாதுகாப்பு முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.


அசாமின் 3 மாவட்டங்களில் 500 கிராமங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகள் எரிக்கப்பட்டும், கடைகள் உள்ளிட்டவை அடித்து நொறுக்கப்பட்டும் கிடப்பதால் அந்தப்பகுதிகள் அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றன.

இந்த நிலையில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காகவும், முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு போதிய உதவிகளை வழங்கவும் மாவட்ட நீதிபதி பபுல் சாகியா சென்றார்.

அப்போது அவரின் மீது கலவரக்காரர்கள் திடீர் தாக்குதலை நடத்தினர். இதில் அவர் படுகாயமடைந்தார்.

நீதிபதி தாக்கப்பட்டது அந்த மாநிலத்தில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இது கலவர ஓட்டம்...



அசாம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் பழங்குடியினருக்கு இடையிலான கலவரத்தில் அந்த மாநிலத்தின் கலவரப் பிரியர்கள் மூர்க்கத்தனத்தைக் காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை.....



சோமாலிய கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்டு விடுதலையான வியாட்னாமியரான கலியோ சோவை அவரின் பெற்றோர் அழுது தழுவுகின்றனர்.

## சுரங்கத்தில் விபத்து

### 7 பேரின் சடலங்கள் மீட்பு

டோரியோன், ஜூலை 28

வடக்கு மெக்ஸிகோவில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட வெடிவிபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

கூட்டு வாயுக்களால் வெடி விபத்து ஏற்பட்டது. இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் அதிகாரி பிரான்சிஸ்கோ மார்ட்டின்ஸ் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்கள் அனைவருமே 22 முதல் 39 வயதுக்குட்பட்ட ஆண்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2011ஆம் ஆண்டு அந்த நாட்டின் மனித உரிமைகள் ஆணையம், சுரங்கங்கள் மோசமான நிலையில் இருப்பதாகக் குற்றம் சாட்டி இருந்தது.

## கப்பலில் ரசாயனக் கலன் வெடிப்பு



கோலாலம்பூர், ஜூலை 28

மலேசியாவில் கப்பல் ஒன்றில் உள்ள இரசாயனக் கலன் வெடித்து விபத்துக்குள்ளானதில் கப்பல் பணியாளர் ஒருவர் உயிரிழந்தார். மலேசிய சர்வதேசக் கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான பங்கா அல்புனியா-3 கப்பலில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்டது.

விபத்தில் உயிரிழந்தவர் அஸ்மி பஹ்ருதீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலும் 4 பேரைக் காணவில்லை. கப்பலில் மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த கப்பல் பணியாளர்கள் 29 பேர் பயணம் செய்துள்ளனர். இவர்களில் 24 பேர் கவனமாக மீட்கப்பட்டனர்.

தீயணைக்கும் பணியில் தீயணைப்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று மலேசிய கப்பல் நிறுவனம் தெரிவித்தது.

## ஆஸி. பிரதமருக்கு ரவைகளை அனுப்பிய முதியவருக்கு சிறை

மெல்பேர்ன், ஜூலை 28

ஆஸ்திரேலியா கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டு பிரதமருக்குத் துப்பாக்கி ரவைகளை அனுப்பிய முதியவருக்கு இரண்டரை ஆண்டு சிறைத்தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிரிஸ்பேனைச் சேர்ந்தவர் ஜோன் கில்பர்ட். இவர் குடியேற்றம், கல்வி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான அரசின் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்ததோடு தனது எதிர்ப்பைக் காட்ட பிரதமர் ஜூலியா கிலார்ட் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுக்குத் துப்பாக்கி ரவைகளைப் பொதியில் அனுப்பினார்.

இது தவிர முன்னணி வங்கியாளர்களுக்கும் இவர் ரவைகளை அனுப்பினார். 2007ஆம் ஆண்டு தனது எதிர்ப்பைத் தொடங்கிய ஜோன் கில்பர்ட், தொடர்ந்து பல கடிதங்களை அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வந்தார்.

முன்னாள் பிரதமர் கெவின் ரூத் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் டோனி அபோட்டுக்கும் இவர் கடிதங்களையும், ரவைகளையும் அனுப்பியுள்ளார்.

சில பொதிகளில் ரவைகள் மட்டுமன்றி, டெட்டனேட்டர்களையும் இவர் அனுப்பியுள்ளார். இவர் அனுப்பிய ஒரு கடிதத்தில் ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டவர்கள் அனைவரையும் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்ற, குடிதண்ணீரில் விஷம் கலக்கப் போவதாக எச்சரித்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, கில்பர்ட்டின் வயதைக் கருத்தில் கொண்டு, குறைந்த அளவு சிறைத் தண்டனை விதிப்பதாகத் தெரிவித்தார்.

# மீண்டும் மூடப்பட்டது பாதை

## நேட்டோ வாகனம் மீது பாகிஸ்தானில் தாக்குதல்

இஸ்லாமாபாத், ஜூலை 28

பாகிஸ்தானில் இருந்து ஆப்கானிஸ்தானுக்குப் பொருள்களைக் கொண்டு செல்ல திறக்கப்பட்ட முக்கிய பாதையில் சென்ற நேட்டோ வாகனம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதால், மீண்டும் அந்தப் பாதை மூடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ ராணுவத்துக்குத் தேவையான எரிபொருள் உள்ளிட்ட பொருள்கள் பாகிஸ்தானில் இருந்து டோர்காம் எனும் முக்கிய பாதை வழியாகக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த நிலையில், பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் எனக் கூறி, நேட்டோ கடந்த நவம்பர் மாதம் தாக்குதல் நடத்தியது. இதில், 24 பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, நேட்டோவுக்காகப் பொருள்கள் கொண்டு செல்லும் பாதையைப் பாகிஸ்தான் மூடியது. இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்கா மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து, பாதை திறக்கப்பட்டது. இதன் வழியாக 100-க்கும் மேற்பட்ட வாகனங்கள் சென்றன.



மேலும், நேட்டோவுக்குப் பொருள்கள் கொண்டு செல்வது தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட புதிய ஒப்பந்தத்துக்கு, பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் தலைமையில் கடந்த புதன் கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் 2014ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுடன் அமெரிக்கா செய்து கொண்ட ஒப்பந்தத்தில், ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள மற்ற நாடுகளும் தங்களை இணைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், நேட்டோ ராணுவத்துக்கு பொருள்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது, கைபர் பழங்குடியினர் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் வாகனச் சாரதி கொல்லப்பட்டார். அவரது உதவியாளர் காயமடைந்தார்.

கடந்த 7 மாதங்களுக்குப் பின், நேட்டோ ராணுவத்தினர் செல்ல அனுமதிக்கப்பட்ட பின், நடத்தப்பட்ட முதல் தாக்குதல் இது. இதையடுத்து, இந்தப் பாதை கடந்த புதன்கிழமை இரவு மூடப்பட்டது.

வாகனங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தபின் மீண்டும் திறக்க முடிவு செய்யப்படும் என்று வெளிநாட்டு அலுவலக செய்தித் தொடர்பாளர் மொஸாம் கான் தெரிவித்தார்.

## பொப் பாடகர் மைக்கல் ஜாக்ஸனின் பிள்ளைகளுக்குப் புதிய பாதுகாவலர்



அமெரிக்காவின் பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்ஸனின் பிள்ளைகளுக்குப் புதிய பாதுகாவலர் ஒருவரை லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் நியமித்துள்ளது.

மைக்கல் ஜாக்ஸனின் சகோதரர்களில் ஒருவரான ரினோ ஜாக்ஸன் என்பவரே பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மைக்கல் ஜாக்ஸன் 2009ஆம் ஆண்டு உயிரிழந்த பின்னர், பிள்ளைகளின் பாதுகாவலராக அவர்களின் பாட்டியான கத்தரின் ஜாக்ஸன் செயற்பட்டு வந்திருந்தார்.

எனினும் கத்தரின் ஜாக்ஸன் குடும்பத்தினரின் வீட்டில் இருந்து காணாமற் போனமை தொடர்பான தகவல்கள் வெளியானதை அடுத்து நீதிமன்றம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஜாக்ஸனின் குடும்பத்தில் பிளவுகள் ஏற்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் அண்மைக்காலமாக வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சீன அரசியல் கட்சித் தலைவரின் மனைவி மீது கொலைக்குற்றச்சாட்டு

பீஜிங், ஜூலை 28

சீனாவின் பிரபல அரசியல் தலைவர் போ சிலாயினின் மனைவி மற்றும் மகன் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் சோங்குங் பகுதித் தலைவராக இருந்தவர் போ சிலாய்.

இவரது மனைவி கைலாய். பிரிட்டனைச் சேர்ந்த வர்த்தகர் நீல் ஹேவுட்டுக்கும், போ சிலாயினின் மகன் சாங் சியாவ் ஜூனுக்கும் இடையே தொழில் ரீதியாகக் கருத்து வேறுபாடு இருந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி, சோங்குங் பகுதியில் உள்ள விடுதியில் நீல் ஹேவுட் இறந்து கிடந்தார். அதிகமாக மது அருந்தியதால் நீல் ஹேவுட் இறந்தார் எனக் கூறப்பட்டது.

ஆனால், கடந்த ஏப்ரல் மாதம் நடந்த இறுதி விசாரணையில், போ சிலாயினின் மனைவி கைலாயும், மகன் சாங்கும் சேர்ந்து, நீல் ஹேவுட்டை விஷம் வைத்துக் கொன்றுள்ளனர் என்பது தெரியவந்தது.

இது தொடர்பாகத் தாயும் மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டது தொடர்பாக, கடந்த மார்ச் மாதம் போ சிலாய் முக்கிய பதவியிலிருந்து விலக்கப்பட்டார். தற்போது மனைவி மற்றும் மகன் மீதான கொலைக் குற்றச்சாட்டு அவருக்கு மேலும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

## பிலிப்பைன்ஸில் கலவரம்

### காவுகொள்ளப்பட்டனர் 11 பேர்

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவின் தெற்குப் பகுதியில் உள்ள தீவில் நிகழ்ந்த வகுப்புக் கலவரத்தில் 7 ராணுவத்தினர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் 3 ராணுவத்தினர், 2 ஊடுருவல்காரர்கள் காயமடைந்தனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாசிலான் தீவில் ராணுவத்தினருக்கும், முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இடையே கடுமையான தாக்குதல் நடைபெற்று வருகின்றது எனக் கூறப்படுகிறது.

இந்தத் தீவு முழுவதும் அடர்ந்த வனப் பகுதியாக இருப்பதால், ராணுவத்தினரால் தீவிரவாதிகளைக் கண்டுபிடித்துத் தேடுதல் வேட்டை நடத்துவது சிரமமாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பாசிலான் தீவில் ராணுவத்தினருக்கும், முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இடையே கடுமையான தாக்குதல் நடைபெற்று வருகின்றது**

முஸ்லிம் பழமைவாதிகள் அபு சயப் எனும் பெயரில் செயல்படுகின்றனர். இந்தக் குழுவினருக்கு அல்-குவைதா இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிலிப்பைன்ஸில் அபு சயப் குழு 1990ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இந்த இயக்கத்துக்கு நிதி உதவி அளித்தவர் ஒசாமா பின்லேடன் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவின் பாரம்பரிய நகர் சுற்றிவளைப்பு



டமாஸ்கஸ், ஜூலை 28

சிரியாவின் பாரம்பரிய நகரான, அலெப்போவை அரசு படைகள் சுற்றி வளைத்துள்ளன. சிரியாவில், ஜனாதிபதி பஷர் அல் அசாத்தைப் பதவி விலகக்கோரி, கிளர்ச்சியாளர்கள், கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து போராடி வருகின்றனர்.

போராட்டக்காரர்களை ஒடுக்க, இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில், இது வரை, 19,106 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் டமஸ்கஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், ராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே, தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

போராட்டக்காரர்களைக் கொன்று குவிக்கும் சிரியா அரசு மீது, பொருளாதார தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா. பாதுகாப்புச் சபையில், கடந்த வாரம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்தத் தீர்மானத்தை, ரஷ்யாவும், சீனாவும் ஏற்கவில்லை. சிரியாவின் எல்லைப் பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் கடந்த வாரம், 21 சிரிய ராணுவத்தினரைச் சுட்டுக் கொன்றனர்.

ராணுவத்துக்கு எதிராக, 'எரிமலை' என்ற பெயரில் போராட்டத்தை நடத்தி வருகின்றனர் எனவும், தங்கள் மீது, இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க, அரசுபடைகள் முயற்சிக்கின்றனர் எனவும், கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கம் உள்ள பகுதிகளை நோக்கி, இரசாயன ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதாக வந்த தகவலின்படி, ரஷ்யாவும் அமெரிக்காவும், 'போராட்டக்காரர்கள் மீது, இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது' என, சிரிய அரசை எச்சரித்தன.

சிரியாவின் பாரம்பரிய நகரமாக, யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட அலெப்போ நகரத்தைக் கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசப்படுத்தியுள்ளனர். இங்கிருந்து அவர்களை விரட்டியடிக்க, சிரிய ராணுவம் இந்த நகரைச் சுற்றி வளைத்துள்ளது. இந்த நகரில் ஏற்கனவே, 2 ஆயிரம் கிளர்ச்சியாளர்கள், தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இனி வரும் நாள்களில் இந்த நகரை மீட்பதற்கானத் தாக்குதல்கள் தீவிரமாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# மியன்மாரைத் தாக்குவோம் தலிபான்கள் மிரட்டல்

மியன்மாருடன் பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் உறவுகளைத் துண்டிக்காவிடில் மியன்மார் மக்களைத் தாக்குவோம் என்று தலிபான் திவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள மியன்மார் தூதரகம் மூடப்பட வேண்டும். மியன்மார் மக்களைத் தாக்குவது மட்டுமல்லாமல் அவர்களுடன் உறவு கொண்டாடும் பாகிஸ்தானியரையும் விட்டு வைக்க மாட்டோம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட தெஹ்ரிக்- இ-தலிபான் தீவிரவாத இயக்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம்களின் மீது நடைபெற்று வரும் தாக்குதலுக்குப் பதிலடி தருவோம் என்றும் தெரிவித்துள்ளது. மியன்மாரில் உள்ள முஸ்லிம்களுக்கு நண்பனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளவே தலிபான் தீவிரவாத இயக்கம் இந்த மிரட்டல் விடுத்ததாகக் கருதப்படுகிறது. எனினும் மிரட்டல் விடுத்ததுபோல் தலிபான்களால் தாக்குதல் நடத்த முடியுமா என்று கேள்வி எழுப்பியுள்ளனர் அரசியல் நோக்கர்கள்.

தலிபான்களின் இந்த மிரட்டல் குறித்து இஸ்லாமாபாத்தில் உள்ள மியன்மார் தூதரகம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

மியன்மாரில் புத்த மதத்தினர் மற்றும் ராணுவத்தினர் முஸ்லிம்களைத் துன்புறுத்தி வருகின்றனர் என்றும் முஸ்லிம்களின் சொத்துகளையும் பறிமுதல் செய்கின்றனர் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே, தலிபான் தீவிரவாதிகள் இந்த மிரட்டலை விடுத்த தாகத் தெரிகின்றது.

# தாய்லாந்து மக்கள் 92 பேருக்கு சிறை

**மியன்மாரின் தென்பகுதியில் ஜூலை மாத முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையொன்றின்போது மேற்படி தாய்லாந்துப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.**

மியன்மாருக்குள் சட்ட விரோதமாக நுழைந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தாய்லாந்துப் பிரஜைகள் 92 பேருக்கு மியன்மார் நீதிமன்றம் தலா மூன்றரை வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தனது பிரஜைகளுக்கு இந்தத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை தாய்லாந்து வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வது அல்லது வேறு எவ்வாறு தண்டனையைக் குறைப்பது என்பது தொடர்பாக நாம் ஆராய்வோம் என தாய்லாந்து வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தானி தோங்பக்டி கூறியுள்ளார்.

மியன்மாரின் தென் பகுதியில் ஜூலை மாத முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையொன்றின்போது மேற்படி தாய்லாந்துப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் 1500 ஏக்கரில் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்வற்கு முனைந்ததாக மியன்மார் அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இவர்களில் சிலரிடம் தன்னியக்க துப்பாக்கிகள், கிரனேற்றுகள் என்பன காணப்பட்டன என்றும், சிலர் கஞ்சா வளர்ப்பதற்கு முயற்சித்ததனர் என்றும் மியன்மார் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விவகாரத்தால் இது வரை இரு தரப்பு உறவில் பாதிப்பு ஏற்படவில்லை. மியன்மார் ஜனாதிபதி தியென் செய்ன் கடந்த வாரம் தாய் லாந்துக்கு மூன்றுநாள் பயணமொன்றை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கி வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

அமெரிக்க மாநிலமான கொலராடோவில் நடத்தப்பட்ட படுகொலைகளைத் தொடர்ந்து துப்பாக்கி வன்முறைகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியாகத் துப்பாக்கி வன்முறைகளைக் குறைப்பது குறித்து அனைத்து அரசியல் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவதாக பராக் ஒபாமா கூறியுள்ளார்.

கொலராடோ மாநிலத்தின் அரோரா என்ற பகுதியிலுள்ள திரையரங்கில் இளைஞர் ஒருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் கொல்லப்பட்டதுடன், 58 பேர் காயமடைந்திருந்தனர். இதனையடுத்து கொலராடோ மாநிலத்துக்குப் பயணம் மேற்கொண்ட ஒபாமா இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்திருந்தார்.


## வீடு விற்பனைக்கு

பீச்றோட் குருநகரில் சகல வசதிகளும் கொண்ட மேல்வீடு ஒன்றும், தனிவீடு ஒன்றும் ஒரே காணியில் விற்பனைக்குண்டு. தரகர் தேவை யில்லை

தொடர்புகளுக்கு : 021 222 3248, 021 222 7299

(20735)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

மீசாலை, அல்லாரை வீதி, J/318 கிராமசேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0779711972

(சி/1739)(6-7-2)

## வியாபார நிறுவனங்கள் அமைப்பதற்கு பொருத்தமான காணி வாடகைக்கு / குத்தகைக்கு

சாவகச்சேரி மத்திய பகுதியில் A 9 பிரதான வீதி செலான் வங்கி, பிரதேச செயலகம், கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதான ஸ்தாபனங்கள் அடங்கிய எல்லைப் பகுதியில் 5 பரப்பு (13 ஆயிரம் சதுர அடி) காணி குத்தகைக்கு / வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 744 1863, 077 154 2137, 077 548 9773

(20955) (45.6.9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 . 12 . 1954

உதிர்வு 28 . 06 . 2012

அமரர்

செல்லத்துரை தருமராசா (ராசு)

அன்பின் பிறப்பிடமே பண்பின்
உறைவிடமே
அறிவின் சிகரமே
மாதம் ஒன்று கடந்தாலும்
மாறாது எம் துயரம்
இப்புவியில் உம்மை நாம்
இழந்த துயரை ஈடு செய்ய முடியாமல்
தவிக்கின்றோம் இன்றுவரை

பிரிவால் வாடும் குடும்பத்தினர்

நெல்லொருபாதி பிள்ளையார் கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில்

(20620)(5-6-7)

## விற்பனைக்கு

- CANON-MARK II 5D
- PHOTO CAMERA
- CANON XF 100-VIDEO CAMERA FULL -HD
- VIDEO EDITING KART CANOPUS, DV-RAPTOR
- PINNACLE DC 1000

தொடர்பு: 071 590 4492

(20977)(5-6-7)

## English Personal Classes

ஆசிரியர் V.சசி (M.A)

O/L,A/L பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வெளிநாடு செல்வோருக்கான ஆங்கில வகுப்புக்கள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

உரும்பிராய், மானிப்பாய், கோண்டாவில், இணுவில், சுன்னாகம், உடுவில் பிரதேசங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 229 9944,077 326 4761

(2nd Cross Lane, Maruthanarmadam)

(20964)(5-6-7)

## விற்பனைக்கு

35 அடி நீளமான புதிய படகு விற்பனைக்குண்டு.

Fiber Glass Multy Day Dang Boat Compass, 15 பிரிவு வலை உள்ளடங்கல்

தொடர்புகளுக்கு : T. Kulasingam (வடமராட்சி) 077 5436845

(20830)(6-7-8)

## வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்திக்கருகே சகல வசதிகளுடன் வதியுமிடம் அறைவீடு வாடகைக்குண்டு. மதுப்பழக்கம் [illegible]

[illegible]

தொடர்பு: 077 347 1839

(20980) (5.6.7)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவு நாள்

மண்மகிழ 08 ★ 05 ★ 1937



மண்நெகிழ 08 ★ 08 ★ 2011

அமரர் நாகேஸ் திருமேனி

அன்புத் தெய்வமே ஐயா!
ஒவ்வொரு நாளும் பார்க்கும் உன் முகம்
பார்க்காது உள்ளம் வாடுதய்யா!
இனி எங்கு காண்போம்
என்ன சொல்லி அழைப்போம்
வார்த்தை எதுவும் இல்லை
எம்மை அன்போடு அரவணைத்த ஐயாவே!
தேற்றுவார் யாருமின்றி அழுகின்றோம்
எம் விழிகளெல்லாம் உம்மைத் தேடுகின்றன
ஆனால் உம்மை காணமுடியவில்லையே!
எம்மோடு வாழ்ந்த காலம் நனவாகிப் போனாலும்
எம் மனதில் உங்கள் முகம் எந்நாளும் காட்சிதரும்.

இன்று (28.07.2012) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விவசிபாடசாலை லேன், கதிரிப்பாய், அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(20969) (40.6.7)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிக்குகளின் அடாவடிகள் நிறுத்தப்பட வேண்டும்

## குருநாகல் தெதுரு ஓயாகம பள்ளிவாசலில் நடந்த அட்டகாசம் குறித்து பொது ஊழியர் சங்கம் கண்டனம்

அம்பாறை, ஜூலை 28

''மற்றவர்களின் மத சுதந்திரங்களில் தலையிட்டு அடாவடித்தனம் புரிந்து வரும் பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளுக்கு அரசு உரிய வகையில் நீதி நடவடிக்கை எடுத்து முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.''

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த தெதுரு ஓயாகம அல்.அக்ரம் பள்ளி வாசலின் எல்லைக்குள் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் புகுந்த குழுவினரின் அட்டகாசம் தொடர்பாக சங்கம் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவரான எஸ்.லோகநாதன் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் -

''இலங்கையில் சிறுபான்மையினராக வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் மத சுதந்திரத்தில் கூட பௌத்த பேரினவாதம் கைவைத்து அடாவடித்தனம் புரியும் சம்பவங்கள் தொடர் கதையாக இடம்பெற்று வருகின்றன.


குறிப்பாக முஸ்லிம் தலைமைகளெனக் கூறிக்கொள்வோரும், முஸ்லிம் மக்களின் குரல்களெனத் தம்பட்டமடிக்கும் கட்சிகளும் இன்றைய அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் போதே முஸ்லிம்களின் பழைமை வாய்ந்த பள்ளிவாசல்களைத் தாக்கும், மத விழுமியங்களைத் தடை செய்யும் பௌத்த பேரின வாத இழி செயல்கள் நாட்டின் பலபாகங்களிலும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

தம்புள்ள, தெஹிவளை என அண்மைக்காலமாக இந்த நிலை தொடர்ந்து வந்து, இறுதியாக சில தினங்களுக்கு முன் தெதுருஓயகம அல் அக்ரம் பள்ளிவாசலுக்குள் நுழைந்து பௌத்த பேரினவாதம் தன் கோர முகத்தைக் காட்டியுள்ளது.

புனித நோன்பு காலத்தில் இடம் பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் பிரவேசித்தோர் முஸ்லிம்களின் மதக் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததுடன் பிரித் ஓதியும் இழி செயலில் ஈடுபட்டுள்ளனர்.

அரசு வெட்கப்பட வேண்டிய விடயமிது. உடனடியாக தலைமைதாங்கிச் சென்ற பிக்குவைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவதுடன் இத்தகைய மூர்க்கத்தனமான சம்பவங்கள் இனிமேலும் இடம் பெறாதவாறு அரசு கண்டிப்பான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். -என்றுஅதில் கூறப்பட்டுள்ளது. (ஒ-30)

## பிள்ளையானின் 'கட்அவுட்' மட்டக்களப்பில் அவுட்



மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்துக்கருகில் நிறுவப்பட்டிருந்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் பிரமாண்டமான 'கட் அவுட்டை' அகற்றும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மட்டக்களப்புக்குச் சென்ற பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முஹம்மத், தான் வரும் வழியில் இந்த 'கட்அவுட்டை' அவதானித்ததாகவும் இது தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது என்றும் மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் அவற்றை உடனடியாக அகற்ற பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். போஸ்டர்கள் பிரசுரங்கள் குறித்த 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (வ)

## காத்தான்குடி கடற்கரையில் சுற்றுலாப் பயணியின் கைப்பை இனந்தெரியாதோரால் பறிமுதல்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி கடற்கரையை அண்டிய பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணியொருவரின் கைப்பை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இனந்தெரியாதோரால் பறிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளான கணவன், மனைவி ஆகிய இருவரும் கடற்கரையிலிருந்து அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் இவர்களின் கைப்பையைப் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்தக் கைப்பையினுள் 650 யூரோ நாணயம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன இருந்துள்ளன.

இதுதொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணை மேற் கொண்டுவருகின்றனர். (வ-31)

## பெரியபோரதீவு காளிகோயில் சூழலில் 'சூழலைப் பாதுகாப்போம்' செயற்திட்ட சிரமதானம்



'சூழலைப் பாதுகாப்போம், டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவோம்' எனும் செயல் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பெரியபோரதீவில் உள்ள காளிகோயிலைச் சூழவுள்ள பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிரமதானப் பணி முன்னெடுக் கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி பொலிஸாரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சிரமதானப் பணியில் கிராம மக்கள், கிராம சேவகர், மக்கள் தொடர்பாடல் பொறுப்பதிகாரி துஷார உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மக்கள் சந்திப்பொன்றும் இதன் போது இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில், மது ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு, நடமாடும் சேவை, மருத்துவமுகாம், கிராமத்தின் தேவைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. (வ)

## பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகியமை குறித்து விசாரணை

கம்பஹா கல்வி வலய பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகளின் வினாப்பத்திரங்கள் முன்கூட்டியே வெளியானதாகக் கிடைத்த முறைப்பாடு குறித்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக கம்பஹா வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.கே. மல்லவாராச்சி தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு வினாப்பத்திரங்கள் கிடைப்பதற்கு முன்னரே இந்த வினாப்பத்திரங்கள் வெளியானதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் இதுகுறித்து எதிர்வரும் திங்கட்கிழமை இறுதித்தீர்மானம் மேற் கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று நடைபெறவிருந்த விஞ்ஞான பாட பரீட்சை வினாப்பத்திரத்துக்குச் சமமான வினாப்பத்திரமொன்றும் முன்கூட்டியே வெளியானதாக தகவல் கிடைத்துள்ளது என்று மேலும் குறிப்பிட்டார். (வ)

## மூதூர் கடலில் சிக்கிய மூவரின் சடலங்கள் மீட்பு



திருகோணமலை, மூதூர் ஹபீப் நகர் கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது, சுழியில் அகப்பட்டு காணாமற்போன இருவரின் சடலங்களும் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டன.

மூதூர் ஜாயா வீதியைச் சேர்ந்த நஸீர் முஹம்மது இர்பான் (வயது 19), லாபீர்க றிஜான்(வயது-19) ஆகிய இருவரின் சடலங்களே மீட்கப் பட்டன. நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கடலில் குளித்துக்கொண்டிருந்த 3 பேர் சுழியில் அகப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்த அதேவேளை, மற்றும் இருவர் காணாமற் போயிருந்தனர். காணாமற் போன இருவரையும் தேடும் நடவடிக்கையில் கடற்படையினருடன் இணைந்து மீனவர்களும் ஈடுபட்டுவந்த நிலையில் அந்த இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (வ-40)

## பிளாஸ்ரிக் கூடை பயன்படுத்தாத நால்வருக்கு அபராதம்

பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தாது மரக்கறி கொண்டு சென்ற குற்றத்துக்காக நால்வருக்கு தலா ஆறாயிரம் ரூபா வீதம் 24 ஆயிரம் ரூபாவை அபராதமாக நுவரெலிய நீதிமன்ற நீதிவான் விதித்து தீர்ப்பளித்தார்.

லொறிகளில் மரக்கறிகள் பிளாஸ்ரிக் கூடைகள் இன்றி கொண்டு சென்ற 6 லொறி சாரதிகளுக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

நுவரெலிய மாவட்ட செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க நுகர்வோர் சேவை அதிகார சபையின் நுவரெலியா அலுவலக உத்தியோகத்தர்கள் பரிசோதனைகளில் ஈடுபட்டனர். இதன்போது மரக்கறி கொண்டு செல்ல பிளாஸ்ரிக் கூடைகள் பயன்படுத்தாத இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

## புல்மோட்டை ஜின்னாபுரத்துக்கு தனி கிராம சேவகர் பிரிவு இல்லை

### விசனம் தெரிவிக்கின்றனர் கிராம மக்கள்

திருகோணமலை,ஜூலை28

புல்மோட்டை, ஜின்னாபுரக் கிராமத்துக்கு தனியான கிராம சேவையாளர் பிரிவொன்று இல்லாததனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களுக்குள்ளாகி வருவதாகவும் கூறுகின்றார்கள்.


புல்மோட்டைப் பகுதியில் 3,150 குடும்பங்களும் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளும் உள்ளன. அரசின் திட்டத்துக்கு அமைவாக 500 குடும்பங்களுக்கு

**புல்மோட்டைப் பகுதியில் 3,150 குடும்பங்களும் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளும் உள்ளன. அரசின் திட்டத்துக்கு அமைவாக 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவையாளர் பிரிவு அமைதல் வேண்டும்.**

ஒரு கிராம சேவையாளர் பிரிவு அமைதல் வேண்டும். அத்துடன் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட விசாலமான பகுதிகளுக்கும் கிராம சேவகர் பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் 356 குடும்பங்களைக் கொண்டதும் 19 கிலோ மீற்றர் பரப்பளவுள்ள பல சிறு கிராமங்களைக் கொண்ட புல்மோட்டை, ஜின்னாபுரம் கிராமத்துக்கு ஓர் தனியான கிராம சேவகர் பிரிவு அமைக்கப்படல் வேண்டும். புதிதாக கிராம சேவகர் பிரிவுகளை அமைத்தல் சம்பந்தமாக 2010 ஆம் ஆண்டு அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவுக்கு மேற்படி விடயம் சம்பந்தமாக முறையீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்லூரானின் 4 ஆம் நாள் வீதி உலாக் காட்சி

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**



முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37,சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 221 9016

# இரணைமடுவிலிருந்து குடாநாட்டுக்கு நிலத்தடி குடிதண்ணீர் குழாய்கள் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

இரணைமடு குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு நிலத்தடிக் குழாய் மூலம் கொண்டு வரப்படும் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு முன்னேற்பாடாக, பிரதான வீதிகளின் குறுக்கே நிலத்தடி குழாய்கள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது குடாநாட்டில் வீதிப் புனரமைப்புச் செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதால் இவ்வீதி புனரமைப்புக்கு முன்பாகவே இவ் நிலத்தடி குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் இந்த இரணைமடு குடிதண்ணீர் விநியோகத்துக்கான பெரிய அளவிலான குழாய்கள் நிலத்தடியில் அமைக்கப்பட்டு வருகின்றன.**

தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்பு சபையின் ஏற்பாட்டில் இந்த இரணைமடு குடிதண்ணீர் விநியோகத்துக்கான பெரிய அளவிலான குழாய்கள் நிலத்தடியில் அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஏ-9 வீதியில் இவ் நிலத்தடிக்குழாய்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

வீதிகளின் கரையோரப் பக்கமாகவும் வீதிகளை ஊடறுத்தும் மிகவும் தாழ்வாக இப்பெரிய சிமெந்திலான குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (3-17)




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நின்றனர்



நாடியே பக்தர்கள் நல்லை வந்தனர்
தேடியே கந்தனைத் துதிக்க வந்தனர்
கூடியே பஜனை செய்து கொண்டனர்
பாடியே துதித்து பரவசம் அடைந்தனர்
ஆடியே ஆறுமுகன்
எழுந்தருளும் கோலம் கண்டனர்
ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நின்றனர்.

**சொ.தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு**

## பேரருள் தருவாய் பெருமானே



வேதனைகள் விலகவில்லை
வேலவனே அறியாயோ
வளராதோ மலராதோ ஆறுதலிங்கு
சோதனைகள் சேர்வதனை
சேந்தா நீ அறியாயோ
சாட்சி சொல்ல வாராதோ சத்தியமிங்கு
நாதனே முருகா
நல்லூரிலுன் கொடியேற்றம்
நன்றே கண்டின்று வேண்டுகின்றோம்
பாதகங்கள் இறந்திடவும்
பண்பமைதி பிறந்திடவும்
பேரருள் தருவாய் பெருமானே!



**குளப்பிட்டி**
**க.அருமைநாயகம்**

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

**JAFFNA ELECTRICALS**
94 (6), STANLEY ROAD, JAFFNA.
T.P.021 222 2353, Fax. 021 222 4302

## தெய்வீக இசையரங்கில்...

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஐந்தாம் நாள் நிகழ்வு மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் எஸ்.சுதாகரன், எ.ஜெயராமன், ஆர்.சிவராமன், என்.சதீஸ்குமார் ஆகியோர் இணைந்து நடத்தும் திருமுறைக் கச்சேரி இடம்பெறும்.

நாவலர் மணி மண்டபத்தில் நக்கீரரும் திருமுருகாற்றுப் படையும் எனும் தலைப்பில் க.ஈஸ்வரன் சொற்பொழிவாற்றுவார்.




சாவகச்சேரி, ஜூலை 28

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்தப் பெருந்திருவிழாவில் சப்பரத் திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7மணிக்கும் தேர்த்திருவிழா மறுநாள் காலை 8மணிக்கும் தீர்த்தத் திருவிழா ஓகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கும் ஆலய பிரதம குரு சி. கிருபாகரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

* * *

சாவகச்சேரி, ஜூலை 28

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமானது. தொடர்ந்து ஆலய பிரதமகுரு கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையிலும் நடைபெற்று வரும் திருவிழாவில் சப்பரத் திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமையும், தீர்த்தத் திருவிழா ஓகஸ்ட் முதலாம் திகதி மு.ப 10 மணிக்கும் நடைபெறவுள்ளது. (3)

## திருமுறைப் பெருவிழா

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருமுறைப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை 8 மணியளவில் கந்தர்மடம், அரசடி வீதி செல்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், நாயன்மார் நால்வர், திருமுறைச் சுவடிகளுக்கும் சோடசோபசார பூசை, பண்ணிசை என்பன நடைபெறும். இந்த நிகழ்வில் தேவாரப் பண்ணிசைப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட இருக்கிறது என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (3)

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,ஜூலை28

மல்லாகம்மாவட்டநீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிளும், சைக்கிள்களும், வேறு சில பொருள்களும் ஓகஸ்ட் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பொருள்கள் அன்றைய தினம் அரைமணி நேரத்துக்கு முன்னதாக பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன. ஏலத்தில் வாங்கப்படும் பொருள்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்துவதுடன், பொருள்களை ஏலம் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டும் எனவும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (3)

## பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஏழாலை உத்தமன் சிலையடியில் இளம்பெண்ணை வாகனத்தால் மோதி அவரது மரணத்துக்கு காரணம் என கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை இரண்டரை இலட்சம் ரூபா பிணையிலும், இரு ஆள் பிணையிலும் செல்வதற்கு மல்லாகம் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

அத்துடன் சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று கையொப்பம் இட வேண்டும் எனவும் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டுள்ளது. (3-86)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

நல்லூர் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான நூலக வலுவூட்டல் நிகழ்வுகளில் தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் து. துரைமணி தலைமையில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வியங்காடு அ.த.க. பாடசாலை அதிபர் க. இரவிச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கோண்டாவில் தனியார் கல்வி நிலைய இயக்குநர் யூ.வதன் வளவாளராகவும் கலந்து கொள்வார்கள். புலமைப்பரிசில் மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்களை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பொது நூலகம் அழைத்துள்ளது. (3-7)

## பொன் விழா இணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் 25ஆவது ஆண்டு பொன்விழா தொடர்பான இணைப்புக் கூட்டம் சங்கத்தின் உப- தலைவரும் மானிப்பாய் பிரதேச சபை உப- தவிசாளருமான சி.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சமூகத்துக்குப் பெரும் பங்காற்றியவரும் வடக்கு மக்களின் குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்கு வடக்கு உதவி பொதுமுகாமையாளராக தேசிய நீர் வழங்கல் சபையூடாக மிகச் சிறந்த பணியாற்றியவரும் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி. பாரதிதாசன் சிறப்புக் கௌரவம் அளித்து கௌரவிக்கப்படவுள்ளார்.

அத்துடன் விவசாயத்துறை வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவருமான சி.பொ.வ.மா.க. முதலியார் அவர்களின் சேவையை கௌரவித்து சிறப்புப் பட்டம், விருது வழங்கிக் கௌரவிக்க மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப தவிசாளர் சி.சிவகுமார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (3-50)



**சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் - 2012**

**ஆறாம் திருவிழா**

ஆதி சேடனாம் பாம்பணையில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் அன்ன
ஆறாம் தினமது உன் அற்புத காட்சி கொடுத்தே அந்தணர்
ஆதாங்கம் நால் வேதம் ஓதி சோதி காட்டி சேவித் தெழ
ஆறாக ஓடும் உன் அருட்கடலில் அடியார் திளைப்பார்

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
அமரர் மு.கதிரவேலு கஜேந்திரன் (றமணன்),
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

## வர்த்தகக் கண்காட்சிகொழும்பில்

கொழும்பு, ஜூலை 28

அந்நிய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் கொழும்பில் எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை வர்த்தகக் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது. இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த சர்மா இந்தக் கண்காட்சியில் பங்கேற்க இருப்பதுடன் இந்தியாவைச் சேர்ந்த 100 நிறுவனங்கள் இந்த வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## உணவு நஞ்சானதால் மாணவர்கள் வைத்தியசாலையில்

மாத்தளை, லக்கல பிரதேச பாடசாலை ஒன்றின் மாணவர்கள் உணவு நஞ்சான காரணத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நுவரெலியா பிரதேசத்துக்கு கல்விச் சுற்றுலாவுக்குச் சென்றிருந்த வேளை உணவகம் ஒன்றில் உட்கொண்ட உணவு நஞ்சானதால் 31 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹம்பளை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரட்சியால் நீர் மின் உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, ஜூலை 28
நாட்டில் நிலவும் வரட்சி காரணமாக தற்போது நீர் மின் உற்பத்தி 20 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை நீர் மின் உற்பத்தி நடவடிக்கைகளை உரிய முகாமைத்துவத்துடன் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்தார்.

மின்சாரக் கட்டமைப்பை நிலையாகப் பேணுவதற்கு நீர் மின் உற்பத்தியின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்த கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை இன்றைய தினத்தில் தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்க முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (வ)

## வெளிநாடு சென்று நாடு கடத்தப்படும்
# புகலிடக் கோரிக்கையாளர் மீது சட்ட திட்டப்படி நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 28
நாடு திரும்பும் புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்ட விதிகளுக்கு அமைய நடத்தப்படுவர் என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகலிடம்கோர முயற்சித்தலானது நாட்டின் குடிவரவு குடியகல்வுச் சட்டத்துக்கு விரோதமானது. இவ்வாறு முயற்சிப்போருக்கு எதிராக வழமையான சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டவிரோதமான முறையில்நாட்டைவிட்டுவெளியேறியவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள் எதாகவும், இவ்வாறான நடவடிக்கைகள் சட்டத்



துக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

புகலிடம்கோரி வெளிநாடு சென்று அங்கிருந்து நாடு கடத்தப்படுவோரை சிவப்புக் கம்பளம் கொண்டு வரவேற்க முடியுமா? அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடு கடத்தப்படும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்ற போதிலும் அவை அவர்களின் எதிர்காலத்தை பாதிக்காது. துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படமாட்டாது-என்றார்.

அண்மைக்காலமாக ஆஸ்திரேலியாவுக்கு பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் படையெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை ஆஸ்திரேலியா கைவிட வேண்டும் என்று ஊடகங்களும் மனிதஉரிமை அமைப்புக்களும் கோரியுள்ளன.

குறிப்பாகப் புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரையில் அவர்களை ஆஸ்திரேலியா நாடு கடத்தக் கூடாது எனக் கோரப்பட்டுள்ளது. (வ)

## விரிவுரையாளர்கள் பிரச்சினை; கேட்டால் தலையிடத் தயார்
### காமினி லொக்குகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தம்மிடம் வேண்டுகோள் விடுப்பார்களாயின் அவர்களது பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு தாம் தலையீடு செய்ய முடியும் என்று தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.



எனினும் இதுவரை தம்மிடம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எந்தவொரு வேண்டுகோளையும் முன்வைக்கவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமது தொழிற் சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற் சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது. விரும்பும் எந்தவொரு தரப்பினரும் தலையீடு செய்து தமது பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி ரஞ்சித் தேவசிறி அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## கஞ்சா கடத்திய குற்றத்தில் இந்தியர் இருவர் கைது
### மேலும் நால்வரும் மாட்டினர்

கொழும்பு, ஜூலை 28
கஞ்சா மற்றும் புகையிலைத்தூள்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் 2 இந்தியப் பிரஜைகள் உட்பட 6 பேர் கற்பிட்டி, பத்தலங்குண்டு கடற் பரப்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் மன்னாரைச் சேர்ந்த இருவரும். கொழும்பைச் சேர்ந்த இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், பத்தலங்குண்டு தீவுப்பகுதியிலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் பயணித்துக் கொண்டிருந்த படகொன்றை நிறுத்தி சோதனையிட்டுள்ளனர். இதன்போது அந்தப் படகிலிருந்து 29 கிலோ 600 கிராம் கஞ்சாவை யும் 360 கிலோ புகையிலைத் தூள்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளதுடன், அந்தப் படகில் இருந்த 6 பேரையும் கடற்படையினர் கைது செய்து ஒப்படைத்தனர் என்றும் பொலிஸார் கூறினர். (வ)

## சட்டவிரோத ஆயுத பயன்பாட்டை நிறுத்த நடவடிக்கை எடுக்குக
### பொலிஸ்மா அதிபரிடம் பவ்ரல் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 28
மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சட்டவிரோத ஆயுதக் குழுக்களினால் சட்டவிரோத ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனிடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல், எழுத்து மூலம் கோரியுள்ளது.

இதுகுறித்து பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:-

இம்முறை அரசியல்வாதிகளுடன் கிரிமினல் சக்திகள் இணைவதற்கான சாத்தியமுள்ளது.

இதனால் நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதற்கு முன்னர் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி, நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளேன்.

கிரிமினல் வரலாற்றைக் கொண்ட நபர்கள் தமக்கு அரசியல் பாதுகாப்பைப் பெறுவதற்காக இந்தத் தேர்தலில் அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்க முன்வரக்கூடும்.

அரசியல்வாதிகள் தமது எதிரிகளை ஒடுக்குவதற்காக இந்தச் சக்திகளின் ஆதரவைப் பெற முயலக்கூடும்.

இவ்வாறான நிலையில் சட்டவிரோத ஆயுதங்களால் சம்பந்தப்பட்ட வன்முறைகள் இடம் பெறலாம்-என்றார்.

அண்மையில் இடம் பெற்ற தேர்தல்களின்போது கொலைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)



இராணுவத்திலிருந்து அங்கவீனமடைந்தோரினால் அனுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டலின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. இந்தநிகழ்வில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய கலந்து கொண்டு அங்கவீனமடைந்த படையினர் ஒருவருடன் கலந்துரையாடுகிறார்.

## கட்டுநாயக்காவில் குற்றவாளிகளை இனங்காணுவதற்கு விசேட ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 28
கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குற்றவாளிகளை எளிதாக இனங்காண விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவினரே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்று குறிப்பிடப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளின் மூலம் குற்றவாளிகளைக் கண்டறிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகத்தை அடையாளம் காணும் விசேட பாதுகாப்பு பொறிமுறைமை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகர்கள் உள்ளிட்ட பெரிய குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை இந்த புதிய பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் இலகுவில் கண்டறிய முடியும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

## மாவனெல்லை சிறுவர் இல்ல சிறுமிகள் 7 பேர் துஷ்பிரயோகம்

கொழும்பு, ஜூலை 28
மாவனெல்லை மெதவத்த சிறுவர் இல்லத்தின் உரிமையாளரால் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஏழு சிறுமிகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமிகள் நேற்று முன்தினம் மாவனெல்லை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஏழு சிறுமிகளும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு இலக்கானமை மாவனெல்லை சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் எம்பிலிப்பிட்டிய மற்றும் எஹெலியகொட பிரதேசங்களில் உள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிறுவர் இல்லங்களில் இருந்த போது பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எடுத்துக்கொண்ட காரியங்களை தடையின்றி அனுகூலமாக முடிப்பீர்கள். குடும்பத்தில் பெண்களால் சச்சரவுகள் ஏற்பட்டபோதும், சாதுர்யமாக முடிவுக்குக் கொண்டுவருவீர்கள். சுபகாரிய முயற்சிக்காக அலைச்சல் இருக்கும்.

**இடபம்:** மனதில் தீவிரமான யோசனைகள் நிலவும். வீட்டிலும், வெளியிலும் அவசரம் ஏற்பட்டபோதும் வார்த்தையில் நிதானம் தேவை. உறவினர்களால் சிலவிதமான சங்கடங்களுக்கும், செலவுகளுக்கும் ஆளாகலாம்.

**மிதுனம்:** தடைகளில் எதிர்ப்புகளைச் சந்திக்கும் நாள். உழைப்பில் கடுமை காணப்படும். ஒரு முக்கிய இடத்துக்கு செல்ல முற்பட்டு, நேரத்துக்குச் செல்ல முடியாமல் தவிக்க நேரிடலாம். உடன்பிறந்தவர்களால் சில தொல்லைகளை எதிர்கொள்ளலாம்.

**கடகம்:** யோசனைகள் கைகூடும். நண்பர்களால் உதவியும், ஒத்தாசையும் கிடைக்கக்கூடும். பெண்களால் உருவான தொல்லைகள் அகலும். பண பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். உடல் ரீதியாக உபாதைகள் நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். தொழிலில் சில மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்வீர்கள்.

**சிங்கம்:** எதிர்பாராதவிதமாக தடை தாமதங்கள் ஏற்பட்டபோதும், மன உறுதி, தைரியத்துடன் தடைகளை அகற்றுவீர்கள். எதிர்பார்த்த பணம் ஒன்று உரிய நேரத்துக்கு வந்து சேரும். குடும்பத்தில் ஒற்றுமையான செயல்பாடுகளால், சில காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:** அடுத்தடுத்து பணிச்சுமை ஏற்பட்டபோதும் நிதானமாக ஒவ்வொன்றையும் செய்து முடிப்பீர்கள். நிதி நிலையில் பற்றாக்குறையற்ற நிலை நிலவும். பழைய நட்புகளின் சந்திப்பும், அவர்களுடன் நேரத்தைச் செலவிடுவதுமாக இருக்கும்.

## நாளை

ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை 29.07.2012
திதி: ஏகாதசி பி.ப 05.02 வரை
நட்சத்திரம்: கேட்டை மரண பி.இ 02.33 வரை
சுபநேரம்: 09.03- 10.33 வரை
ராகு காலம்: 04.33- 06.03 வரை

**துலாம்:** சில விடயங்களை மேற்கொள்ள திட்டமிடுவீர்கள். ஆனால், தாமதமான செயற்பாடுகளாகவே இருக்கும். ஒரு உதவிக்காக மிகுந்த நம்பிக்கையுடன் நண்பர் ஒருவரை சந்திப்பீர்கள். எதிர்மாறான சூழ்நிலை நிலவும்.

**விருச்சிகம்:** வெளியில் உங்கள் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாக இருந்தபோதும், மனதுக்குள் கவலைகள் சற்று கூடுதலாகவே இருக்கும். இன்று உடன்பிறப்புக்களால் கவலைகள் அதிகரிக்கும். உடல்நிலையில் கவனம் தேவை.

**தனுசு:** சில வகையில் மனக்குறைகள் இருந்தபோதும், சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. உடல்நிலையில் கவனம் தேவை. அலுவலகப் பணிகளில் அதிக கவனம் தேவை. உடன்பிறப்புகளின் விவகாரங்களில் சற்று முன்யோசனையுடன் செயற்படுதல் நல்லது.

**மகரம்:** எதிலும் உங்களின் செயற்பாடுகள் பட்டும் படாததுமாக இருக்கும். மனதில் நிலவும் சோர்வு, உடலிலும் வெளிப்படும். சில நபர்களின் செயற்பாடுகளால் உங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டபோதும் இன்று வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள். பிரயாணங்களில் கவனம் தேவை.

**கும்பம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். சில வெற்றிகளால் மகிழ்ச்சி கூடும். உங்களின் மகிழ்ச்சிகள் அடுத்தவர்களின் மனநிலையைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள். பெரியோரின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுங்கள்.

**மீனம்:** அமைதியற்ற மனநிலையோடு காணப்படுவீர்கள். மனதில் போட்டிகள், பொறாமைகள் சற்று கூடுதலாக இருக்கும். தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களின் புகழை அதிகரிக்கும். இல்லறத்துணையின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | | 9 | | | 3 | 6 | 1 |
| 6 | 2 | | | 4 | 1 | | | 5 |
| | | 1 | | 5 | | 4 | | |
| | 6 | | | | | 2 | | |
| 2 | | | | 9 | | | | 6 |
| | | 4 | | | | | 7 | |
| | | 9 | | 6 | | 8 | | |
| 8 | | | 7 | 1 | | | 5 | 4 |
| 7 | 5 | 6 | | | 8 | | 1 | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 9 | 1 | 2 | 7 | 4 | 5 | 8 |
| 1 | 4 | 8 | 9 | 3 | 5 | 7 | 6 | 2 |
| 7 | 2 | 5 | 4 | 6 | 8 | 9 | 1 | 3 |
| 2 | 7 | 6 | 5 | 1 | 3 | 8 | 9 | 4 |
| 4 | 9 | 1 | 7 | 8 | 6 | 2 | 3 | 5 |
| 8 | 5 | 3 | 2 | 4 | 9 | 1 | 7 | 6 |
| 3 | 6 | 7 | 8 | 9 | 2 | 5 | 4 | 1 |
| 5 | 1 | 2 | 3 | 7 | 4 | 6 | 8 | 9 |
| 9 | 8 | 4 | 6 | 5 | 1 | 3 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# புனித பத்திரிசியார் கல்லூரி
# பழைய மாணவர்களுக்கான அறைகூவல்



**பழைய மாணவர்களின் சர்வதேச ரீதியிலான ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்தில்**

ஆரம்பநிகழ்வாக அறிமுக வைபவம்

**பத்திரிசியார் குடும்பத்தின் நடைபவனி**

உலகளாவிய பழைய மாணவர்கள் யாழ் நூல் நிலைய வளாகத்தில் உள்ள புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னைநாள் அதிபர்

**அருட்தந்தை ரி.எம்.எவ். லோங் (அ.ம.தி) அடிகளாரின்**

உருவச்சிலை முன்றலில் ஒன்றுகூடி நிகழ்வு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டு அங்கிருந்து அலங்கார ஊர்திகள் சகிதம் நடைபவனியாக பிரதான வீதி ஊடாக புனித பத்திரிசியார் கல்லூரியைச் சென்றடைவர். மூன்றுநாட்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வின் முதல்நாள் வைபவமும் இராப்போசன விருந்தும் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

*பங்குபற்றுபவர்களுக்கான பதிவுகள் :*
*பற்றீசியன் நிறுவனத்தில் சனி, ஞாயிறு தினங்களில்*
*காலை 8.30 – மாலை 5.00 மணி வரை மேற்கொள்ள முடியும்.*

**விசேட T.சேட்டும், நினைவுச் சின்னங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.**

*61, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 6148 திரு.ஜெயக்குமார், 0776183102 திரு.தயாளன்.*

# CALLING ALL THE OLD BOYS OF ST.PATRICK'S COLLEGE TO RALLY ROUND



## PATRICIANS GLOBAL REUNION IN JAFFNA

**Inauguration of "The Reunion" with a Unique Event**
**"THE PATRICIAN WALK"**

**Saturday 04th August, 2012, 3.00 pm Old Boys of St. Patrick's College from across the world will assemble in front of the Statue of our former Rector Rev. Fr.T.M.F Long (O.M.I)**
**in the Jaffna Public Library Premises at 3.00 pm The walk will commence following the ceremonial inauguration of the "Global Reunion" and proceed along Main Street to the College Premises where the First Days Reunion Activities and Dinner will take place**

Registration of Participants:
Patrician Institutes, No. 61, St. Patrick's Road, Jaffna
On Saturday 29th & Sunday 30th July, 8.30 to 5.00 pm
Mr. Jeyakkumar - TP: 021 222 6148
Mr.Thayalan -TP: 0776183102

**SPECIAL "T" SHIRTS AND SUVENIRS ARE AVAILABLE**

(20986) (2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

ராஜ வீதி, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து 500 m தொலைவில் மூன்று பக்கமும் மதிலால் சூழப்பட்ட நிலப்பரப்பு 3, குளி 15½ விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 3164757, 077 0376369

(20957)(6-8-8)

Jesus Calls
Praying for the World



## இயேசு அழைக்கிறார் - இலங்கை
## விசேட ஆசீர்வாதக் கூட்டம்

### மாணவர்களுக்காக

இடம் - றிம்மர் மண்டபம் (மத்திய கல்லூரி எதிரில்)
காலம்- ஜூலை 30ஆம் திகதி திங்கட்கிழமை - 2012
நேரம் - பிற்பகல் 3.00 தொடக்கம் 5.00 வரை
தொடர்புகளுக்கு - இல.10 A, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 320 7000

இதனை இயேசு அழைக்கிறார்
நற்செய்தியாளர்கள்,
ஜெப வீரர்கள் நடத்துவார்கள்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31 ★ 08 ★ 1948



மறைவு 28 ★ 06 ★ 2012

அமரர் செல்வராசா கௌசலாதேவி

எமது இல்லத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்து எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அன்புள்ளங்களுக்கும் இலத்திரனியல் ஊடகங்கள், அஞ்சலி மடல்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவிகள் புரிந்த அன்பு இதயங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அன்பகம்"
சிவகாமி அம்மன் கோயிலடி
இணுவில் கிழக்கு, இணுவில்

(20985)(6-7-8) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி மகேந்திரம் பாக்கியம் (மகான்)



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரம் சிவபாக்கியம் 25.07.2012 புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் மகேந்திரத்தின் அன்பு மனைவியும், வசந்தப்பிரியா, விஜிப்பிரியா, பகீரதன், அனிதா ஆகியோரின் அன்புத்தாயும், கனகலிங்கம் (கனடா), சதீஸ்குமார் (ஆட்டோ உரிமையாளர்), நவரதி ஆகியோரின் மாமியும், பிரவீன், லட்ஷா, டிலக்சிகா, கிஷோத் , அனுஷ்ரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

(சி/1717)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

### வலி.தென்மேற்கில் சமாசங்கள் அமைப்பு

நவாலி, ஜூலை 28

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமம், பட்டினம் ஆகிய நான்கு உப அலுவலகப் பிரிவுகளில் சனசமூக நிலையங்களின் சமாசங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய கடந்தவாரம் ஆனைக்கோட்டை கிராம உப அலுவலக பிரிவுக்கான சமாச அங்குரார்ப்பணக் கூட்டம், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பகீரதன் தலைமையில் ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.மனோகரனும் செயலாளராக றொபின்சனும் பொருளாளராக என்.சிவசங்கரும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (3-100)

### பொதுக்கூட்டம்

இலங்கை சாரணர் சங்கம் பருத்தித்துறை மாவட்ட கிளைச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளரும், பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் தலைவருமாகிய இ.வரதீஸ்வரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ)

* * *

நவாலி, ஜூலை 28

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 4.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-100)

### சக்கரம் சஞ்சிகைக்கு ஆக்கம் கோரல்

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆச்சிரமத்தினால் காலாண்டுண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படும் 'சக்கரம்' எனும் ஆன்மிக கலை இலக்கிய சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வல்லிபுரக் கோவில் பெருந்திருவிழா சிறப்பு மலராக வெளியிடப்படவுள்ள இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களை அனுப்புவோர் ஆசிரியர், 'சக்கரம் சஞ்சிகை', பெரியாழ்வார் ஆச்சிரமம், வல்லிபுரக் கோவில், புலோலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3-8)

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



சீனியர் சுப்பிரமணியம்
அவர்கள் தனது 75 ஆவது பிறந்த நாளையும்
அவருடன் சேர்ந்து அவரது பாரியார்
அரியமலர் சுப்பிரமணியம்
அவர்கள் தனது 65 ஆவது பிறந்த நாளையும்
இன்று (28.07.2012) சனிக்கிழமை ஏழாலை மேற்கு, பள்ளஞ்சீமாவில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.
அவர்களைச் சகல சௌபாக்கியங்களுடனும், நலமுடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துபவர்கள்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பள்ளஞ்சீமா,ஏழாலை மேற்கு, ஏழாலை.
தொ.பே.இல.021 4922086

(20903)(6-7)

## வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2010

1. பொது மற்றும் சிறப்புக்கலைமாணி பகுதி - I - 2010
2. பொது மற்றும் சிறப்புக்கலைமாணி பகுதி - II - 2009 & 2010
3. சிறப்புக் கலைமாணி பகுதி - III - 2009

மேற்படி கலைமாணிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 24.08.2012 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தை பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 x 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், **வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும்.

**முக்கிய குறிப்பு:** கலைமாணி கற்கைநெறி தொடர்பாக விரைவில் புதிய பாடத்திட்டம் அறிமுகப் படுத்தப்படவிருப்பதால், பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள் மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து விரைவில் தங்கள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விவரங்களுக்கு : 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
26.07.2012

(20706)(6-7-8)

## கண்ணீர்க் காணிக்கை



கரைதுறைப்பற்று பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிரேமநிதி விமலேந்திரன் அவர்களின் அன்னை

திருமதி
**பொன்னுத்துரை பரஞ்சோதி**

அவர்கள் 25.07.2012 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது இதய பூர்வமான கண்ணீர் காணிக்கைகளைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமூக சேவை உத்தியோகத்தர்கள்,
சமூக சேவைநிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள்,
சமூகசேவையாளர்கள்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(16925)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய வாழ்வின் நம்பிக்கையுடன்.....!

மண்ணுக்காய் 19 * 02 * 1940   11 * 06 * 1946

விண்ணுக்காய் 26 * 03 * 2010   28 * 07 * 2010



அமரர்.கந்தையா பவசிங்கம்   அமரர்.கிருபாநிதி பவசிங்கம்

எம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்
இன்னும் நீங்கள் இருப்பதாய் ..... இவ்வுலகில்
வருடங்கள் இரண்டு பறந்தோடின;
கடல் கடந்து நாம் வந்தபோது
அழகான ஊர் இருந்தது.
அன்பான உறவுகள் இருந்தது.
உங்கள் கை பிடித்து நடந்த அதே தெருக்கள்,
உங்களுடன் இறைவனைத் தொழுத அதே ஆலயம்,
உங்கள் உடைகள், உங்கள் உடைமைகள்
எல்லாம் அதுவாய் அப்படியே இருந்தன.
எல்லாம் இருந்தும் பல்லாண்டு இருக்க வேண்டிய
நீங்கள் மட்டும் இல்லாது போனதென்ன?
உங்கள் நினைவுகளால் அதிர்ந்தது இதயம்!
வருடங்கள் இரண்டு கடந்தும் புரியவில்லை எமக்கு,
டடா, அம்மா உங்களைப் போல் இவ்வுலகில்
எங்களுக்கு இனி யாருமில்லை.
நித்திய வாழ்வு உண்டென்ற ஒரே நிச்சயத்துடன்

பிள்ளைகள்:-
சர்மிலி யோசுவா
கோஷலி விக்டர்

"கீதாஞ்சலி", உடுவில்.

(20983) (2,6,7)

# ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது

## சுடர் ஒளி வாரவெளியீடு




இவ்வாரம்.....

★ கிழக்கில் ஜிகாத் அமைப்பு இயங்குகிறது

★ செப்டம்பருக்குள் தம்புள்ளை பள்ளிவாசல் அகற்றப்படும்
- தம்புள்ளை ரஜமஹா விகாராதிபதி பரபரப்புப் பேட்டி

★ இந்தியத் தலையிடிக்கு சீனத் தைலம் பாவிக்கும் இலங்கை
- விசேட அரசியல் கட்டுரை

★ வடக்கில் திருமணம் நடத்தவும் இராணுவத்தின் அனுமதி பெற வேண்டும்
- றில்வின் சில்வா அதிரடிப் பேட்டி

★ மற்றும் பல சுவாரஷ்யமான, சூடான தகவல்களுடன் ஞாயிறு வார வெளியீடு.....

**பிரதிக்கு முந்துங்கள்**



# 50 ஆவது பிறந்த நாளும்

## நெஞ்சைவிட்டகலாத 6 ஆம் மாத நினைவஞ்சலியும்

### அமரர்

# சிறிதரன் சத்தியநேசன் (நேசன்)

(கிருஷ்ணா அப்பளக் கொம்பனி உரிமையாளர்)

**மண்ணில் :- 28.07.1962   விண்ணில் :- 23.02.2012**

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
இன்சொல் பேசி இரக்க உள்ளத்தோடு - தன்
இனத்தவர்களையும் அயலவர்களையும் நேசித்து - தன்
பிள்ளைகளை ஏற்றமுடன் வாழ வழிகாட்டி
வான் புகழ் வாழ்ந்து காட்டிய எங்கள் குடும்ப விளக்கே!
புன் சிரிப்புடன் எங்களைப் பூரிப்படைய வைத்தீர்களே!
கண் இமைக்கும் நேரத்தில் கதைகள் பல கூறாமல்
இறைவன் திருவடியை அடைந்து விட்டீர்களே!
உங்கள் பிரிவால் துடியாய்த் துடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி - வதனி,
பிள்ளைகள்:- யமுனா, தர்மிளா, கிசோக்குமார்.
மருமக்கள்:- இளங்கீரன், கனகஷங்கர்.
பேரப்பிள்ளைகள்:- சொஃபியா, தமிகா.
இல.117, பாற்பண்ணைவீதி, திருநெல்வேலி.

(20978) (2-6-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி மகேந்திரராஜா



உதயகிரி, வட்டுமேற்கு, வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி மகேந்திரராஜா (24.07.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.07.2012) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

உதயகிரி,
வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை.
பிரான்ஸ் 0033148350027

தகவல்: குடும்பத்தினர்

(21068)(5-6-7)

## மணல் விற்பனைக்கு

நாகர் கோயில் மணல், கண்டாவளை மணல், பூநகரி மணல் என்பன மிகவும் குறைந்த விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கே விநியோகிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0771988980

(21054)(2-6-7)

## மணமகன் தேவை

★ 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26 ¼ பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மண மகளுக்குப் பட்டதாரி மணமகன் தேவை.

★ 85 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 63 பாவமுடைய நோர்வேயில் டாக்கராகப் பணிபுரியும் மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர் மண மகன் தேவை.

★ 87 இல் பிறந்த சூரியனும் செவ்வாயும் உள்ள 19 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

★80 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 86 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவிலோ உள்நாட்டிலோ பட்டதாரி மணமகன் தேவை.

★89 இல் பிறந்த RC வேதமுடைய அவுஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மண மகளுக்கு RC வேதமுடைய. மணமகன் தேவை.

★ 84 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 51 பாவமுடைய லண்டனில் பட்டம் முடித்த மணமகளுக்கு லண்டனில் பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தேவை.

★79 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 55 ¼ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தேவை.

★83 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 20 ½ பாவமுடைய சுவிஸில் டாக்டராகப் பணிபுரியும் மணமகளுக்கு லண்டனில் டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன் பிரஜாவுரிமை இல்லாவிட்டாலும் சுவிஸில் போய் வசிக்கக்கூடிய மணமகன் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 320, கோயில் வீதி, நல்லூர். 077 6070862 (21003) (2-6-3)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



### அமரர் தங்கமணி ஆறுமுகம்
### (மணி அக்கா)

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆறுமுகம் இரவீந்திரன் அவர்களின் அன்புத் தாய் 11.07.2012 அன்று சிவபதம் எய்தியமையைக் குறித்து இன்று (28.07.2012) சனிக்கிழமை நடைபெற இருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையின்போது அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வியியற் கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய். (21007) (2-6-7)

# கேள்வி கோரல்கள்

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாலங்கள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1) பின்வரும் புனர்நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. 9/2 இலக்க பாலம் மீள் மேல் தளமிடல் - சாவகச்சேரி- புலோலி வீதி | 20,000/= | C 7 |
| 2. 5/7 இலக்க பாலம் - மீள் மேல் தளமிடல் புலோலி – கொடிகாமம்- கச்சாய் வீதி | 20,000/= | C 7 |
| 3. 13/1 இலக்க பாலம் - மீள் மேல் தளமிடல் - சாவகச்சேரி- புலோலி வீதி | 20,000/= | C 7 |
| 4. 5/3 இலக்க பாலம் - மீள் மேல் தளமிடல் - புலோலி – கொடிகாமம்- கச்சாய் வீதி | 20,000/= | C 7 |
| 5. 24/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் - யாழ்ப்பாணம்- மானிப்பாய்- காரைநகர் வீதி | 14,000/= | C 7 |
| 6. 23/4 இலக்க மதகு மீள் நிர்மாணம் - யாழ்ப்பாணம்- மானிப்பாய்- காரைநகர் வீதி | 13,000/= | C 7 |
| 7. 27/2 இலக்க மதகு மீள் நிர்மாணம் - யாழ்ப்பாணம்- பொன்னாலை – பருத்தித்துறை வீதி | 20,000/= | C 7 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 13.08.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 13.08.2012 அன்று முற்பகல் 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 02.08.2012 தொடக்கம் 10.08.2012 பிற்பகல் 2 மணி வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/- + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற் குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04: முன் கேள்வி கோரல் கூட்டம் 10.08.2012 அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (13.08.2012 மு.ப 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம். |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம். | 021- 222- 2968. |

**மாகாணப்பணிப்பாளர் (வ)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்**

[சி/1705] [2-6-7]

**பிரதம பொறியியலாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி லயன்ஸ் கழகம் நடத்தும்
## இலவச மருத்துவ முகாம்

இடம் : யாழ். கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்
காலம் : நாளை (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

கண் பரிசோதனை, உடல்பருத்தல், சிறுபிள்ளைகள் மருத்துவம், நீரிழிவு பரிசோதனை உட்பட பொது வைத்தியம் நடைபெறும். தேவை ஏற்படுபவர்களுக்கு மருந்துகள், கண்ணாடிகள் வழங்கப்படும்

**மருத்துவ சிகிச்சை**

கொழும்பு - அப்பலோ மருத்துவக்குழு, சிறுபிள்ளைகள் வைத்தியம், யாழ். போதனா வைத்தியசாலை சிரேஷ்ட வைத்தியர்கள் இவர்களுடன் லயன் டாக்டர் திருமதி கலைச்செல்வி சௌந்தரராஜன், லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்.

தலைவர்: லயன் இ. குழந்தைவடிவேலு J.P.
அனுசரணை: செ. வன்னியசிங்கம் - சுவிஸ்

(21055) (45.6.7) கைதடி லயன்ஸ் கழகம்


### அடிக்கல் நாட்டல்

மகிந்தோதயதொழில் நுட்ப ஆய்வுகூடத்துக்கான அடிக்கல் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம், வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. கல்லூரி அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரினும் கலந்து கொள்வர். (16)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
09.05.1967

உதிர்வு
28.07.2011

### அமரர் கதிரவேல் கிறிஸ்தோப்பர்
(கிறிஸ்ரி)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா
வாழ்க்கை என்னும் பாதையிலே
நீங்கள் காட்டிய பாச மெல்லாம்
எம்மை விட்டுப் பிரிந்து ஆறாண்டானதோ!
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

நாவற்குழிச்சந்தி,
5 வீட்டுத்திட்டம்.

குடும்பத்தினர்,
நண்பன்
இ.கி.செல்வநாயகம்.

(21005)(2-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.02.1921

மறைவு
08.08.2011

திதி: வளர்பிறை தசமி
28.07.2012

### அமரர் வேலுப்பிள்ளை கந்தையா

குடும்ப ஒளிவிளக்காய் வாழ்ந்திட்ட எங்கள் தெய்வமே
எந்த உறவுகள் இருந்தாலும் உங்களுக்கு ஈடாகுமா
எம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டு ஆனாலும் உங்கள்
நினைவுகள் என்றென்றும் எம்முடனே நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

அல்லாரை கிழக்கு,
மீசாலை

(21000)(5-6-7)

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

பிரபல வர்த்தகர் (E.S.P) இ.ச.பேரம்பலம் அவர்களின் பாசமிகு துணைவி

## திருமதி பேரம்பலம் மாணிக்கம்



அவர்கள் கடந்த 25.07.2012 அன்று
மறைந்த செய்தி கேட்டு மிகுந்த துயர்
அடைவதுடன் அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல ஈழத்துச் சிதம்பரப் பெருமானை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி....! ஓம் சாந்தி.....!! ஓம் சாந்தி.....!!!

**உரிமையாளர்களும்,**
**பணியாளர்களும்.**
வெங்கடேஸ்வரா,
125, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/1740) (2-6-22)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாகக் கட்டமைப்புடன் சர்வதேச விசா ஆலோசனைச் சந்தையில் உங்கள் முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான

# 'திசைகாட்டி'






சர்வதேச பங்காளிகளுடன் தொடர்பு கொள்வதற்காகவும். உலகளாவிய குடிவரவு குடியகல்வு பிந்திய தகவல் பரிமாற்றத்திற்காகவும்

எமது நிர்வாகக் கட்டமைப்பின் புதிய தலைவராக பிரதம நிறைவேற்று அதிகாரியாக செல்வி. ஆர். அஜந்தினி கடந்த 22.07.2012 அன்று எமது கௌரவ இயக்குநர் சபையால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை எமது சமூகத்திற்கு அறியத்தருகின்றோம்.

இவர் 20வருட காலம் Bahrain நாட்டில் கல்வி பயின்று பட்டம் பெற்று சர்வதேச விசா ஆலோசனைத்துறையில் விற்பன்னராக காணப்படுகின்றார். சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் அதிசிறப்புப் புலமையும் உலக மொழிகள் 12இல் சிறப்பான தேர்ச்சியும் உடையவர் இவர்.

இவரது நியமனம் மூலம் புதிய மெருகுடன் வாடிக்கையாளர் சேவை, விசா ஆலோசனை படிவங்கள் நகர்த்தலில் அதிவேகம், நவீன படிமுறைகள் தொடர்பாடல் மூலம் பிந்திய விசா விவரங்கள் புரிதல், புதிய ஆளணியினர் புகுதலும் நவீனத்துவமான உலகமயமாதலிற்கு எமது நிறுவனம் முகங்கொடுத்தல் என்பன சாத்தியமாகும்.

New Administration field.

Chief Escutive Offices in Thisaikaddi (Pvt)Ltd.

society.

in this field.

By this new collaboration we are facing the globalized world, and moving more advances.

தற்போது எம்மிடம்

- ஆஸ்திரேலியா
  குடும்பவிசா/Student Visa
- நியூசிலாந்து
  குடும்பவிசா/Student Visa
- மலேசியா
  குடும்பவிசா/Student Visa
- கனடா
  குடும்பவிசா/Student Visa

போன்றவற்றுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.




**திசைகாட்டி(பிறைவேற்) லிமிட் (PV82703)**
**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்,**
**37, சிவகுருநாதர் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்**
**021 221 9016, 021221 9514**

**thisaikaddi@sltnet.lk**
**www.thisaikaddi.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(21002)(5-6-7)

உதயன் சுடர் ஒளி

**நாளிதழின்**

**ஊடக அனுசரணையுடன்**

# புலமைச்சுடர் நடத்தும்

வளவாளர்கள்

**திரு. T. திலீப்குமார்** (கொழும்பு முன்னணி ஆசிரியர்)

**திரு. N. S. தீபன்** (வவுனியா முன்னணி ஆசிரியர்)

## வலி. தென்மேற்கு பிரதேச சபை கலாசர மண்டபம் - மானிப்பாய்

## யாழ். மானிப்பாயில்...

காலம் 29.07.2012 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

**தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு**

புலமைசாவி அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு : 071 6850005, 071 6182182

ஒழுங்கமைப்பு

SRI LANKA Youth வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்

குறிப்பு : இடநெருக்கடியை தவிர்த்துக்கொள்வதற்காக நீங்கள் 077 2480863, 077 4683427 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு முற்பதிவு செய்து தங்களுக்குரிய பதிவிலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வெகுவிரைவில் யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில்

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/1811)(6-7)


### கிளாலி – விடத்தற்பளை வீதியைப் புனரமைபு ங்கள்

கிளாலி - விடத்தற்பளை வீதியினைப் புனரமைத்துத் தருமாறு விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

மழை காலங்களில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நடந்து செல்லக் கூட முடியாத நிலையில் வீதி காணப்படுகின்றன.

இதனால் மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான வீதியை புனரமைத்து வழங்குமாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் டாக்டர் சி.ஆறுமுகம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்துள்ளார்.

(த-9)

## கண்ணீர் அஞ்சலி

எனது பாடசாலை நண்பனும்,லயன் கழகத்தின் வலயத் தலைவரும் இ.ச. பேரம்பல சக நிறுவனத்தின் உரிமையாளருமான லயன் பே. நாகரத்தினம் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி பேரம்பலம் மாணிக்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

லயன் DR.K.M.பத்மநாதன் PMJF
மாவட்ட உபபொருளாளர்(லயன்ஸ் கழகம் 306 B1)
'வெஸ்கோ' மருந்தக உரிமையாளர் (சி/1743)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவரும், நலன் விரும்பியுமாகிய பொன்மனச்செம்மல் பேரம் பலம் நாகரத்தினம் அவர்களின் அன்புத்தாய்

**திருமதி பேரம்பலம் மாணிக்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வண்ணை வெங்கடேசப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்
(21014)(6-7-8)


## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள், நல்லின பால் ஆடுகள் (ஜமுனா பாரி) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 918 1018
(21013) (45.6.7)

## குமரன் சில்க்ஸ்

எமது குமரன் சில்க்ஸ் தற்பொழுது புதுப்பொலிவுடன் (30.06.2012) தொடக்கம் நவீன சந்தையின் வெளிப்புறம் (பழைய மகாநதி) பிரதான வீதிக்கு அருகில் மாற்றப்பட்டுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல. 04, பழைய மகாநதி புடவைக்கடை,
நவீன சந்தை, சாவகச்சேரி

குமரன் சில்க்ஸ்
நவீன சந்தை, சாவகச்சேரி
(18129)(6-78)

## விற்பனைக்கு

தூய இன COCKER SPANIEL இரண்டு தரம் குட்டி ஈன்ற தாய் நாயுடன் குட்டிகளும் உடன் விற்பனைக்கு உண்டு.

மனோன் மாஸ்டர்
அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய்
(21011)(6-7-8)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24.11.1976

இறப்பு
20.07.2006

திதி:- தசமி

## நடராஜா ரவீந்திரகுமார் (ரவி)

அண்ணா!
என் விழிகள் உன்னைத் தேடுகின்றன
சொப்பனத்தில் மட்டுமே உன்னோடு வாழ்கின்றோம்
உன் சாந்தமான முகம் கண்டும் பாதகர் இரங்கவில்லையே!
உலக மாயையுள் வேஷம் போடும் மனிதர்களிடையே
மாட்டித் தவிக்கும் உன் தங்கை நான் தனியே!
உன்னுடன் வர உடனே அழைக்காவிட்டாலும்
நாளை என்றாலும் அழைப்புக்கொடு ஏற்றுக்கொள்வேன்.
ஆறு ஆண்டுகள் என்ன அறுபது ஆண்டுகள் சென்றாலும்
மாறாது என் துயர்!

17/22, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

உன் [illegible]
துர்க்கா ஜெகதீபன்.

(2012)(2-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி ஞானேஸ்வரி திருஞானசம்பந்தர்
அவர்களின் பேர்த்தியும், பாடசாலையின் அபிவிருத்திக்கு
அரும்பணியாற்றுகின்ற
E.S.P. பேரம்பலம்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
பாடசாலைச் சமூகம். (21016) (45.6.7)

## மரண அறிவித்தல்

**திருமதி கிறேஸ் றுக்மணி அந்தோனிப்பிள்ளை**



மிருசுவிலைப் பூர்வீகமாகவும் பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்திலும் கொழும்பு வெள்ளவத்தையிலும் வாழ்ந்து இறுதி நாள்களை அவுஸ்திரேலியாவில் கழித்த வருமான கிறேஸ் றுக்மணி அந்தோனிப்பிள்ளை (18.07.2012) இல் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்சீல் - றோசலின் தம்பதியரின் மகளும் B.S அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அவுஸ்திரேலியாவில் வதியும் றஞ்சினி, றஞ்சன், பத்மினி, சகிலா (லண்டன்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான பூமணி செபரட்ணம், அரசநாயகம், செல்வநாயகம், மனோன்மணி மற்றும் அருட்தந்தை மாசல் ராசநாயகம், (குரு முதல்வர் பதுளை மாவட்டம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராணி ஒலிவற், காலஞ் சென்றவர்களான செபரட்ணம், அக்னஸ் வேதநாயகம், திரேசா பிறான்சிஸ் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (28.07.2012) சிட்னி அவுஸ்திரேலியாவில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகள் : 0061 288409240, 0061 401660600 – றஞ்சன்,
0044 2089492740, 0044 7950791798 – றொகான்

தகவல்:
குடும்பத்தினர்
(21015)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சிப் பகுதியில்

# திடீர் மின்தடையால் பலருக்கும் பாதிப்பு

கிளிநொச்சியில் அடிக்கடி இடம்பெற்று வரும் மின்தடை காரணமாக பொதுமக்களும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், வணிக நிலையங்கள் என்பவற்றின் செயற்பாடுகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த மூன்று நாள்களாக காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரையான நேரத்தில் தொடர்ந்தும் மின் தடை காணப்படுகின்றது.

இதனால் வங்கிகள், அரச செயலகங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. வங்கிகளில் தமது தேவைகளைப்பெற்றுக்கொள்வதற்கு மிக நீண்ட தூரத்தில் இருந்து வரும் மக்கள் மின்சாரத் தடை காரணமாகத் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதைவிட அரச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாக பதிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு மிக நீண்ட தூரத்தில் இருந்து வரும் மக்கள் தமது சேவைகளையோ அல்லது பிரதிகளைப்பெற்றுக் கொள்வதிலேயோ சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பாடசாலைத் தேவைகள் மற்றும் இதர தேவைகளுக்கு என அவசரமாகப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வரும் போதும் மின்சாரத் தடைகாரணமாக அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் வணிக நிலையச் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன.

இங்கு முன்னறிவித்தலின்றி மின்சாரம் தடைப்படுவதால் பலரும் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மின்சார சபையுடன் தொடர்பு கொண்ட போது தற்போது புதிய இணைப்புக்கள் வழங்குதல் மற்றும் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதால் அடிக்கடி மின்தடைகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(சு-6)

**வாகன விற்பனைக்கு**

Honda, Civic, 2007ஆம் ஆண்டு, Model Hibdrid Auto, Full Option, Leather Sheet, Englandல் இறக்குமதி செய்யப்பட்ட கார் விலை 39லட்சம் பேசி தீர்மானிக்கலாம். சனி,ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.
தொடர்பு-0777418018 (சி/1813)(3,14)

## சேவை நலன் பாராட்டுக்கள்

*திரு.கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா*
கிராமசேவையாளர்- சிறுப்பிட்டி கிழக்கு



எமது பிரதேச கிராம சேவையாளராக இரவு, பகல் என்று பாராது அல்லும் பகலும் மக்களது நலனையே முதன்மையாகக் கொண்டு பணியாற்றி நேற்றுமுன்தினம் (26.07.2012) வியாழக்கிழமை ஒய்வுபெற்றுச்சென்ற எமது ஆலய போசகர் திரு.க.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது ஒய்வு நிலை சிறக்க வாழ்த்துவதோடு அவரது சமூக சமயப்பணிகள் மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல செல்லப்பிள்ளையார் அருள்பாலிப்பாராக.

*சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார்*
*ஆலய நிர்வாகமும், மக்களும்.*

(21035) (3)

## அறம் செய்யும் மைந்தரைப் பெற்ற அன்னைக்கு அஞ்சலி



திருமதி
மாணிக்கம் பேரம்பலம்
அவர்களின் பிரிவு குறித்து எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலி உரித்தாகுக

யாழ்ப்பாணம்.

தம்பையா - தியாகலிங்கம்
வைகுந்தன் களஞ்சியம்

(சி/1758) (15-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காதேவி மணிமண்டபம் ஆகியவற்றின் சிறந்த அபிமானியும், பற்றாளருமான இ.ச.பே.நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி**
**மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

துர்க்காதேவி மணிமண்டபம்
நல்லூர்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(F/1449) (45,6,7)

# வளங்களைக் காத்த வாரி வளவு அன்னைக்கு எம் இதயம் கனிந்த அஞ்சலி



திருமதி **மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களின் பிரிவு குறித்து எமது ஸ்தாபனம் இதய அஞ்சலிகளை சமர்ப்பிக்கிறது

கொழும்பு,
யாழ்ப்பாணம்.

**S.V.M** ஸ்தாபனமும்
பங்காளரும்.

(சி/3757) (15-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஆய்வுகூட வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

மஹிந்த சிந்தனையின் கீழ் இரண்டாம் நிலைப்பாடசாலைகளைத் தரம் உயர்த்தும் நோக்கில் மாவட்ட ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மஹிந்தோதய ஆய்வுகூட நிர்மாணப்பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியும், கிளிநொச்சி மாவட்டத்தில் பாரதி வித்தியாலயமும், முல்லைத்தீவில் வித்தியானந்தாக் கல்லூரியும், மன்னாரில் முசலி ம.வி.யும், வவுனியாவில் மடுக்கந்தை ம.வி.யும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (16)

## துயர் பகிர்கின்றோம்



கஜமுகன் ஹாட்வெயார் நிறுவனத்தின் உரிமையாளரும் எமது நிறுவனத்தின் விநியோக முகவருமாகிய (Distributor) பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி
மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன், எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Serendib Flour Mills (pvt)Ltd
245/52, Old Avissawella Road,
Orugodawatte,
Wellampitiya.

(21017) (3,6,7)

Study & Work in UK, Australia & Canada
2012 September Intake.

"இறுதிச்சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்"

Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.

Colombo T.P:0729994777/0117208752
Jaffna T.P : 0727685691/0772479683

V T L Mangement. 01. Deanston House. Deanston Place. Colombo 03.

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க.......

2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும் வருடாவருடம் 3000திற்கும் அதிகமான மாணவர்களைச் சந்திக்கும் நாடெங்கிலுமுள்ள வெற்றித்தேர்வு வளவாளர்கள் கலந்துகொள்ளும்

மாபெரும் கருத்தரங்கும் செயலமர்வும்

இம்முறை இரு இடங்களில்

யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகம் கல்வி வலய மாணவர்களுக்காக யாழ் நகரில்.....

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 01.08.2012 புதன் மு.ப. 9.00 – பி.ப. 2.30 வரை

வடமராட்சி கல்விவலய மாணவர்களுக்காக வடமராட்சியில்....

இடம்: வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை மண்டபம், மாலு சந்தி.
காலம் : 05.08.2012 ஞாயிறு மு.ப. 9.00 – பி.ப. 2.30 வரை

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக்கொண்ட மாதிரி வினாப்பத்திரம் பரீட்சையாக நடாத்தப்பட்டு மதிப்பீடு செய்து Multi Media Projector மூலம் விரிவான விளக்கங்களுடன் தெளிவுபடுத்தப்படும். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்.

அனுமதிக்கட்டணம் ரூபா 150.00 மட்டுமே!

நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

பங்குபற்றிச் சித்தியடையுங்கள்!

தொடர்புகளுக்கு:
0775388471, 0773126807, 0779543956

Sakthy
MICROTEC COMPUTER WHOLESALER
Discount For dealers & resallers

all kind of branded computer and monitors directly import from USA with warranty
Assoceries ¦ Head Phone, Web cam, Speaker, Joystick, Mouse, Keyboard, Ram DDR 1/ DDR II
DVD ROM/DVD RW, These are Avalaible here LED 15" 17" 19" 20" 21" if You get more than 100 to 1000 Pieces get Special

Laptop (Dell / IBM/HP/Compaq) Pentium - 4/ Pentium - m/ Pentium - D/ Dual Core/ Core 2 Duo (Law Comprehension to High Comprehension)
CPU - Desktop and Tower Pentium - 04/ Pentium - D/Dual core/ Core 2 Duo

We have more Quantity
IBM

Koddaikadu lane,
Konadavil east Kondavil, Jaffna
Tel : 077 9120842

(21020)(6-8-14)

தேவை

நிறுவனம் ஒன்றிற்கு
பணிபுரிவதற்கு பெண் பிள்ளைகள் தேவை

T.P : 0212226113
233, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
திருநெல்வேலி கிழக்கு- கோப்பாய்
பதவிவெற்றிடம்

25.07.2012 உதயனின் பக்கம்20 A யில் மேற்படிவிளம்பரத்தில் பொது நிபந்தனை 2இல் வயது 07.08.2012 ஆந் திகதி 18வயதிற்கு குறையாதவர்களாயும் என வாசிக்கவும்.

Spot Admission For EUROPE

ஐரோப்பிய நாட்டு பல்கலைக்கழக/கல்லூரிகளின் உயர்கல்வி ஆலோசகர் தற்போது இலங்கையில், நேர்முகப்பரீட்சைகள் நடத்தி ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

2012 August, September அனுமதிக்கான Spot Admission இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் யாழ் மண்ணில் உதயன் கேட்போர் கூடத்தில், 30ம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 5ம் திகதி வரை கொழும்பில்



எங்களிடம் மட்டுமே!

VISA 100%

விசா கிடைத்தபின்பு பாடநெறிக்கான கட்டணம் ரு 150 000 மட்டுமே... வருடத்திற்கு US $2900

- MBBS
- Engineering
- Aircraft Flight Operation (Pilot)
- Management
- Hotel & Tourism
- Computing
- Automation
- Marketing
- Banking
- Nursing • Law
- HR • Design

1000's of courses...

- பட்டப்படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
- IELTS அவசியமில்லை
- ஆகக்குறைந்த கல்வித்தகைமை O/L
- Sponsorship தேவையில்லை
- கற்கைநெறியின் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி
- விடுமுறைநாட்களில் விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வேலைவாய்ப்புகள்
- குறைந்த வாழ்க்கைச் செலவு
- குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கொள்ளும் வசதி

STUDY/ VISIT/ BUSINESS
• Sweden • New Zealand • Italy
• German • Singapore • UK
• France • Ukraine • Cyprus

072 62 69 956
077 354 64 00
87, பேராதெனிய வீதி, கண்டி.

Rohaka (Pvt) Limited
வெளிநாட்டுப் பட்டப்படிப்பிற்கான ஆலோசகர்கள்
91, 5 வது மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 04.
(மயஸ்டிக் சிட்டி அருகில், சிங்கர் கட்டிடத்தொகுதியில்)
தொலைபேசி 0112 590 445 www.rohaka-global.com

# விலைக்கேள்விக்கான கோருதல்

காரைநகர் பிரதேச சபை, காரைநகர்.

1. தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, சார்பில் காரைநகர் பிரதேச சபை, காரைநகரிற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு M7/C8 தரத்தை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section iV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. அக்கறைகொண்டுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **தவிசாளர், காரைநகர் பிரதேச சபை, காரைநகர் (தொலைபேசி இல: 021-321 6447)** அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை தவிசாளர், **காரைநகர் பிரதேச சபை, காரைநகர் (தொலைபேசி இல: 021-321 6447)** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **30.07.2012 முதல் 20.08.2012 வரை 9.00 மணி யிருந்து 15.00 மணி வரையான** காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான **ரூபா 2000/-** ஐ கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் **21.08.2012 ம் திகதியன்று 14.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, காரைநகர் பிரதேச சபை, காரைநகர்** எனும் முகவரியில் **நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் **21.08.2012 ஆம் திகதியன்று** 14.00 **மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.**

8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் காரைநகர் பிரதேச சபை, காரைநகரில் 07.08.2012 அன்று 14.00 மணிக்கு நடைபெறும்.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விவரம் | அண்ணளவானமதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| NP/14/41(08)/02/PSDG/2012 | Construction Of Rest Place At Casurina Beach, Karainagar | 4.00 | 03 மாதங்கள் | M7/C8 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 60,000.00 | 03.12.2012 வரை |

வே.ஆனைமுகன்,
தவிசாளர்,பெறுகைக்குழு
காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.

(சி/1748)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டுச் சம்பவங்களுக்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்

## முல்லையில் மீளக்குடியமர்ந்த மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என இங்கு மீளக் குடியமர்ந்து வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் வீடுகளை இழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப் படாத நிலையே காணப் படுகின்றது. இதனால் திருடர்கள் தமது கைவரிசையை இலகுவாகக் காட்ட முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதிலும் மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தமது வீடுகளின் பாதுகாப்புக்கெனக் கதவு, யன்னல் ஆகியவற்றைக் குறைந்த செலவில் மக்கள் அமைக்க முடியாதவாறு மரங்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள தடைகள் முட்டுக்கட்டையாக உள்ளன.

இதனால் வசதிகுறைந்த மக்கள் கதவு, யன்னல் இல்லாத வீடுகளில் வாழ வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

திருட்டு ஆசாமிகள் தற்காலிக வீடுகளின் தகரங்கள் அல்லது ஓலைத் தடுப்புக்களை இலகுவாக அகற்றி விட்டு வீடுகளுக்குள் பிரவேசித்துத் தமது காரியத்தை இலகுவாக நிறைவேற்றி விட்டுச் செல்வதாகக் கூறப் பட்டுள்ளது.

இங்கு வசிக்கும் மக்களில் 80 வீதமானவர்கள் பாதுகாப்பு எதுவுமில்லாத தற்காலிகக் குடிசைகளில் தமது காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் திருடர்களின் அட்டகாசமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கதவு, யன்னல் இல்லாத வீடுகளின் நிலையும் இது தான்.


மேலும் பெரும்போகத்தின் போது அறுவடை செய்த நெல்லை விற்க முடியாத நிலை தற்போது அறுவடை ஆரம்பமாகியுள்ள சிறுபோகத்திலும் தொடர்கின்றது.

சிவப்பு அரிசி தரும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு எவருமில்லை. வியாபாரிகள் வெள்ளை அரிசியைத் தரும் நெல்லையே நாடி நிற்கின்றனர்.

இதனால் ஏழை விவசாயிகள்தான் பாதிக்கப்படுகின்றனர். இவர்களால் தமது அறுவடைச் செலவை ஈடு செய்ய முடியவில்லை. விற்க முடியாது தேங்கிக் கிடக்கும் நெல்லைச் சேமித்து வைக்கவும் வீடுகளில் இடவசதியில்லை.

இதையெல்லாம் இங்குள்ள அரச அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாததால் தமது துயரங்கள் தொடர்வதாக மக்கள் விரக்தியுடனும் வேதனையுடனும் தெரிவிக்கின்றனர். (க-500)

## பொன்சேகாவுக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு



கொழும்பு,ஜூலை 28

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது இராணுவத்திலிருந்து தப்பியோடிய 10 பேருக்கு வேலை மற்றும் தங்குமிடம் வழங்கியதாக சரத் பொன்சேகாவுக்கும் அவரது செயலாளருக்கும் எதிராகத் தொடரப்பட்ட வழக்கே நேற்று ஒத்தி வைக்ககப்பட்டுள்ளது.

நேற்றைய வழக்கு விசாரணைகளின்போது சரத் பொன்சேகா நீதிமன்றில் சமுகமளித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன. (த)

## வன்செயல்களால் இறந்த அலுவலர்களின் விவரம் திரட்டுகிறது உள்ளூராட்சி சபை

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றி, கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களால் இறந்தவர்களின் விவரங்கள் மாகாண உள்ளூராட்சி சபைகளினால் திரட்டப்பட்டு வருவதாக உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கடந்த காலங்களில் இடம்பெற்ற பயங்கரவாதம் மற்றும் வன்செயல்கள் மூலம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றி இறந்தவர்களின் விவரங்களே இவ்வாறு திரட்டப்படவுள்ளன.

இறந்த உத்தியோகத்தர்களுக்கான மரணப்பணிக் கொடை, நட்டஈட்டுக் கொடுப்பனவு, விதவைகள், அநாதைகளுக்கான ஓய்வூதிய இலக்கம் பெறுதல் என்பன தொடர்பில் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (16-41)

### கண்காணிப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான ஓகஸ்ட் மாதத்துக்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளதாக பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (16)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழுள்ள 12 பாலர் பாடசாலைகளுக்குமான விளையாட்டு விழா நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. எஸ்.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா கலந்துகொள்வார். (16)

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தின் 1974 ஆம் ஆண்டில் பிறந்த 8 இல் செவ்வாயும் அதன் கிரகபாவம் 63¼, ஆயிலிய நட்சத்திரமும் அமையப்பெற்ற, அரச சேவையில் பணிபுரியும் பட்டதாரி (BBA, MA) சகோதரிக்கு, சகோதரன் தகுந்த மணமகனை தேடுகின்றார்

தொடர்பு : 077 1744581, +41789171874

(20609)(6-7-8)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் பொற்பதி வீதி, உடையார் லேனில் (100m) தொலைவில் உள்ள காணி பரப்பு 5 விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு : 077 3161822, 077 0463841

(20571)(6-8-8)

**வேலைவாய்ப்பு**

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

★ நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
★ பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடிநிற்பவரா?
★ துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
★ 18 வயதினைக் கடந்தவரா?
★ குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
★ ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
★ சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
★ ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரசநிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்!

தகைமை

G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக.

நீங்கள் எம்முடன் இணைந்தால்.

★ அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
★ வெளிநாட்டுச் சுற்றுலா
★ ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
★ இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
★ வாகன கடனுதவி
★ போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
★ தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE, சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF.ETF வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்

காப்புறுதியில் முன்அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 15.08.2012 முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்
இல.571, ஆஸ்பத்திரிவீதி.
யாழ்ப்பாணம்.

(20694) (2-6-7)

**தேவை**

சமையலாளர் தேவை (ஆண்/பெண்)
தொடர்பு:0771993338, 077 2436615

(20991) (2-6-7)

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் சுன்னாகம் சந்திக்கும் சுன்னாகம் பொது நூலகத்துக்கும் இடையில் இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கும் உகந்தது.

தொடர்பு:- 0772830703

(20962)(6-7-2)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973, நட்சத்திரம் பூசம், உதயத்துச் செவ்வாய் (தோஷமற்றது) உடைய அரச திணைக்களம் ஒன்றில் வேலையாற்றிக்கொண்டிருக்கும் சிவந்த, மெல்லிய , அழகிய தோற்றமுடைய மணமகளுக்கு வரன் தேவை. மணமகன் வெளிநாட்டில் PR உடன் பணிபுரிபவராக இருத்தல் வேண்டும்.

தொடர்பு:- 0771250332
Email:pcmallevr@gmail.com

(20822)(6-7-2)

**இறைச்சிக்கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்ட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் (18767)

**வீடு உடன் விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை, சங்கரப்பிள்ளை வீதியில் 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. வீடு காலியான நிலையில். தரகர் தேவையில்லை.

தொடர்பு:-
0718560372, 021 225 5491

(21006)(6-7-2)

**வீடும் காணியும் விற்பனைக்கு**

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு ஐயனார் வீதியில் வீட்டுடன் 7 பரப்புக் காணியும், சாவகச்சேரி மகளிர் பாடசாலை வீதியில் 7 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. (தரகர் இல்லை)

தொடர்பு:- 021 2270027, 0776452487

(18125)(6-7-2)

**காணி வீடு விற்பனைக்கு**

இருபாலை றோட், கோண்டவில் கிழக்கு பழனியாண்டவர் கோயிலுக்கு அருகில் மூன்று பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. அத்துடன் பக்கத்தில் நான்கு பரப்பு வெறுங்காணி இருபக்கப் பாதையுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : (M. Thavam)
077 4131740

(20882)(6-6-7)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. 90/=

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.

(20982)(6-7-8)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

நல்லின சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

* றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே. 0776090926

(20984) (3.6.7)

**உங்கள் வீடுகளில் மின்சாரம் இல்லையா ?**
**மின் வெட்டினால் தொழில் பாதிப்படைகின்றதா ?**



சூரிய ஒளியில் இருந்து Solar மூலம் எவ்வித செலவுமின்றி 24 மணி நேரமும் குறைந்த செலவில் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.



1) 4200/= இற்கு
( 5w Solar ஒரு மின்குமிழ் Battary, Phone Charger)
2) 16, 900/= இற்கு
20 w Solar, 35Am பற்றறி, 3மின்குமிழ், Phone Charger
3) 28, 000/= இற்கு
40w Solar, 45Am பற்றறி, 5 மின்குமிழ், Phone Charger
4) 75,000/= இற்கு
120w Solar, 90Am பற்றறி, 6 மின்குமிழ் 1000w இன் வேட்டர் அல்லது DC TV, Phone Charger
5) 160, 000/= இற்கு
240w Solar, 10 மின்குமிழ், 180Am பற்றறி, 1000w இன் வேட்டர் Phone Charger
6) 375, 000/= இற்கு
360w Solar 10 மின்குமிழ், 120Am பற்றறி (2) (1½ " DC Motor)
Solar, Battary, DcBulb உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

விபரங்களிற்கு: New Asian Center,
56/15B, ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கி அருகில்) யாழ்ப்பாணம்
T.P : 077 8249949, 077 6048646

குடு[illegible] மாதாந்தம் செலுத்துவதற்கும் ஒழுங்கு செய்து தரப்படும்

எமது நிறுவனத்தில்



Latest Mobile Phoneகள், Digital Camera திருத்திக் கொடுக்கப்படும்.
Digital Camera களிற்குரிய பற்றறிகள் Chargerகள் விற்பனைக் குண்டு.



T.P : 077 6510134

(C/1723)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கிண்ணம் பற்றிமாவுக்கு

## றேஞ்சர்ஸின் போராட்டம் வீணானது





யாழ்ப்பாணம் ஜூலை 28

ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம், சென்.ஜேம்ஸ் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு தீவக ரீதியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் எழுவைதீவு பற்றிமா விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் எழுவைதீவு பற்றிமா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இரு அணிகளும் சமபலம் கொண்டவையாக இருந்த போதிலும் பற்றிமா விளையாட்டுக்கழகத்தின் ஆதிக்கமே களத்தில் தொடர்ந்தது. எனினும் பதிலடி கொடுக்கும் நோக்கத்துடன் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் ஒவ்வொரு சுற்றுக்களின் இறுதியிலும் விட்ட தவறுகள் காரணமாக வெற்றியை கோட்டை விட்டது.

எனவே 5 சுற்றுக்களை கொண்ட இறுதியாட்டத்தில் எழுவைதீவு பற்றிமா விளையாட்டுக்கழகம் முதல் மூன்று செற்களிலும் 25:22, 25:20, 25:21 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று, சென். ஜேம்ஸ் தொடரின் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் சிறந்த வீரராக எழுவைதீவு பற்றிமா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (ங-23)

## உழவர் ஒன்றிய உதைபந்து ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை28

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் நடத்தும் முன்னாள் கழக வீரர் அமரர் பத்மேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் குறித்த சுற்றுப் போட்டி ஆட்டங்கள் எதிர்வரும் செவ்வாய்கிழமை வரை இடம் பெறவுள்ளன. இந்தச் சுற்றுப் போட்டியில் 19 உதைபந்தாட்ட அணிகள் பங்கு பற்றுகின்றன என்று உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ங-23)

## முல்லை ம.வி மாணவர்கள் பதக்கவேட்டை



யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் பங்கு பற்றிய முல்லைத்தீவு மகா வித்தியாலயம் 2 தங்கம், 7 வெள்ளி, 9 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக 18 பதக்கங்களைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இடப்பெயர்வின் பின்னர் எதுவித அடிப்படை வளங்களும் அற்ற நிலையில் மீள இயங்கத் தொடங்கியுள்ள முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் தமது திறமையின் மூலம் மாகாண ரீதியில் சாதித்து பதக்கங்களை வென்று விளையாட்டுத் துறையினரின் கவனத்தை தம்பக்கம் ஈர்த்துள்ளனர்.

மாகாண மட்ட தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 5000,1500 மீற்றர் ஓட்ட நிகழ்வுகளில் புதிய சாதனைகளை நிலைநாட்டிய முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவன் கி.வினோத், விதுர்தன் ஒரு தங்கப் பதக்கத்தையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வித்தியாலய மாணவியான பு.சுவேந்தினி பெண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் முதலாமிடம் பெற்று தங்கப் பதக்கத்தினையும் கராத்தே போட்டியில் தலா ஒரு வெள்ளி, மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் என்பவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.பிரவீன் ஆண்களுக்கான தடைதாண்டல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தினை அடைந்து வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.

அத்துடன் இன்னொரு வீரரான அ.சிறி ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் வெண்கலப்பதக்கத்தினையும் வீராங்கனையான ம.ஜெயவதனா பெண்களுக்கான 1500, 800 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பங்கு பற்றி இருவெண்கலப் பதக்கங்களையும், கராத்தே போட்டிகளில் உதயான் இரு வெள்ளிப் பதக்கங்களையும், ச.சுலக்சன் மற்றும் மா.பிருந்தன் ஆகியோர் தலா ஒரு வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்று, பாடசாலைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்

அத்துடன் 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்திலும் விதுர்தன், பிரவீன், நிகாந்தன், நியூசன் ஆகியோர் வெண்கலப்பதக்கத்தை பெற்றுக் கொடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ங-23)

## பணிந்தது பரிஷ் அணி வென்றது கே.ஸி.ஸி.ஸி



யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 43.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 196 ஓட்டங்களை பெற்றது.

இதில் சபேஷன் 18 ஓட்டங்களையும், டில்சான் 19 ஓட்டங்களையும் கரிகரன் 56 ஓட்டங்களையும் ஹரிப்பிரசாத் 29 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக வீரர்களான உமாநாத் 4 இலக்குகளையும், சாம்பவன் 3 இலக்குகளையும் சிலோசன், ஜனுதாஸ் ஆகியோர் தலா 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

197 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியினர் 34.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 197 ஓட்டங்களை பெற்று 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டினர். இதில் உத்தமகுமரன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், வல்லவகுமரன் 52 ஓட்டங்களையும் பங்குயன் 12 ஓட்டங்களையும், சாம்பவன் 18 ஓட்டங்களையும் உமாநாத் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர். (ங-23)

## கரப்பந்தாட்ட பயிற்சி முகாமும் உபகரணம் வழங்கும் நிகழ்வும்

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று சனிக்கிழமை காலை 8 .30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. மேற்படி பயிற்சி முகாமில் கிரிடா சக்தி திட்டப் பணிப்பாளர் நந்தசேன கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார். இவருடன் இணைந்து கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் தயாளபாலன், தர்மிகன் ஆகியோரும் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகளுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் [illegible] முகாமை தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர் [illegible]களுக்கு கரப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ஈஸ்வரராஜாவும் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் சேவைகள் அதிகாரி சபேசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ங-23)

## விருதுபெற்ற வீரர்கள் -21 வயதுப் பிரிவு (ஆண்கள்)



வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இதில் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த தட[illegible], சிறந்த களவீரராக தெரிவு வீரனாக மட்டுவில் சந்திரபுர சந்திரோதய வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ராஜ்கரனுக்கு கல்வி வலயப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கின்றார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓஜா பந்தை எறிகிறார்




இந்திய அணியின் இளம் இடதுகைச் சுழற்பந்து வீச்சாளர் பிரக்ஜான் ஓஜா பந்தை எறிகிறார் என்று இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான பிஷன் சிங் பேடி தெரிவித்துள்ளார். மேற்கு வங்கக் கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கல் விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே சுழற்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு முறை குறித்து கருத்துக்களைத் தெரிவித்து சர்ச்சைகளை ஏற்படுத்தும் வழக்கமுள்ள பிஷன் சிங் பேடி, இதுவரை முத்தையா முரளிதரன், ஹர்பஜன் சிங் உட்பட ஏராளமான சுழற்பந்து வீச்சாளர்கள் பந்தை எறிகிறார்கள் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விருது வழங்கல் விழாவில் மேலும் கருத்துத் தெரிவித்த பிஷன் சிங் பேடி, இந்தியாவின் தற்போதைய முன்னணிச் சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் மிகவும் திறமையான சுழற்பந்து வீச்சாளர் எனத் தெரிவித்தார். மிக வும் புத்திசாதுரியமுடைய ஒரு பந்துவீச்சாளர் என்று அஸ்வினை அழைத்த அவர், எனினும் அஸ்வின் தன்னை டெஸ்ட் போட்டியில் நிரூபிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பிரக்ஜான் ஓஜா கழுத்தில் பந்தால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் வைத்தியசாலைக்குச் சென்று திரும்பியுள்ளார். நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வலைப் பயிற்சியின் போதே அவர் பந்தால் தாக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்றுமுன்தினம் அவர் பந்தால் தாக்கப்பட்ட நிலையில் கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டார். இன்று இடம்பெறவுள்ள 3 ஆவது ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் பிரக்ஜான் ஓஜா பங்குபற்ற முடியுமா அல்லது பங்குபற்ற மாட்டாரா என்பது தொடர்பாக விவரங்கள் இதுவரை தெரியவரவில்லை.

அண்மைக்காலமாக இந்திய அணியில் இடம்பெறுவதும், வெளியேறுவதுமாகக் காணப் பட்ட பிரக்ஜான் ஓஜா, இந்தத் தொடருக்காக இந்திய அணியில் சேர்க்கப்பட்டிருந்தார். முதலாவது ஆட்டத்தில் மஹேல ஜெயவர்த்தனவின் இலக்கைக் கைப்பற்றிய போதிலும், அவர் அதிகமான ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார். இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி இலகுவாக வெற்றிபெற்றிருந்த நிலையில் 5 பந்துகளை மாத்திரமே வீசும் வாய்ப்பு ஓஜாவிற்குக் கிடைத்திருந்தது. (5)

## அடுத்த கட்டம் குறித்து கவனம்




உலகின் முதற்தர அணியாக வருவதற்குரிய ஒரு தடையைத் தாண்டியுள்ள நிலையில் அடுத்த கட்டம் குறித்துத் தென்னாபிரிக்க அணி தனது முழுமையான கவனத்தைச் செலுத்துவதாக தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளர் ஹரி கேர்ஸ்டன் தெரிவித்துள்ளார். உலகின் முதற்தர அணியாகத் தொடர்ந்து நீடிப்பதற்கு ஏராளமான கடின வேலைகள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், அவற்றில் தென்னாபிரிக்க அணி தனது கவனத்தைச் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

உலகின் முதற்தர அணியைத் தீர்மானிக்கும் தொடராக இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுக் கொண்ட நிலையில் அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றுக் கொண்ட போதிலும், அடுத்த கட்டம் குறித்துக் கவனம் திரும்பியுள்ளதாகத் தெரிவித்த அவர், நாங்கள் உலகின் முதற்தர அணியாக வர விரும்புகிறோம் என்பதை நாங்கள் அனைவரும் உணர்ந்துள்ளோம் எனத் தெரிவித்ததோடு, அதற்கு என்னவாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதையும் நாங்கள் அறிந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

2 இலக்குகளை மாத்திரம் இழந்து முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றியைப் பெற்றுக் கொண்ட நிலையில் ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பெடுத்தாடாத நிலையில் அவர்களின் துடுப்பாட்ட திறன் குறித்து அறிய முடியாமை பற்றிக் கவலையடையவில்லை எனத் தெரிவித்த கேர்ஸ்டன், தென்னாபிரிக்க அணியின் வீரர்கள் அனைவரும் தங்களது இலக்கை முக்கியமானதாகக் கருதி ஆடக்கூடிய வீரர்கள் எனத் தெரிவித்தார். (5)



## 'மக்கிப் போன மரமே'

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கை, இங்கிலாந்தை சேர்ந்த நபர் ஒருவர் 'டுவிட்டர்' இணையத்தளத்தில் கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்த்துள்ளார்.

மோசமான ஆட்டம் காரணமாக இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட ஹர்பஜன் சிங், கடந்த ஐ.பி.எல். - 5 தொடரிலும் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு சோபிக்கவில்லை. இதனால் தற்போது இலங்கை சுற்றுப்பயணத்தில் உள்ள இந்திய அணியிலும் ஹர்பஜனுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இங்கிலாந்தின் பிராந்திய அணிக்காக விளையாடி வருகிறார் ஹர்பஜன் சிங். ஆனால் பிராந்திய தொடரிலும் இலக்குகளை வீழ்த்த முடியாமல் இவர் திணறி வருகிறார். இதனால் இந்திய ஊடகங்கள் இவரை கடுமையாக விமர்சனம் செய்தன. இதில் அதிருப்தி அடைந்த ஹர்பஜன் சிங், இந்திய ஊடகங்கள் ஒன்றுமே இல்லாததை கூட செய்தியாக வெளியிடும். இந்திய ஊடகம் என்றாலே 'தமாஷ்' என்று பொருள் என்று 'டுவிட்டரில்' கருத்து தெரிவித்தார்.

இந்த நிலையில் இங்கிலாந்தை சேர்ந்த டாமி ஜான்சன் என்பவர் 'டுவிட்டர்' இணையதளத்தில் ஹர்பஜனை கெட்ட வார்த்தைகளால் திட்டி தீர்த்துள்ளார்.

இதன் இடையே டாமி ஜான்சனின் மோசமான வார்த்தைகளுக்கு அஜய் சதீஷ் என்பவர் கண்டனம் தெரிவித்தார். அவர் கூறுகையில், ஹர்பஜன் சிங்கை மோசமாக விமர்சித்த டாமி ஜான்சன் மீது நான் முறைப்பாடு தெரிவிக்க உள்ளேன் என்றார்.

இங்கிலாந்து பிராந்திய அணிக்காக விளையாடி வரும் ஹர்பஜன் சிங், இலக்குகள் எடுக்காமல் சொதப்பி வருவது பிராந்திய அணி ரசிகர்களுக்கு கூட கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. (5)

**டாமி ஜான்சன்:** நான் ஒரு இங்கிலாந்து குடிமகன் என்று சொல்லிக் கொள்ள பெருமைப்படுகிறேன். ஹர்பஜன் சிங், நீ யாருடன் 'டுவிட்டிங்' செய்து கொண்டிருக்கிறாய் என்று தெரியுமா? நான் உனது தலையில் உள்ள தலைபாகையை கிழித்து, அடித்து கரைத்து விடுவேன்.

**ஹர்பஜன் சிங்:** நீ ஒரு கிறுக்கன் போல இருக்கிறது. உனக்கு கடவுள் நல்ல புத்தியை தரட்டும். விரைவில் குணமாகு


**டாமி ஜான்சன்:** 'மக்கி போன மரமே, உனது ...., தலைபாகை கலைத்து எறிந்துவிடு'

**ஹர்பஜன் சிங்:** ஜான்சன், உனது பெற்றோர் இப்படியா சொல்லி வளர்த்தார்கள்? உனக்கு தைரியம் இருந்தால், பந்துடன் நேரில் வா. நீ சொல்வதை உன்னால் செய்ய முடியுமா என்று பார்ப்போம். ஒழுங்காக பேச கடவுள் உனக்கு நல்ல புத்தி தரட்டும் எனது சகோதரனே...

**டாமி ஜான்சன்:** நான் ஒரு உதைபந்து போக்கிரி. எனது பெயர் டாமி ஜான்சன். உன்னை விட பல பெரிய ஆள்களை பார்த்தவன் நான். எனக்கு கடவுள் கோகோயின் போதைப் பொருளை இன்னும் தர வேண்டும்.

## காதலித்தாலும் நம்புவது இல்லை






நான் உண்மையாகக் காதலித்தாலும் யாரும் என்னை நம்புவது இல்லை என்று ரியல்மாட்ரிட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ வருத்தம் தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு பல தோழிகள் உள்ளனர். அவருக்கு ஒரு ஆண் குழந்தை கூட உண்டு. ஆனால் அந்தக் குழந்தைக்கு தாய் யார் என்று இன்று வரை உலகுக்குத் தெரியாது. அந்த குழந்தையை ரொனால்டோவின் சகோதரி வளர்த்து வருகிறார்.

தற்போது ரொனால்டோ ரஷ்யாவை சேர்ந்த பிரபல மொடல் அழகி இரியானா ஷாயக்குடன் சுற்றித் திரிகிறார். இந்த நிலையில் தாய்லாந்து தொலைக் காட்சி ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், பெரும்பாலும் பெண்களின் இதயத்தையே பார்த்தே நான் காதலிக்கிறேன். ஆனால் யாரும் என்னை புரிந்து கொள்வது இல்லை. நான் அவர்களுக்கு உண்மையாக இருந்தாலும் அவர்கள் என்னை நம்புவது இல்லை, என்று தனது வருத்தத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

மேலும் தனது மகன் குறித்து கூறுகையில், எனது மகன் பிறந்தது எனது வாழ்க்கையில் மறக்க முடியாக நிகழ்ச்சி. அவன் என்னைப் போலவே இருக்கிறான். என்னைப் போலே அடர்த்தியான சுருட்டை முடி அவனுக்கு இருக்கிறது. வீட்டில் இருக்கும் சமயத்தில் எப்போதும் என் மார்பின் மீதுதான் உறங்குகிறான். உதைபந்துக்காக அவனை விட்டு பிரிந்து செல்வதுதான் எனக்கு கடினமான விடயமாக இருக்கிறது, என்று தனது மகன் குறித்து புலகாங்கிதம் அடைந்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு 27 வயது ரொனால்டோவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு தாய் யார் என்பதை இன்னமும் ரொனால்டோ அறிவிக்கவில்லை. (5)

## டுவீட்டர் வாசகத்தால் ஒலிம்பிக்கில் இருந்து நீக்கம்



'டுவிட்டர்' இணையத்தளத்தில் இனவெறியைத் தூண்டும் வகையில் செய்தி வெளியிட்ட கிரீஸ் வீராங்கனை, ஒலிம்பிக் போட்டியில் இருந்து நீக்கப்பட்டார்.

கிரீஸ் நாட்டின் முப்பாய்ச்சல் வீராங்கனை பராஸ்கெவி பபாகிறிஸ்டோ (வயது - 23). தற்போது லண்டனில் உள்ள கிரீஸ் அணியில் இடம் பெற்றுள்ளார். கிரீசில் தற்போது பரவி வரும் வைரஸ் காய்ச்சலில் ஒருவர் பலியானார். ஐந்து பேர் வைத்தியசாலையில் உள்ளனர். இதுகுறித்து பராஸ்கெவி வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தி, இனவெறியைத் தூண்டும் வகையில் இருந்தது.

இதனால், ஒலிம்பிக் போட்டிக்கான கிரீஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டார். இது குறித்து கிரீஸ் அணியின் தலைவர் இசிடோரோஸ் கூறுகையில், ஒலிம்பிக்கின் அடிப்படை விதியைக் கூட மதிக்காமல் நடந்து, தவறு செய்துள்ளார். வேறு வழியின்றி கிரீஸ் அணியில் இருந்து நீக்கப்படுகிறார், என்றார்.

இதனிடையே, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து பராஸ்கெவி கூறியதாவது:

எனது 'டுவிட்டரில்' வெளியான செய்திக்காக, எனது நண்பர்கள் சக வீரர், வீராங்கனைகளிடம் இதயப்பூர்வமான முறையில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்பது எனது கனவு, நிறைவேறாமல் போய்விட்டது. எனது தவறை ஏற்றுக் கொண்டு, எதிர்காலத்தில் மக்களும், அணியும் எனது தடகள வாழ்க்கைக்கு உதவ வேண்டும். இதுகுறித்து எனது குடும்பத்தினரிடமும், பயிற்சியாளரிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (5)

## மஹிந்த குடும்பத்துக்கு ஒப்பந்தம் வழங்கியதில் முறைகேடில்லை

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை சி.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டமை வெளிப்படையானதாகவே இடம்பெற்றதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார். வழங்கப்பட்ட ஒளிபரப்பு உரிமையில் முறைகேடுகள் எவையும் இடம்பெறவில்லை எனவும் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளரான நிஷாந்த ரணதுங்க, குறித்த சி.எஸ்.என். நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் செயற்படுகிறார். இந்த நிலையிலேயே குறித்த உரிமை குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டமை குறித்து அதிக சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருந்தன. அத்துடன் சி.எஸ்.என் நிறுவனமானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களினுடையது என்பதானால் குறித்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது என்றும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இதில் கருத்துத் தெரிவித்த நிஷாந்த ரணதுங்க, குறித்த உரிமை வெளிப்படையான அடிப்படையிலேயே வழங்கப்பட்டதாகவும், அத்தோடு குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தில் ஜனாதிபதியின் மகன்களுக்கு எந்தவித சம்பந்தங்களும் கிடையாது எனவும் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் குறித்த நிறுவனத்தை ஜனாதிபதியின் மகன்கள் உரிமைப்படுத்தியிருப்பதாகவே தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியொன்றில் இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச குறித்த கருத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். ஒரு நிறுவ்னம் ஜனாதிபதியின் மகன்களால் நடாத்தப்படுகிறது என்பதற்காக மாத்திரம் குறித்த நிறுவனத்தை நிராகரிக்க [illegible]யாது என்று அவர் பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறி[illegible]ந்தார்.

அதன் பின்னர் அவர் தான் அவ்வாறு தெரிவித்திருக்கவில்லை எனத் தெரிவித்த போதிலும் பி.பி.சி. சிங்கள சேவையில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குறித்த நேர்காணலில் அவர் ஜனாதிபதியின் மகன்கள் சி.எஸ்.என். நிறுவனத்தின் உரிமையாளர்களாகக் காணப்படுவதை ஏற்றுக் கொள்வது தெளிவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 Course fee Free
(எதாவது ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு)
Multimedia, Hardware, Networking
Ms office, Web Design, DTP
English, Singalam, Accounting
Duration 2 Month only
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
பூரண அறிவிற்கான உத்தரவாதம். (A/1741) 243, Adiyapatham Road, Kalviyankadu

# சங்கா தொடர்ந்தும் முன்னிலை



சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்பட்டுள்ள தரவரிசைப் பட்டியலில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கை வீரர் குமார் சங்ககார தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நிறைவுபெற்றவுடன் வெளியிடப்பட்டுள்ள இந்தத் தரப்படுத்தலில் தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர்களும், பந்துவீச்சாளர்களும் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கையின் குமார் சங்ககார தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகின்ற போதிலும், இங்கிலாந்திற்கெதிராக சதம்பெற்ற ஜக்ஸ் கலிஸ், முச்சதம் பெற்ற ஹசிம் அம்லா ஆகியோர் குமார் சங்ககாரவை நெருங்கியுள்ளனர். குமார் சங்கக்கார 892 புள்ளிகளுடன் முதலிடத்தில் காணப்பட - ஜக்ஸ் கலிஸ் 874 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்திலும், ஹசிம் அம்லா 872 புள்ளிகளோடு மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன் முதலிடத்தில் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்படுகிறார். சயீட் அஜ்மல் 2 ஆம் இடத்திலும், ரங்கன ஹேரத் 3 ஆம் இடத்திலும் காணப்படும் அதேவேளை, வேர்ணன் பிலாந்தர் 4 ஆம் இடத்தில் தனது வாழ்வின் மிகச்சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் காணப்படுகிறார்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல்
1. குமார் சங்ககார (இலங்கை)
2. ஜக்ஸ் கலிஸ் (தெ. ஆபிரிக்கா)
3. ஹசிம் அம்லா (தெ. ஆபிரிக்கா)
4. ஷிவ்நரின் சந்தர்போல் (மே. தீவுகள்)
5. ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தெ. ஆபிரிக்கா)
6. கிரேம் ஸ்மித் (தெ. ஆபிரிக்கா)
7. மைக்கல் கிளார்க் (ஆஸ்திரேலியா)
8. அலஸ்ரெயர் குக் (இங்கிலாந்து)
9. ரோஸ் ரெய்லர், (நியூஸிலாந்து)
யுனிஸ்கான் (பாகிஸ்தான்)

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தல்
1. டேல் ஸ்ரெய்ன் (தெ. ஆபிரிக்கா)
2. சயீட் அஜ்மல் (பாகிஸ்தான்)
3. ரங்கன ஹேரத் (இலங்கை)
4. வேர்ணன் பிலாந்தர் (தெ. ஆபிரிக்கா)
5. ஜேம்ஸ் அண்டர்சன் (இங்கிலாந்து)
6. மோர்னி மோக்கல், (தெ. ஆபிரிக்கா)
பென் ஹின்பன்ஹோஸ் (ஆஸ்திரேலியா)
8. பீற்றர் சிடில் (ஆஸ்திரேலியா)
9. ஸ்ருவேர்ட் புரோட் (இங்கிலாந்து)
10. அப்துர் ரெஹ்மான் (பங்களாதேஷ்) (5)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் சந்திரலிங்கம்



யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும் (Luzern) சுவிஸில் தற்போது வசித்து வந்தவருமான வீரசிங்கம் சந்திரலிங்கம் 13.07.2012 வெள்ளிக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் சுதாஜினியின் (சுசி) பாசமிகு கணவரும், சர்மினி, சுஜீபன், சிந்துஜன் ஆகியோரின் அன்புத்தந்தையும் , காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், திருச்செந்தூர்நாதன்- காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், இராசமணி (கனடா), தங்கவடிவேல் (நீர்வேலி), காலஞ்சென்ற சிவமணி மற்றும் சக்திவடிவேல் (கனடா), பரமசிவன் (கொலன்ட்), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் கனகம்மா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் ராகினி, கிளி, ஜனா, சுதாகரன் (பிரான்ஸ்), சுபாஜினி (சுவிஸ்), சுகிர்தா, சுகந்தன், சுதர்சன், சுகனியா, சுதர்ஜினி, சுபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

துக்க அனுஷ்டிப்பு கயட்டைப்புலம், கோப்பாயில் உள்ள திருச்செந்தூர்நாதனின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கயட்டைப்புலம்,*
*கோப்பாய்.*

(20970) (3.6.14)

*தகவல்*
*சு.திருச்செந்தூர்நாதன்*
*(மாமன்)*

## மரண அறிவித்தல்

### கந்தையா யோகநாதன்



தாமோதரம்பிள்ளை வீதி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா யோகநாதன் (26.07.2012) வியாழக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சோதீஸ்வரியின் அன்புக் கணவரும் வினோதன் (டுபாய்), சுபேதினி (பொது சுகாதார குடும்பநல உத்தியோகத்தர்), காயத்திரி (கனடா), வித்தகன் (மேர்க்கன் ரைல் பாதுகாப்பு சேவை) ஆகியோரின் அன்புத்தந்தையும், சயந்தன் (பொதுசுகாதார பரிசோதகர்), கௌதமன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் முகிலன், காவேரி ஆகியோரின் அன்புப்பேரனும், கணேசமணி, பரமேஸ்வரி, கனகரத்தினம், தபோநிதி (ரவி), குலேந்திரன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற ஜீவகுமார் மற்றும் பாரதி ஆகியோரின் சகோதரனும், சின்னத்துரை, தங்கம்மா, காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆசீர்வாதம் வீதி, உசன்,*
*மிருசுவில்.*

(சி/1756) (3.14)

*தகவல்:*
*குடும்பத்தினர்*

**A/L வரலாறு 2012**
**மாபெரும் கருத்தரங்கு**
இடம்- D.M.I யாழ்ப்பாணம்
நேரம்- காலை 8 மணிமுதல்
பிற்பகல் 2 மணிவரை
காலம்- 29.07.2012 (ஞாயிறு)
31.07.2012 (செவ்வாய்)
**வளவாளர்கள்**
M.பத்மநாதன் B.A (Hons)
His.Spl.M.A(History)
S.சுஜீகரன் B.A(SL)
கட்டணம்- 350ரூபா
★இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக இம்முறை 500 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
(20831) (3.6.7)

**விற்பனைக்கு**
Benly-125 GG
Twin- 125 GO
Yamaha- RZ-125
(21037)(15-14)
Contact -
0778448914
0757645910

Jenny Cabs
TAXI
Dropping Charge 1km - 45/=
Up & Down Charge 1km - 35/=
CALL TAXI
077 4949555
No.15, Sirampiyadi lane,(above cosy Hotel ) Jaffna.
Hotline: 077 4949555 Land Phone: 021 222 8250
(சி/1462)

**தேவை**
யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருந்தும் தகவல் சேகரிப்பாளர் தேவை.........
தொடர்புகளுக்கு-
0774449594
(சி/1694) (3.6.7)

**கணினி மலிவு விற்பனை**
Intel 3.2 GHZ D/Core, 500GB Hard Disk, 1GB Ram, Keyboard, Mouse, Speaker, 19" LED Monitor, DVD writer,
Free :- WEB CAM / 4GB PEN / COVER / HEAD PHONE
மூன்று வருட உத்தரவாதம்
44,500/= மட்டுமே
SKY COMPUTER
162, Main Street, Jaffna.
0212221417 / 0777271645
(c/1713)

ANDRA வின் ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி
யாழ்குடா நாட்டில் முதன் முறையாக
உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த
விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி
அல்கா அஜித்துடன்
மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்
அல்காவின் ஆனந்த ராகங்கள்
றிக்கற் கிடைக்கும் இடங்கள்
ANDRA டிஜிற்றல் இமேஜ் 0750404144
எயார்கொம் ரவல்ஸ் 021 2219113
மண்டப வாயிலிலும்
இன்று மாலை 6.00 மணிக்கு
நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில்
நாளை மாலை 4.00 மணிக்கு
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்
Aircom Travels & Tours
தொ.பே : 021 2219113
WESTERN UNION Money Master
திருமண அழைப்பிதழ்கள்
10%
ANDRA WEDDING CARDS
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696
நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP (சி/1721)
Event Manegement : CEYLON ART CREATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நம்பிக்கை
எதிர்காலத்திற்கு
ஒளி அளிக்கும்
-தாகூர்-



வார வசந்தம் 01

உதயன் 28 ஜூலை 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு


# கடலை மீண்டும் ஆளமுடியுமா ?

துன்னாலைச் செல்வம்



விண் அதிர வெடித்துச் சிதறும் படகுகள் முன்பு எமக்கு வழிவிட்டன. இன்று கடலில் வழிவிடுவதற்கு எமக்கு எவரும் இன்றி கடல் மாதாவை வேண்டி நிற்கிறோம். இரத்தத்தால் குளிக்கும் கடலில்தான் அன்று எமக்கான பாதை அமைத்தோம். துப்பாக்கி குண்டுகளால் உயிர் பலி எடுக்கும் கடலில் மீன் பிடிப்பவர்களை வழியனுப்பிவிட்டு காத்துக் கிடக்கும் கரை மக்களின் வாழ்வில் அன்று விடியல் தெரிந்தது.

துரத்தும் போது ஓடியும், விரட்டும் போது ஆடியும் கடலில் மீன் பிடித்த காலம் பொற்காலம். கடலின் மடியில் சாய்ந்து அழுதாலும் கண்ணீரின் சூடுதெரியாது. கடலில் குண்டடிபட்டு வீழ்ந்து இறந்தாலும் கரை வாழ்வில் பெறுமதி கொண்டோம் .

ஆழக்கடலில் சென்று மீன் பிடிக்கும் போது கடற் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர் போன போதும் மீன் பிடிக்க முடிந்தது. அன்றைய கடல், வீரரான எமக்கு வழிவிட்டது. இன்றைய கடல் கோழையான எமக்கு வழிவிடத் தயங்குகின்றது.

டோரா வந்தாலும் சுறா பிடித்து வரும் மீனவனின் பிடிக்குள் வலிமை இருந்தது. இன்று அத்துமீறி நுழையும் மாற்றான் முகத்தில் உப்புக் காற்று வீசியடிக்கிறது. அவன் வலையில் மீன் படத் துடிக்கிறது . மாற்றான் வலை பட்டு கூனிக்குறுகி இருப்பது கடல் அல்ல, தமிழ் மீனவர் தான். மீனவர் குடும்பங்களில் பலர் மீன்பிடித் தொழில் இன்றி தமது வாழ்வினை நகர்த்த முடியாமல் தவிக்கின்றனர். தமது பிள்ளைகளை வளர்க்க முடியாதவர்களாக ஏதிலிகளாக நிற்கின்றனர்.

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன . வடபகுதியில் உள்ள கரையூர் மக்கள் மீன்பிடித் தொழிலையே வாழ்வாதார தொழிலாகக் மேற்கொண்டு வருகின்றனர். மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். மீனவர் பிரச்சினை தொடர்பில் அரசு கண்டும் காணாமல் இருப்பதால் மீனவர்கள் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தினை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர்.

''தரைமேல் பிறக்க வைத்தாலும், எங்களை தண்ணீரில் மிதக்க வைத்தான்'' என்று எம்.ஜி.ஆர் அன்று மீனவர் வாழ்வு பற்றி அழகாகப் பாடியுள்ளார் . ஆனால் இன்று மீனவர்கள் கடலில் மிதக்க முடியாமல் தரையில் மிதக்கிறார்கள். இவர்கள் வாழ்வில் எப்பொழுது விடியல் ஏற்படுமோ என்று சொல்ல முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது. இதனாலே இந்தப் போராட்டத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து சிங்கள மீனவர்கள் வெளியேறினால் மட்டுமே அந்தப் பகுதி மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்வதாக கருதமுடியும். இல்லாது போயின் அவர்களின் மீன்பிடித் தொழிலை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத அபாய நிலை ஏற்படும். தென்னிலங்கை மீனவர்கள் அந்தக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பதனால், அந்த மக்கள் வாழ்வாதாரத்தில் பின்னடைவை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடல் பிராந்தியத்தில் இலங்கையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி தென்னிலங்கையின் மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். இந்தப் பிரதேசத்தில் தங்கியுள்ள தென்னிலங்கை மீனவர்கள் இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளான வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல், சுருக்கு வலை பாவித்து மீன் பிடித்தல், சிலிண்டர் மூலம் மீன் பிடித்தல் ஆகியவற்றின் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக காலம் காலமாக இந்தப் பகுதியில் கரைவலையைப் பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவோர் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து முல்லைத்தீவு வரைக்குமான கடல் பகுதியின் இலங்கை கடல் எல்லைக்குள்ளேயே மீன்வளம் அதிகம் உள்ள பவளப் பாறைகள் காணப்படுகின்றன. இலங்கையிலேயே அதிக மீன் வளமுள்ள கடல் பிரதேசங்களாக காணப்படுகின்றன. 21,500 சதுரகிலோ மீற்றர் பரப்பளவுள்ள இந்தக் கடற் பிரதேசத்தின் கடல் வளங்களை அபகரிப்பதிலும் அந்தப் பிரதேசத்தின் மீன்வளம் அழிந்து போவதற்கும் தென்னிலங்கை மீனவர்களே காரணமாக அமைந்துள்ளனர்.

மூன்று தசாப்த போர் இடம்பெற்ற காலப்பகுதியில் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு சிங்களப் படைகளால் தடுக்கப்பட்டிருந்தனர். அந்தக் காலப் பகுதியில் மீன் பிடிக்க கடலில் இறங்குபவர்கள் உயிரோடு திரும்புவார்களோ என்ற நிலமை இருந்தது. இன்று போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் அந்தப் பகுதி மீனவர்கள் மீன் பிடிக்க முடியாத சூழலுக்குள் மாட்டிக் கொண்டுள்ளனர். இதனால் மீனவ குடும்பங்கள் தங்களது தொழில்களை இழந்து வறுமையில் வாடப் போகிறார்கள் என்பதை அறியாமல் இருப்பது தான் பெரும் கவலை தரும் விடயமாகும்.

தமிழர்களுடைய கரையோரப் பிரதேசங்களில் சிங்கள மீனவர்கள் குடியேற்றப்பட்டு வருவதால் தமிழர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்த இடங்களில் சிங்கள மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். சுண்டிக்குளம், முல்லைத்தீவு, திருகோணமலை, மூதூர், வாகரை, வாழைச்சேனை, ஏறாவூர், புன்னைக்குடா ஆகிய பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியேறி மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இந்தப் பகுதியில் இருக்கும் தமிழ் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை முழுமையாக மேற்கொள்ள முடியாதவாறு உள்ளனர்.

வடக்கில் மீன்பிடித் தொழில் சம்பந்தமான பிரச்சனைக்கு இராணுவ மயப்படுத்தல் ஒரு காரணமாக அமைகின்றது. இந்த இராணுவ மயப்படுத்தல் போரின் இறுதிக் கட்டத்தில் வலுப்படுத்தப்பட்டது. ஆனால் போர் முடிந்த பின்னரும் அது தளர்த்தப்படவில்லை. மீன் பிடிப்புக்கு பெயர்போன தமிழர்களுடைய கரையோரப் பகுதிகளில் சில இப்போதும் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குண்டுள்ளன. இதனால் அந்தப் பகுதி மீனவர்கள் அந்த இடங்களில் மீன் பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மீனவர்கள் சுதந்திரமாக தமது கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு மீனவ சங்கங்கள் உரிய நடவடிக்கையை எடுக்குமாக இருந்தால் இந்த மீனவர்களின் வாழ்வில் ஒளிவீசும்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலும் வடக்கு மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளில் ஒன்றாகும். சிங்கள மீனவர்களினதும் இந்திய மீனவர்களினதும் அத்துமீறலால் வடக்கு மீனவர்களின் மீன் பிடித் தொழிலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. படையினரின் அழுத்தம் மற்றும் அரசியல் தலையீடுகள் ஆகியவற்றின் மூலம் நியமனம் பெறுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகம் எப்பொழுதும் கடற்றொழிலாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியாது. கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக தமது நிர்வாகத்தை தெரிவு செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட முடியும்.



மீனவர்களின் சில சங்கங்களில் படையினரின் அழுத்தங்கள், அரசியல் தலையீடுகள் இன்றும் இருக்கின்றன. மீனவர் சங்க நிர்வாகங்களில் படைத்தரப்பு அரசியல் தலையீடு இருப்பதால் மீனவர் சங்கங்கள் சிறப்பாக இயங்க முடியாதுள்ளதாக கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். மீனவர் சங்கங்களில் படையினரின் தலையீடு இல்லாது இருப்பின் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மீனவர் சங்கங்கள் எடுக்க முடியும் என்பது உண்மை.

வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு தளர்த்தப்பட்டு விட்டதாக அரசு சொன்னாலும் இராணுவ ஆக்கிரமிப்பு அதிகரித்தே காணப்படுகின்றது. மீன்பிடி சமூகங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்களது வாழ்வாதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மீன்பிடிச் சமூகத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் இப்பொழுதும் நீடித்துக் கொண்டே இருக்கின்றன. தமிழ் மீனவர்கள் தமது பகுதியிலே மீன் பிடிக்க முடியாத ஒரு சூழலினை ஏற்படுத்திவிட்டு இந்தப் பகுதியில் சிங்கள மீனவர்களை மீன் பிடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நேரடியாக அனுமதி வழங்கியுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்து அனைத்தையும் இழந்து மீள்குடியமர்ந்த கரையோர மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான மீன் பிடித் தொழிலினை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் இன்றித் தொழிலை இழந்துள்ளனர். இவர்கள் பாரம்பரியமாக செய்துவந்த மீன்பிடித் தொழிலை மீண்டும் மேற்கொள்வதற்கு அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் சிங்கள மீனவர்களை தமிழர்களுடைய கரையோரப் பிரதேசங்களில் குடியேற்றி மீன் பிடிப்பதற்கான வசதி வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

குடாநாட்டில் கடற்றொழிலில் ஈடுபடும் மீன்பிடி வள்ளங்களை இலகுவில் இனங்காணும் வகையில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலக்கங்கள் குறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் வள்ளங்களில் ஒட்டும் நடைமுறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் பல இடங்களில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான மீன்பிடி வள்ளங்கள் ஆழ்கடலிலும் சிறு கடலிலும் மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில் ஈடுபடுத்தப்படும் வள்ளங்கள் காணாமல் போகும் சந்தர்ப்பங்களிலும், திருடப்படும் பொழுதும் மற்றும் சட்ட விரோத தொழில்களுக்கும் பயன்படுத்தப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களால் வள்ளங்களை இலகுவில் இனங்காண முடியாத நிலை ஏற்படுகிறது. இதையடுத்தே வள்ளங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோல் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படுமாயின் நிர்வாகம் சிறந்து செயற்படுகிறது என்பதனை வெளிக்காட்ட முடியும் .

தமிழ் மீனவர் விடயத்தில் அரசு கண்டும் காணாமலும் இருப்பதால் மீன் பிடித் தொழிலையே கைவிடும் நிலைக்கு பல மீனவர் குடும்பங்கள் உள்ளாகியுள்ளன. மீனவர் பிரச்சினை தொடர்பில் ஒரு முடிவு இல்லாது போயின் தமிழர் கடற்பரப்பில் சிங்கள மீனவர்களின் ஆதிக்கம் நிலைக்கும் என்பது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

**விதி ரேகையின் குற்றங்குறைகள் (தொடர்ச்சி)**



15 16 17

15.புத்தி ரேகையிலிருந்து சந்தர்ப்ப ரேகைகள் விதி ரேகையில் குறுக்கிட்டுச் சென்றிருந்தால் அது புத்திக் குறைவால் வந்த கஷ்டங்களைக் குறிக்கும்.

16.இருதய ரேகையின் சந்தர்ப்ப ரேகைகள் விதி ரேகையில் குறுக்கிட்டிருந்தால் காதல் வழியில் சிக்கி வாழ்க்கை தொலைந்ததைக் குறிக்கும்.

ஆயுள்ரேகையின் சந்தர்ப்ப ரேகை விதி ரேகையில் குறுக்கிட்டுச் சென்றிருந்தால் ஆரோக்கியம் குன்றிப் பிணி வாய்ப்பட்டு கஷ்டமுற நேரிடும்.

சுக்கிர மேட்டிலிருந்து ஒரு வேதனை ரேகை விதி ரேகையைக் குறுக்கிட்டிருந்தால், நெருங்கிய உறவினரின் மறைவால் தொழில் தடைப்பட்டுப் போனதைக் குறிக்கும். விதி ரேகை சில கைகளில் குரு மேட்டை நோக்கிச் செல்லுவதுண்டு. ஆனால் இதர கிரக மேட்டை நோக்கிச் செல்லுவதில்லை. குரு மேட்டை நோக்கி விதி ரேகை சென்றால் அளவற்ற ஆசையைக் குறிக்கும்.

சந்திர மேட்டில் உற்பத்தியான விதி ரேகை நேரே குருமேட்டை நோக்கிச் சென்றிருந்தால் ஒரு பெண்ணின் ஆதரவைக் கொண்டு வாழ்க்கையில் மேன்மையடைந்து வருவதைக் குறிக்கும்.

17.விதிரேகையினின்று ஒரு கிளை குரு மேட்டை நோக்கிச் சென்றிருந்தால் அபிலாஷைக்கு ஏற்றவாறு நடந்து அதிகாரத்தோடு தன் காரியத்தை முடித்துக் கொண்டவராவார். இத்தகையோர் சிறந்த அரச தலைவராய் இருப்பார்கள்.

18. விதிரேகையின் கிளையொன்று சூரியமேட்டை நோக்கிச் சென்றிருந்தால் ஓவியம், நடிப்பு முதலியவைகளில் தேர்ச்சி பெற்றுப் பிரசித்தமாய் வாழ்வர்.




19.விதி ரேகையின் கிளைகளிலொன்று குரு மேட்டையும் மற்றொன்று சூரிய மேட்டையும் நோக்கிச் சென்றிருந்தால் நல்ல அதிர்ஷ்ட வாழ்க்கையைக் குறிக்கும். மூன்று கிரக ஆதிக்கமும் அவைகளின் உயரிய குணங்களும் கிட்டும். ஞானம், செல்வம், புகழ், கீர்த்தி முதலியன பெருகும்.

20.விதிரேகையின் கிளையொன்று புதன்மேட்டை நோக்கிச் சென்றிருந்தால், தொழிலில் ஈடுபட்டு அபார அனுபவ ஞானம் பெற்று, திறமையுடன் காரியத்தைச் செய்து முடிப்பர்.

அநேகருக்கு விதி ரேகை சனி மேடுவரை செல்லுவதில்லை. ஐம்பதுக்குள்ளே நின்று விடுகிறது. விதி ரேகை நின்று தனித்தபோது ஆரோக்கியம் பாதிப்படைய நேரிடுகிறது.

விதி ரேகை சனிமேடுவரை சென்றி



18 19 20

ருந்தால் ஆயுள் முழுவதும் வருவாயோடிருப்பர்; வயதான காலத்திலும் புகழும் கீர்த்தியும் அவரைத் தேடிவரும்.

**செல்வாக்கு ரேகைகள்**

செல்வாக்கு ரேகை வளைத்துக் கொண்டிருக்கும். சுக்கிர மேட்டில் பலவித ரேகைகளிருக்கக் காணலாம். இந்த ரேகைகளைச் செல்வாக்கு ரேகைகளென்றும், சந்தர்ப்ப ரேகைகளென்றும் சொல்வதுண்டு. இந்த ரேகைகள் குறுக்காகவும் நெடுக்காகவும் அமைந்திருக்கும்.

1.இம்மாதிரி வலைபோன்ற ரேகைக் கூட்டம் சுக்கிர மேட்டிலிருப்பதைக் காணலாம். ஏற்றத்தாழ்வை எல்லாக் கிரகங்களும் கொடுத்தாலும் இந்தச் சுக்கிரன், நினைப்புக்கே எதிரீடாயிருந்து சங்கடத்தையும் வேதனையையும் கொடுக்கும். விதி ரேகையை ஒத்து இந்தச் சுக்கிர மேட்டு ரேகைகள் கஷ்ட நஷ்டங்களை நன்கு காட்டிக் கொடுக்கும். சுக்கிர மேட்டில் புத்தி ரேகை தோன்றினாலும் பழைய ரேகைகள் மங்குவதே கிடையாது.

செல்வாக்கு ரேகைகள் முக்கியமாக



நண்பர்களின் ஆதரவைக் குறிக்கும். சமமான வலைக்குறியிருந்தால் மிகுந்த காம இச்சையைக் குறிக்கும். இதுவே சுக்கிர தர்மம். ஆசை பங்கப்பட்டவிடத்து அவை ஆழப் பதிந்த குறுக்கிட்ட ரேகைகளாக அமைந்துவிடும்.

**(தொடரும்)**

---

■ வலையவன்

# வாழ்நாள் முழுமையும் இனிமையே

*(கடந்தவாரத் தொடர்ச்சி....)*

சித்தர்கள் ஒவ்வொருவரும் ஏராளமான கற்ப மூலிகைகள் குறித்து எழுதிச் சென்றனர். குறிப்பாக திருமூலர், கற்ப மூலிகைகளை 108 என வகைப்படுத்தி இருக்கிறார். சில உதாரணங்கள்: கீழாநெல்லி, வல்லாரை, நெல்லிக்காய், கற்றாழை, சிந்தில், வில்வம், கோரைக்கிழங்கு, பொன்னாங்கண்ணி, வேம்பு, அமுக்கரா, கடுக்காய், இஞ்சி, சுக்கு, எலுமிச்சை, தூதுவளை, துளசி, மிளகு, சீரகம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். குழந்தைகளுக்குத் தடுப்பூசி இட்டுக் கொள்ளல் அவசியம். அத்துடன் சித்த மருத்துவம் சொல்லும் உரைமாத்திரைகளையும் பயன்படுத்தலாமே!

உலகளவில் இன்று நாள்பட்ட நோய்களுக்கும், அழிவு நோய்களுக்கும் ஆன்டி - ஆக்ஸிடன்ட்ஸ் மருந்தைச் சேர்த்து வழங்குவதென்பது புதிய பாணி. சித்த மருத்துவம் நிறைய ஆன்டி - ஆக்ஸிடன்டுகளை என்றோ வழங்கி விட்டது. நெல்லிக்காய், திராட்சை விதை, சிந்தில், அமுக்கரா, கடற்பாசி போன்றவை அறிவியல்பூர்வமாக இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

நாம் எப்பொழுதுமே மருத்துவர் சொல்படி, வயது - உயரம் இவற்றுக்குத் தக்கவாறு உடல் எடையைப் பராமரித்தல் அவசியம். இதன் மூலம் மூட்டுவாதம், சர்க்கரை வியாதி, இருதயத் தடை, சிறுநீரகக் கோளாறு, ஹார்மோன் பிரச்சினைகள், ஸ்ட்ரோக் முதலியவற்றை இலகுவாகத் தடுத்திடலாம். உடல் எடை கூடின் உடற்பயிற்சி தேவை. எண்ணெய் மற்றும் கொழுப்புப் பதார்த்தங்களை ஒதுக்கித் தள்ள வேண்டும். இடையிடையே அளவில்லாமல் தின்பண்டங்களை நொறுக்கித் தள்ளுவது என்றுமே ஆபத்துதான்.

பதற்றம், உளைச்சல், அமுக்கம் அனைத்துமே மனம் சார்ந்து வருதலால், இதன் தொடர்பு நோய்களான சர்க்கரை வியாதி, உயர் ரத்த அழுத்தம், குடற்புண், மாதவிடாய்க் கோளாறுகள், ஞாபக மறதி, ஆஸ்துமா போன்றவை தாராளமாகின்றன. கைகூடவில்லையெனில் யோகமும், தியானமும், பிராணாயமும் நிச்சயம் கைகொடுக்கும் மருந்தாக அமையும்.

அடுத்ததாக தனிநபர் ஒழுக்கம் அதி முக்கியம். புகைபிடித்தலும், மது அருந்துதலும், புகையிலையை எந்த உருவிலேனும் உட்கொள்ளலும், பிற மாதர் நாடலும் கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். உள்ளுறுப்புக் கோளாறுகள், புற்றுநோய், எய்ட்ஸ் போன்றவற்றை இதன் மூலம் எளிதில் வெல்லலாம். அகத்தூய்மையை வாய்மையாலும், புறத்தூய்மையைத் தினமிருமுறை குளியலாலும் பல்துலக்கலாலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தேவையற்ற அழகூட்டும் பூச்சுகள், நறுமணப் பொருள்கள், வாசனைத் திரவியங்களை விலக்குவோம். அவை தோலையும், சுவாச உறுப்புகளையும் பாதிக்கும். இயற்கை அழகை மட்டும் மனமார ஊக்குவிப்போம். பிரித்தறிந்து தரம் பார்க்கத் தெரியாமல் விளம்பரத்தில் சொல்லும் அனைத்துப் பொருள்களையும் உபயோகித்துப் பார்க்கும் விளையாட்டு என்றுமே வினையில் போய் முடியும்.




இறுதியாக, உடலில் சிறு தொந்தரவு ஏற்படினும் மருத்துவரை நாடல் அவசியம்; சுயமருத்துவம் அறவே கூடாது. தாமாகவே மருந்தகங்களில் மருந்து வாங்கிச் சாப்பிடுவதும் தவறே. உடலில் புதிதாக எது தோன்றினாலும், மச்சம் பெரிதானாலும், புது மச்சம் உருவானாலும், கட்டி தோன்றினாலும் மருத்துவரிடம் ஆலோசனை பெறல் வேண்டும்.

அவை புற்றுநோயாகவும் இருக்கலாம். உடல்நலனைப் பொறுத்தவரை எச்சரிக்கை கலந்த கண்ணோட்டம் இருக்க வேண்டும். இவை அனைத்தையும் கவனத்திற் கொண்டால் வாழ்நாள் முழுமையும் இனிமையே.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாலி ராமன் விகடகவியான கதை

தென்னாலி கிராமத்தில் ராமன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். ராமன் மிகவும் நல்லவன். ஆனால், மிகவும் குறும்புக்காரன். மற்றவர்களைக் கேலி செய்வது அவனுக்கு மிகவும் பிடிக்கும். பாடசாலைக்குப் போகாமல் வீதியோரத்திலும், பூங்காக்களிலும் விளையாடிப் பொழுதை வீணாக்கி வந்தான்.

ஒருநாள், அந்த ஊருக்கு ஒரு முனிவர் வந்தார். அவர் பல வருடங்கள் கடும் தவம் புரிந்ததால் பல அபூர்வ சக்திகள் உடையவர். ராமன் அவரை வணங்கினான். அவருக்குப் பல பணிவிடைகள் செய்தான். அவனது பக்தியையும், நேர்மையையும் கண்டு முனிவர் மனம் மகிழ்ந்தார்.

''மகனே, இந்தச் சிறு வயதில் நீ நல்ல பிள்ளையாகப் பாடசாலைக்குச் சென்று படிக்காமல், உன் பொன்னான நாள்களை வீணாகக் கழித்து விட்டாய். நீ சோம்பேறியாக இருக்காதே'' எனப் புத்திமதி கூறினார் முனிவர்.

''ஐயா! எனக்கு யாரையும் தெரியாது. இன்றுவரை யாரும் எனக்கு இப்படி நல்ல புத்தி சொன்னதில்லை. அதனால் இப்படியே வளர்ந்து விட்டேன். இனிமேல் நீங்கள் சொன்னபடி செய்வேன்'' என்றான் தென்னாலிராமன்.


''நல்லது, நான் உனக்கு ஒரு மகத்தான மந்திரத்தைச் சொல்லித் தருவேன். இது மகா காளி மந்திரம். இந்தக் கிராமத்து எல்லையில், ஒரு மலை உச்சியில், எல்லைக் காளியம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் இருக்கும் காளி தேவி மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். நீ



நாளை அதிகாலையில் அந்தக் கோயிலுக்குப் போ. அங்கே, காளி தேவியின் சந்நிதியில் அமர்ந்து, இந்த மந்திரத்தை ஜபம் செய். அப்போது, காளி தேவி உன் முன்னே தோன்றி, நீ வேண்டும் வரத்தைத் தருவாள்'' என்று முனிவர் கூறினார்.

பின்னர், ராமனுக்கு அந்த மந்திரத்தைக் கற்றுக் கொடுத்துவிட்டு, வேறு ஊருக்குப் பயணமானார்.

மறுநாள் அதிகாலையில், சூரிய



உதயத்துக்கு முன்னர், ராமன் அந்த மலையில் ஏறினான். அங்கே, ஒரு பழைய கோயில் இருந்தது. அந்தக் கோயிலின் கருவறையில் காளி தேவியின் உருவச் சிலை இருந்தது.

ராமன், தான் கொண்டு சென்ற மலர் மாலைகளை அந்தக் காளிதேவியின் சிலைக்கு அணிவித்தான்.

பின்னர், காளிதேவியின் சிலைமுன் அமர்ந்து, முனிவர் கற்றுக் கொடுத்த காளிதேவி மந்திரத்தைப் பயபக்தியுடன் உச்சரிக்கத் தொடங்கினான்.

ராமன் விடாமுயற்சியுடன் அந்த



மந்திரத்தை இலட்சத்திஎட்டு முறை பக்தியுடன் உச்சரித்து முடித்தபோது, அந்த மலை நடுங்கியது. எங்கிருந்தோ கடகட என்று சத்தம் கேட்டது.

அப்போது.......... அவன் முன்னே இருந்த சிலை மறைந்தது. அங்கே, கண்களைப் பறிக்கும் பிரகாசமான ஒளி வெள்ளத்தில் காளிதேவி தோன்றினாள். ராமனைப் பார்த்து அன்புடன் சிரித்தாள். ''உனது பக்தியைக் கண்டு மனம் மகிழ்ந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேள்'' என்று காளிதேவி கூறினாள்.

பக்தியுடன் தனது கைகளைக் குவித்துக் கொண்டு நின்ற ராமன், திடீரென்று சிரிக்கத் தொடங்கினான். குலுங்கக் குலுங்கச் சிரித்தான். காளி தேவி கடும் கோபம் கொண்டாள்.

''அடே! சிறு பயலே, இந்தக் கோலத்தில் என்னை வேறு யார் பார்த்தாலும், அஞ்சி நடுங்கி ஓடி விடுவார்கள். நீ வரத்தைக் கேட்காமல் கோமாளி போல் சிரிக்கிறாய். அதனால், நீ எதிர்காலத்



தில் ஒரு கோமாளியாக, விகடகவியாக வாழ்வாயாக'' என்று காளிதேவி கூறினாள்.

ராமன் ஒரு கணம் சிந்தித்தான். ''தாயே! அதுகூட நல்ல பெயராகத்தான் இருக்கிறது. விகடகவி முன்புறமாகப் படித்தாலும், பின்புறமாகப் படித்தாலும், இது ஒரே மாதிரி ஒலிக்கும். நல்ல பெயர்தான், தாயே'' என்றான் தென்னாலிராமன்.


அவனது பணிவையும், அப்பாவித்தனத்தையும் கண்டு காளிதேவி மனம் இரங்கினாள். தன் கோபம் தணிந்தாள். ''என்னைப் பார்த்து ஏன் சிரித்தாய்? என்று காளிதேவி கேட்டாள். ராமன் பக்தியுடன் பதில் கூறினான்.

''காளி அன்னையே, உனக்கு ஆயிரம் முகங்கள் இருக்கின்றன. ஆனால் இரண்டு கைகள்தான் இருக்கின்றன. எனக்கு ஒரு முகமும் இரண்டு கைகளும் இருக்கின்றன. எனக்குச் சளி பிடித்தால், எனது மூக்கைத் துடைக்க இந்த இரண்டு கைகளும் போதவில்லை. அப்படியிருக்க, ஆயிரம் முகங்களையுடைய உனக்குச் சளி பிடித்தால், இந்த இரண்டு கைகளால் சமாளிக்க முடியாமல் நீ எப்படிக் கஷ்டப்படுவாய் என்று நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்து விட்டது'' என்றான் தென்னாலிராமன்.

அவனது பதிலைக் கேட்டுக் காளி தேவிக்கும் சிரிப்பு வந்தது. அன்னை காளி தேவி தனது ஆயிரம் முகங்களாலும் அழகாகச் சிரித்தாள். ராமன் காளி தேவியின் தெய்வீகச் சிரிப்பின் அழகைப் பார்த்து மயங்கி நின்றான். தாயே, உனது சிரிப்பு மிக அழகாக இருக்கிறது என்று கூறினான் ராமன்.

''மகனே! எப்போதுமே கோபமாகக் காட்சியளிக்கும் என்னையே நீ சிரிக்க வைத்து விட்டாய். இன்று முதல் உன் பெயர் தென்னாலி ராமன் என்று வழங்கப்படும். நீ விஜயநகர மன்னனின் அரச சபையில் விகடகவியாக அமர்ந்து, உலகம் முழுவதையும் சிரிக்க வைப்பாய். புகழுடனும், பொருளுடனும் வாழ்வாய். உனது புகழ் என்றும் நிலைத்திருக்கும்'' என்று ஆசி வழங்கிய பின்னர், காளி தேவி மறைந்தாள். காளி தேவிக்கு நன்றி கூறிய பின்னர், தென்னாலி ராமன் புறப்பட்டு, விஜயநகரத்துக்குச் சென்று, மன்னர் கிருஷ்ண தேவ ராயரைச் சந்தித்தான்.

அவனது புத்தி சாதுர்யத்தையும், எல்லோரையும் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் திறமையையும் கண்ட விஜய நகர மன்னர், அவனுக்குத் தமது அரச சபையில் விகடகவியாகப் பதவி கொடுத்தார்.



## தெரியுமா?

** ரைட் சகோதரர்களால் முதன் முதலில் பறக்கவிடப்பட்ட விமானத்தின் பெயர் பிளையர்.*


** தான் வாழும் காலத்திலேயே அதிக ஒஸ்கார் விருதுகள் பெற்றவர் வால்ட் டிஸ்னி.*

** நீரோ மன்னன் தன் குதிரைகளுக்குத் தங்கத்திலான லாடம் அடித்தான்.*

** அன்னை தெரசாவின் உண்மை பெயர் ஆக்னஸ் கோஷா.*

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## கண்டுபிடிப்பாளர்களும் கண்டுபிடிப்புகளும்




சா.பவிதா
கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி.,


## பழமொழி

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
அடாது செய்பவர் படாது படுவார்
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
குப்பையில் போட்டாலும் குன்று மணி மங்காது
சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

க.தேனுகா
புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யாராகப் போகின்றேன்



## நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

* 'நான் யாராகப் போகிறேன்?' என்ற தெளிவு உங்களிடம் இருக்கிறதா? யாராகப் போகிறீர்கள்?
* அந்த இலக்கை அடைய என்னென்ன முயற்சிகளை இதுவரை மேற்கொண்டிருக்கிறீர்கள்?
* நமது எந்தவொரு இலக்கும் சமூக நலனுக்காகவே என்பது சரியா?

நீங்கள் யாராகப் போகிறீர்கள்? என்ற கேள்வியைச் சிலர் எம்மிடம் கேட்டிருக்கலாம். வகுப்பில் ஆசிரியரோ, வீட்டில் எமது பெற்றோர்களோ அல்லது உறவினர்களோ எம்மிடம் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, ''நான் டாக்டராகப் போறேன்.... அரச அதிபராகப் போறேன்... டீச்சர் ஆகப் போறேன்' என்று விதவிதமாய் பதிலளித்திருப்போம். இதில் வேடிக்கை என்னவென்றால் அவ்வாறு பதிலளித்ததோடு சரி. அதன் பிறகு, நாம் என்ன சொன்னோம் என்பது நம்மில் பலருக்கு நினைவிருப்பதில்லை. ஏதோ ஒரு சிலர்தான் தாங்கள் சிறுவயதில் கொண்டிருந்த குறிக்கோளைப் பற்றி தீவிரமாக சிந்தித்து, அருமையாக திட்டம் தீட்டி, விடாமல் முயற்சி செய்து குறிக்கோளை அடைந்து விடுகிறார்கள்.

அமெரிக்காவில் ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்த ஆபிரகாம் லிங்கனிடம் சிறுவயதிலேயே ஒரு குறிக்கோள் இருந்தது. அமெரிக்காவின் ஜனாதிபதி தங்கும் மாளிகையில் தானும் ஒருநாள் ஜனாதிபதியாக அமர்ந்து, மக்களுக்குச் சேவை செய்வேன் என்பதே அவரது சிறுவயது குறிக்கோள். அவரைச் சுற்றி வாழ்ந்தவர்களுக்கு வேடிக்கையாகத் தோன்றியது. ஆனால், லிங்கன் தனது குறிக்கோளில் மிகவும் உறுதியாக இருந்தார். வீட்டில் மிகவும் ஏழ்மையான சூழலிலும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் கஷ்டப்பட்டுப் படித்து முன்னேறினார். தேர்தல்களில் போட்டியிட்டார். ஆனால் மக்கள் இவரை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. இதனால் தொடர்ந்து படுதோல்வியடைந்தார். இருப்பினும் தேர்தலில் போட்டியிட்டுக் கொண்டேயிருந்தார். ஆம்! அந்தநாள் வந்தது. தான் நினைத்தது போலவே ஜனாதிபதியாகி வெள்ளை மாளிகையில் போய் அமர்ந்தார். கறுப்பின மக்களுக்காக அளப்பரிய பணிகளைச் செய்து எல்லோருடைய மனதிலும் நீங்காத இடத்தையும் பெற்றுவிட்டார்.

நீங்கள் யாராக விரும்புகிறீர்கள் என்று பிறர் எம்மிடம் கேட்டது ஒருபுறம் இருக்கட்டும். ''நான் யாராகப் போகிறேன்?'' என்ற கேள்வியை நாம் என்றாவது எம்மிடம் கேட்டுப் பார்த்திருக்கிறோமா?

ஏதோ நாமும் பிறந்தோம்... உல்லாசமாக இருந்தோம்... இறந்தோம் என்று வாழ்வை வீணடிக்கப் போகிறோமா? சிலரிடம் குறிக்கோள்களுக்குப் பஞ்சமே கிடையாது. ஆயிரம் குறிக்கோள்கள் அவர்களிடம் மலிந்து கிடக்கின்றன. ஆனால், அவற்றை அடைவதற்கான வேகம், விவேகம், கடின உழைப்பு, மன உறுதி காணப்படுவதில்லை. அதனால் லிங்கனைப் போல் நம்மால் குறிக்கோள்களை அடையமுடிவதில்லை.

# தாவர சாகிய விநோதங்கள்

தாவர சாகியத்தை உகந்த முறையில் வகைப் படுத்தக்கூடியவர்கள் தாவரவியல் வல்லு நர்கள் என்பது வெள்ளிடைமலை. பொதுவாக மரம், செடி, கொடி போன்றவற்றின் வேற்றுமையை நன்கு உணரக்கூடிய இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் பரிணமித்துள்ள அனைத்து தாவரங்களின் சாகியம், இனப்பெருக்கம், வளர்ச்சி, பயன்பாடு ஆகியன பற்றி ஆராய்வது இங்கு உசிதமாகும்.

ஆறு, கடல், சமுத்திரம், மாநகரம், பாலைவனம் நீங்கலாக உலகத்தின் ஏனைய பிரதேசங்களுக்கு மேலாக உலங்குவானூர்தியில் பறப்பவர்களுக்கு தரை பச்சை நிறமாக தென்படுவது சகஜமாகும். இதிலிருந்து பூமியின் மேற்பரப்பு பச்சை நிறமாகத் தோன்றுவதற்குரிய காரணம் அங்கு வேரூன்றியுள்ள கோடிக்கணக்கான தாவர சாகியங்கள் தான் என்பது கண்கூடு.

மரங்களுக்கு தோற்றம் அளிப்பவை இலைகளேயாகும். இலைகளில் பச்சையம் நிறைந்துள்ளது. தாவரங்களுக்கான உணவு இலைகளிலே பச்சையத்தின் உதவியுடனே தயாரிக்கப்படுகின்றது.

தாவரங்கள் தமக்குத் தேவையான நீரை வேர்களின் மூலம் உறுஞ்சிக் கொள்கின்றன. மரங்களின் வளர்ச்சிக்கு நீர் இன்றியமையாததொன்றாகும். தண்ணீர் கிடைக்கப்பெறாத மரம், செடிகள் முதலில் வாடிக்காணப்பட்டு ஈற்றில் இறந்தே விடுகின்றன. வறண்ட பிரதேசங்களில் குறிப்பாக சேறு, சகதிகளில் காணப்படுகின்ற

# எழுத்தறிவின் பரிணாமம்!

தர்மா



உலக மக்கள் சர்வதேச நாடுகளில் பல்வேறு சூழ்நிலைகளிலும் வாழ்ந்து வருவதனால் மொழிகள் வேறுபடுகின்றன. இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் பாவனையில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரத்துக்கும் மேல் என்று அறியமுடிகின்றது.

அந்த மொழிகளின் சிறப்புக்கள் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் வளர்ச்சிகளை வெளியிடவும் தொடர்பாடல் பரிமாற்றத்துக்கும் மொழி அத்தியாவசியமான தொன்றாகும். இதற்கு எழுத்தறிவு மேம்பாடு அடைய வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். மொழித்திறன்களை வளர்ப்பதற்கு போதிய கல்விச்சூழல் எம்மிடம் பரிணமித்துள்ளதால் மொழித்திறமை பெறுவதற்கு எழுத்தறிவானது கட்டாயத் தேவைகளில் ஒன்றாகும் என்பது கண்கூடு.


உலக மக்கள் தம் கருத்துக்களை மொழியின் உதவியினாலேயே வெளியிடுகின்றனர். ஏலவே கற்றல், கற்பித்தல் இரண்டும் எழுத்தறிவுக்கு ஊன்றுகோலாகத் திகழுகின்றன. இதற்கு மொழியே அத்தியாவசியமாகத் திகழுகின்றது என்றும் கூறலாம்.

அந்தக் கால கட்டத்தில் எழுத்தறிவுக்கு குருகுலங்கள் தங்களது பங்களிப்பை ஆற்றின என்பதை வரலாறு சான்று பகர்கின்றது. இன்று இலங்கையில் 80 சதவீத மக்கள் எழுத்தறிவுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் எமது அயல்நாடான இந்தியாவில் எழுத்தறிவு விகிதாசாரம் குறைந்த அளவே காணப்படுகின்றது.

எழுத்தறிவு பேணப்பட வேண்டிய கட்டாயம் அனைத்து மக்களின் தலையாய கடமைகளி லொன்றாகும் என்பது புத்திஜீவிகளது கூற்றாகும். இதனால் எழுத்தறிவின் பரிணாம வளர்ச்சி மேலோங்கும்.

**உலகின் எதிர்காலச் சந்ததியை உரிய முறையில் வழிநடத்தக் கூடிய தன்மை எழுத்தறிவிப்பவனையே சாரும். கல்லூரி மாணவர்களைச் சிறந்த ஆளுமையும் விவேகமும் உடைய நற்பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பு கற்பித்தலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பொருந்தும்.**





அதிகமாக தொலைக்காட்சி பார்ப்பதால் குழந்தைகளின் வலது மூளை
இடது மூளையை விட அதிகம் பணிபுரிந்து ஒரு நிலையற்ற சலன மன
உள்ள மனிதரை உருவாக்கும். குழந்தைகளின் கவனிக்கும் திறனை
தொலைக்காட்சி குறைக்கிறது. இதுமட்டுமல்லாமல் அவர்களுடைய சகிப்
தன்மையையும் குறைத்து, விரக்திக்குச் சாதகமான மனநிலையை அவ
களிடம் உருவாக்குகிறது. அவர்களுடைய நினைவுத்திறன், உணர்ச்சி
கட்டுப்பாடு மற்றும் ஆய்வுத் திறனையும் கொஞ்சம் கொஞ்சமா
அழிக்கிறது'' என்று டாக்டர் பகோங்கர் கூறுகிறார்.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, தொலைக்காட்சியை
தொடர்ந்து பார்ப்பது குழந்தைகளிடம் ஒரு மெய் மறந்த நிலை
உருவாக்கும் என்றும் மூளையின் மேற் பகுதியில் உள்ள சக்தி வாய்ந்
பகுதிகளில் உள்ள கவனத்தை மூளையின் கீழ்ப் பகுதிக்கு மாற்றி
உணர்ச்சிகளுக்கு இடம் தேடிக் கொடுக்கும் என்றும் கண்டறிந்துள்ள
மூளையின் செயற்பாட்டில் ஏற்படும் இத்தகைய மாற்றம் அபின் போன்
போதை உணர்வை உடலில் இயற்கையாகத் தோற்றுவிக்கிறது. இந்த
பாதிப்பிற்கு சிகிச்சையே கிடையாது என்பது தான் மிகவும் அச்சமளிக்கு
விடயமாகும். இதனைத் தடுக்கலாமே தவிர குணப்படுத்த இயலாது.

மூளை மட்டுமல்லாமல் உயர் ரத்த அழுத்தம், அதிக அளவிலா
கொலஸ்ட்ரோல் போன்ற நோய்களினால் உடலும் பாதிக்கப்படுகிற
குழந்தைகள் கீழ்ப்படியும் தன்மையை அறவே மறந்து விடுகிறார்கள்.

சரி, இவற்றுக்குத் தீர்வு தான் என்ன? தொலைக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாகியத்தின்

## ...்கள் காண்பீர்!






உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் உயிர்வாழ்வதற்கு தாவரங்களும் இன்றியமையாததொன்றாகும் என்றும் கொள்ளலாம். பூண்டு, செடி, கொடி போன்றவற்றை மனிதன் தரத்துக்கேற்ப பயன்படுத்துகின்றான். அதே வேளை புலால் உண்ணும் விலங்குகள் நீங்கலாக ஏனைய மிருகங்களும் தாவரங்களையே பிரதான உணவாகக் கொள்ளுகின்றன எனலாம். யானைகள் கூட கரும்பு, வாழை என்பவற்றை உண்ணும் நோக்கோடு தோட்டத்தையே துவம்சப்படுத்துகின்றதை நாம் அறிவோம். பகல் வேளைகள், சூரிய ஒளி, பச்சையம், காபனீரொட்சைட் போன்றவற்றைப் பயன்படுத்தியே தாவரங்கள் இலைகளில் உணவு தயாரிக்கும் பணி நடைபெறுகின்றது . இதனால் அவைகள் சுவாசிக்கும் வேளையில் ஒட்சிசனை வெளியேற்றி காபனீரொட்சைட் உள்வாங்குகின்றன. இதனால் வளிமண்டலம் தன்னிச்சையாகவே பரிசுத்தம் அடைகின்றது என்றும் கூறலாம். இரவு வேளைகளில் மரங்களுக்கு கீழே உறங்குவது நல்லதல்ல. ஏனெனில் அந்த நேரம் எதிர்மறையான வாயுப் பரிமாற்றம் நிகழுகின்றன.(தொடரும்)

**ஜீவராசிகளுக்கும் உயிர்வாழ்வதற்கு தாவரங்களும் இன்றியமையாததொன்றாகும் எனவும் கொள்ளலாம். பூண்டு, செடி, கொடி போன்றவற்றை மனிதன் தரத்துக்கேற்ப பயன்படுத்துகின்றான்.**

நாகதாளி, கண்டல் என்பவை நீரை ஏற்கனவே சேமித்து வைத்துக்கொள்கின்றன. சில தாவரங்கள் இலைகளிலும் வேறு சில தாவரங்கள் தண்டுகளிலும் நீரைச் சேமித்து வைத்து அவசியமான வேளைகளில் பயன்படுத்துகின்றன. பாலைவனத் தாவரங்களும் இதனையே மேற்கொள்கின்றன.

# நீங்களும் கலந்து கொள்ளலாம்



பார்க்கப், பார்க்க எனக்கு ஆனந்தமாகவும் பிரமிப்பாகவும் இருந்தது. மாலை வேளையில் செய்திகள் வாசிக்கப்படும்போது தொலைக்காட்சியில் இவ்வகையான காட்சிகளைப் பார்க்கலாம். யாரோ ஒரு கட்சியினர் எங்கோ ஒரு மக்கள் கூடும் நாற் சந்தியில் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருப்பார்கள். அதுவும் இவற்றை தென்னிந்தியத் தொலைக்காட்சியில் நீங்களும் பார்த்திருக்கலாம். அங்கே கட்சிகளுக்குப் பஞ்சமில்லை, புதிது புதிதாக இளைய தளபதிகளும், அறிமுக நாயகர்களும், முதிய தளபதிகளும் ஏதோ ஒரு பேரில் கட்சியைத் தொடங்கி விடுவார்கள். மக்களுக்கு நீதியையும், நேர்மையையும் கொண்ட ஊழல் அற்ற ஆட்சியைக் கொண்டு வருவோம் என்ற அறை கூவலோடு அரசியலுக்கு வருவார்கள்.

சரி, அரசியல் கட்சிகளைத் தொடங்கி விட்டால் எப்படி சும்மா இருப்பது? ஆடத் தெரியுமெண்டால் ஆடத்தானே வேண்டும்? மக்களுக்கு நாம் யார் என்பதைக் காட்டவேண்டாமோ? திருடனாக இருந்தால் களவெடுக்காமல் எப்படி இருப்பது? மக்கள் எம்மீது, எமது கட்சி மீது கவனத்தை ஈர்க்கும் வகையில் நாங்கள் ஏதாவது செய்ய வேண்டுமல்லவா? உடனேயே மக்களுக்கு நடைமுறையில் கஷ்டத்தை கொடுக்கின்ற ஒரு பிரச்சினையை எடுத்து தமது கட்சித் தொண்டர்களுடன் ஒரு நல்ல நாளில் களத்தில் மன்னிக்கவும் வீதியில் குதிக்க வேண்டியதுதான். உடனடியாக கவன ஈர்ப்புப் போராட்டம் மின்சாரம் அடிக்கடி தடைப்படுமாயின், அரிக்கன் லாம்பைத் தூக்கிக் கொண்டு போவது. போக்குவரத்து வாழ்க்கை செலவினங்கள் அதிகரிக்குமாயின் மாட்டு வண்டிலில் ஏறிப்பயணம் செய்வது. தண்ணீர் பிரச்சினை ஆயின் வீதியில் குடங்களைப் பரப்பி வைத்து மறியல் செய்வது. இவையெல்லம் தமிழ்நாட்டு தொலைக்காட்சியில் அதிகமாகப் பார்க்கலாம்.

செய்தி வாசிப்பவரின் குரலோடு, பின்னணியில் இவ்வாறான காட்சிகள் காண்பிக்கப்படும். வரிசையாக பலர் 'கலரான' சால்வைகளைத் தோளில் போட்டபடி, கறுத்தக் கண்ணாடிகள் அணிந்தபடி கைகளைத் தூக்கிக் கொடிகளை ஆட்டியபடி கோஷம் போட்டு படத்திற்கு 'போஸ்' கொடுப்பார்கள். "போராடுவோம், போராடுவோம், சாகும் வரை போராடுவோம்"என்பார்கள். அக்கட்சியின் மாவட்டத் தலைவரோ, செயலாளரோ தாங்கள் நடத்தும் போராட்டம் பற்றி 'மினி' பேட்டி கொடுப்பார்..." எனவே எமது மக்களுக்கு இந்த அரசினால் நீதி கிடைக்காது விடில் எமது கட்சியினர் தொடர்ந்து போராட்டங்களை நடத்துவார்கள். மேலும் நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்போம்" என்று எச்சரிக்கை விடுவார்கள்.

ஏன் குதிப்போம் என்று சொல்கிறார்கள். வேறு வார்த்தை கிடையாதா? அவ்வளவு உயரத்திலா இருக்கிறார்கள். அடுத்து இன்னொரு கட்சியினர் இதே பிரச்சினை, இன்னொரு வடிவத்தில் வேறு நிறமான சால்வையோடு, கொடிகளோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள். "வேண்டும், வேண்டும் நீதி வேண்டும்", "ஊழல் ஒழிக" என்ற கோஷத்தோடு கடைசியில் போராட்டம், வீதி மறியலில் ஈடுபட்டு, போக்குவரத்து பஸ்களை மறித்து, டயர்களைக் கொழுத்தி, கல்லெறி நடத்தி, நிலைமை மோசமடைய, கடைசியில் பொலிஸார் தற்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு கூட்டத்தை கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வர பல முயற்சிகள், செய்து கடைசியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து ஒன்றா, இரண்டா எத்தனை பேர் - கட்சித் தலைவர்களோடு தொண்டர்களையும் வாகனத்தில் ஏற்றத் தொடங்குவார்கள்.

இந்த கட்டத்தை நீங்கள் கவனித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் நாங்கள் பங்குபற்ற முடியவில்லையே என கவலையும் ஏற்படலாம். தொண்டர்கள் மத்தியில் பொலிஸ் துறை வாகனம் நிறுத்தப்பட்டவுடன் தொண்டர்கள் கட்சிக் கொடியினைத் தூக்கி கோஷமிட்டபடி, கமராவைப் பார்த்தபடி வெகு நிதானமாக ஆறுதலாக உள்ளே ஏறுவார்கள். ஏதோ அரச செலவில் கல்விச் சுற்றுலா போவதுபோல் எவ்வளவு கொண்டாட்டம், குதூகலிப்பு. எந்தவித வற்புறுத்தலும் இன்றி அனைவரும் ஏறிக்கொள்வார்கள்.

போராட்டத்தில் கலந்துகொள்ளாத பொதுமகனும் கூட "அட சும்மா ஒருக்கால் ஜெயிலை பார்த்துவிட்டு வரலாமே" என்ற ஆசையில் போனாலும் போகலாம். இதைப் பார்க்கும்போது எனக்கு எமது போக்குவரத்து தனியார்துறை வாகனங்களின் மீது கவலையும் ஆத்திரமும் வரும்." எப்போதாவது இப்படி அமைதியாக, ஆறுதலாக நின்று எம்மை ஏற்றி இருக்கிறார்களா? ஏன்? நாம் கால்வைத்து ஏறமுன்னரே எம்மைப் பிடித்திழுத்து உள்ளே தள்ளிவிடுவார்களே. நாம் என்ன குற்றம் செய்தோம். கொடியும், கோஷமும் போடாததுதான் எமது குற்றமா?

அண்மையில் ஜெ.அரசுக்கு எதிராக தி.மு.க. தலைவரும் தொண்டர்களும் சிறை நிரப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் அடைபட்டார்கள். ஸ்ராலின், கனிமொழி, நடிகை குஷ்பு எல்லாரையும் வண்டியில் ஏற்றினார்கள். குஷ்பு என்ன வடிவான சிரிப்போடு 'போஸ்' கொடுத்தார். எல்லாம் குடுத்து வைச்ச மனுசர்கள். எல்லாரும் கோடை விடுமுறைக்கு மனைவி, பிள்ளைகளோடு, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி போறமாதிரியெல்லோ கையை ஆட்டிப் போயினம். சிலவேளை காலையில் கைது செய்த போராட்டக்காரர்களை மாலையே அதே வாகனத்திலே ஏற்றிக் கொண்டு விட்டிட்டும் போயிருக்கினம். அவர்களும் மீண்டும் கோஷத்தை போட்டிட்டு உடனேயே வீட்டை திரும்பியிருப்பினம். இந்த எங்கட இனம் எத்தனை போராட்டங்களைச் செய்து கொண்டு இருக்கிறது? இது உயிர் வாழுதலுக்கான போராட்டம். பொழுது போக்குக்கு அல்ல.

■ தொல்புரம்.சி.கதிர்காமநாதன்

# தொலைவில் வைப்போம் தொலைக்காட்சியை




■ லயவன்

முழுமையாகத் தவிர்க்க முடியுமா என்ற கேள்விகள் மனத்தில் எழலாம். முழுமையாக முடியாவிட்டாலும் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தின் அளவை நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டும். வருமுன் காப்பது நல்லது.

குழந்தைகளுக்குப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதுதான் இதற்கு ஒரே வழி என்று மனநல மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஒரு நாளைக்கு இரண்டிலிருந்து மூன்று மணி நேரமாவது குழந்தைகள் படித்தால்தான் இக்குறையை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம். பாடப் புத்தகத்தைத்தவிர, குழந்தைகளுக்கான கதைகள், துணுக்குகள், வர்ணம் தீட்டுதல் போன்ற பொழுதுபோக்கின் மூலம் அறிவை வளர்க்கும் புத்தகங்களை வாங்கித் தர வேண்டும். குழந்தைகளுக்கு கற்றலின் இனிமையைப் புரிய வைக்க வேண்டும்.

பள்ளிகள் மற்றும் சமூக நிறுவனங்கள் மூலம் இதுதொடர்பான விழிப்புணர்வைப் பெற்றோர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

தொலைக்காட்சிக்கு முட்டாள்களின் பெட்டி என்ற பெயரும் உண்டு. இப்போது அப்பெட்டி எதிர்காலச் சமுதாயத்தையே முட்டாளாக்கும் பெட்டியாக உள்ளது. அதனைத் தவிர்த்து அறிவை விரிவு செய்; விசாலப் பார்வையால் எல்லாவற்றையும்விழுங்கு என்று நம் வீட்டுச் சிறார்களை உற்சாகப்படுத்தி உணர வைப்போம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைந்த நகரங்கள்

■ இணையவன்

பட்டினப்பாக்கத்தில் அரசனுடைய அரண்மனை இருந்தது. சோழன் கரிகாலன் காலத்தில்தான் காவிரிப் பூம்பட்டினம் சிறப்போடு விளங்கியது. அவன் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று இமயச் சிகரத்தில் புலிக்கொடி நாட்டித் திரும்பினான். மீண்டு வரும் வழியில் வச்சிர நாட்டு மன்னன் முத்துப்பந்தரையும், மகத அரசன் பட்டிமண்டபத்தையும், அவந்தி மன்னன் தோரணவாயிலையும் திறையாகவும், பரிசாகவும் தமிழ்வேந்தனுக்கு அளித்தனர்.

முத்துப்பந்தரும், தோரண வாயிலும், பட்டிமண்டபமும் பொன்னும் மணியும் இழைத்த அரிய வேலைப்பாடுகள் வாய்ந்தவை. கரிகாலன் இவற்றையெல்லாம் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் கொணர்ந்து, கண்கவரும் கொலு மண்டபம் ஒன்றை அமைத்தான். இந்த மண்டபம் புலவர் பாடும் சிறப்பைப் பெற்றது. இதற்கு சித்திர மண்டபம் என்று பெயர்.

காவிரிப் பூம்பட்டினம் துறைமுகத்தில் அயல்நாட்டுக் குதிரைகள் வந்து இறங்கின. யவன, சோனக வணிகர்கள் தமிழ் நாட்டுப் பொருள்களை வாங்கிச் செல்லக் கப்பல்களுடன் காத்திருந்தனர். தமிழக மிளகு, அகில், துகில், முத்து, மணி, பவளம் முதலியன பிறநாடுகளுக்கு மிகுதியாக அனுப்பப்பட்டன. இத்துறைமுகத்தில் கலங்கரை விளக்கும் பொலிவாக அமைந்திருந்தது.

பட்டினப்பாக்கத்தில் ஐவகை மன்றங்கள் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச் சதுக்கம், பாவை மன்றம் எனும் பெயர்களில் நிலைபெற்றிருந்தன. பொருளைக் களவு செய்வோரை வெளிப்படுத்திக் காட்டுவது வெள்ளிடை மன்றம்.

''இலஞ்சி மன்றம்'' எனும் பொய்கை மன்றில், கூன், குருடு, ஊமை, செவிடு, தொழுநோயர் ஆகியோர் மூழ்கி வலம் வந்தால் குறை நீங்கி நலம் பெறுவர் எனக் கருதப்பட்டது.

நெடுங்கல் மன்றத்தில் ஒளி வீசும் நெடிய கற்கள் நடப்பட்டிருக்கும். வஞ்சகர்களால் மருந்து வைக்கப்பட்டுப் பித்தம் கொண்டோர் - நஞ்சுண்டு துன்புறுவோர், நச்சரவம் தீண்டப்பட்டோர் ஆகியோரெல்லாம் ஒள்ளிய நெடிய கற்களைச் சுற்றி வந்து நலம் பெறுவர்.

செங்கோல் தவறினாலும், அறங்கூற வையத்தார் நடுவுநிலை பிறழினும், அதனை நாவாற் கூறாமல், கண் துறிப்பில் காட்டும் பாவைப் படிவத்தைக் கொண்டிருந்தது பாவை மன்றம்.

இங்ஙனம் ஐவகை மன்றங்களையும் கொண்ட காவிரிப்பூம்பட்டினம் சமணர்கள், பௌத்தர்கள், சைவர்கள், வைணவர்கள் ஆகிய பல்வேறு சமயத்தினரும் வாழ்ந்த ஒருமைப்பாட்டுத் தலமாகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

பல்வகையாலும் சிறந்து வளர்ந்த பூம்புகார் நகரத்தின் ஒரு பகுதி கடற்கோளால் அழிந்தது. எஞ்சிய நகரம் அரசிருக்கையின் மாற்றத்தாலும் சோழர்கள் குடிப்பகையாலும், மக்களின் ஆர்வமின்மையாலும் பாண்டிய மன்னன் படை எடுப்பாலும் சிதைந்து அழிந்தது. இதனை இங்கு நிகழ்ந்த தொல்பொருள் ஆய்வும் மெய்ப்பிக்கிறது.

மறைந்த நகரங்களை மீண்டும் கண்டறிய வேண்டும் எனும் ஆர்வம் அறிவாராய்ச்சியின் விளைவாகும். மலை நாடுகளில் கடல் கொண்ட நாடுகள் பலவற்றை அகழ்வாராய்ச்சி செய்து தேடிடவும் மீண்டும் அவற்றை உருவாக்கிடவும் பெரிதும் முயன்று வருகின்றனர். பூம்புகார் அழிவை ஆராய கடற்பரப்பில் அகழ்வாராய்ச்சி நடத்த வேண்டுமென்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதன் முன்னோடியாக மறைந்த பூம்புகார் மாநகரை மீண்டும் அதே வனப்புடன் ஓரளவேனும் காண வேண்டும், கண்ணகி வாழ்ந்த ஊரில் அந்தக் கற்பரசிக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும், சிலப்பதிகாரக் காட்சிகளைச் சிற்பங்களாக வடித்து, அவற்றை ஒரு மண்டபத்திலே அமைத்து, சிலப்பதிகாரச் செய்தியை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைக்க வேண்டும் எனும் ஆர்வத்தின் விளைவாக பூம்புகாரில் இப்போது பணிகள் நடந்து வருகின்றன.

> மறைந்த நகரங்களை மீண்டும் கண்டறிய வேண்டும் எனும் ஆர்வம் அறிவாராய்ச்சியின் விளைவாகும். மலை நாடுகளில் கடல் கொண்ட நாடுகள் பலவற்றை அகழ்வாராய்ச்சி செய்து தேடிடவும் மீண்டும் அவற்றை உருவாக்கிடவும் பெரிதும் முயன்று வருகின்றனர்.

# புத்தகசாலை

## பாடசாலையில் ஆலோசனை வழுங்கல்

பாடசாலையை முன்னிலைப்படுத்தி பாடசாலைச் செயற்பாடுகளால் எதிர்காலச் சமூகத்தைக் கட்டி எழுப்பும் பெரிய பணிக்கு உதவும் உந்துதலோடு உருப்பெற்றுள்ளது "பாடசாலையில் ஆலோசனை வழங்கல்'' நூல்.

இன்றைய கல்வி இலக்குகளுக்கும் மேலானதாக வேண்டப்படும் அன்பு, ஆதரவு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பவற்றின் தேடல்கள் அருகி மறைய பல்வேறு அழுத்தங்களால் உடலும் உள்ளமும் பாதிப்படையும் சூழல் பெருகிச் செல்கின்றது. இவற்றைப் போக்கி நலமுடன் வாழவும் கற்கவும் வழிகாட்டும் அரியதோர் நூலாக இந்த நூல் ஆக்கம் பெற்றுள்ளது.

இதனை ஆக்கி அளிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திய பயனுள்ள செயலுக்கு உரியவர்களான கல்வியியலாளர்களான பாலசுப்பிரமணியம் தனபாலன், திருமதி ஞானசக்தி கணேசநாதன் ஆகியோர் பாராட்டுக்குரியோராவர். ஆலோசனை, வழிகாட்டல், கற்றல், கற்பித்தலோடு மாத்திரமின்றி அவை சார்ந்த அனுபவங்களைப் பெற்றுயர்ந்த வகையில் அவர்கள் ஆக்கிய இந்த நூல் என்றும் பயன்தரும் ஆலோசனை வழிகாட்டி நூலாகும். பாடசாலைச் சமூகம் பயன்கொள்ளும் வகையில் ஒவ்வொரு பாடசாலை நூலகமும் இதனைப் பேணுதல் அவசியமாகும்.




## கலிங்கம்



போர் வெறியோடு புறப்பட்டவனை தர்ம நெறி நிற்கப் பணித்த தேசம் என்ற தாரக மந்திரத்தோடு கலிங்கம் முதலாவது இதழ் வெளிவந்துள்ளது. பல்சுவை இருமாத இதழான இந்த இதழில் ''மரண வேளையிலும் மண்டியிடாத மானம்'' என்ற தலைப்பிட்டு கொடூரமான ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் மறுபக்கத்தை விளக்கும் கட்டுரையும், சடங்கு எனும் பெயரில் சாகடிக்கப்படும் ஆபிரிக்கப் பெண்கள் என்ற உள்ளத்தை உருக்கும் உண்மையை விளக்கும் கட்டுரையும் முதலாவது கலிங்கத்தின் கனதியைக் காட்டுகின்றன.

பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன், விரிவுரையாளர்களான எஸ்.வரதராஜன், ச.அருள் நங்கை, கலாநிதி கே.கஜவிந்தன், கே.குருபரன் ஆகியோருடன் ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன், கே.பைரவி என்போர் எழுதிய கட்டுரைகள், அறிவும் ஆய்வும் சார்ந்து பல்துறை விடயப் பரப்புகளுடன் பல்சுவைக் கட்டுரைகளாக விளங்குகின்றன. கு.றஜீபன் எழுதிய ''விடியலை நோக்கி'' எனும் கவிதை புதுயுகத்தின் வரலாறு காண எமது மக்களை எழுந்திருக்கப் பணிக்கிறது.

'தெருப்பாடகன்' சிறுகதை ரஷ்ய மொழிக் கதையின் மொழிப்பெயர்ப்பாகவும் மேலும் பல விடயங்களைக் கொண்டு பல்சுவை இதழாகவும் கலிங்கத்தின் ஜூலை - ஓகஸ்ட் 2012 இதழ் வெளிவந்துள்ளது.

## எனது நாடக வாழ்க்கை

ஐசாக் இன்பராஜா எழுதி வெளியிட்டுள்ள நூல் ''எனது நாடக வாழ்க்கை''. ஐசாக் இன்பராஜா தனது நாடக வாழ்க்கை பற்றிக் கூறும் வேளையில் நாடகத்தோடும் தனது வாழ்க்கையோடும் ஒன்றி நின்று நாடகக் கலை வளர முன்னின்று உழைத்த உழைக்கின்ற நாடக ஆர்வலர்கள் பற்றிய குறிப்புக்களும் கூற்றுக்களும் தந்துள்ள முறை நூலின் சிறப்பை மேலும் அதிகரிக்கும் காரணங்களாகின்றன.

தனது நாடக வாழ்கையின் சிறப்பால் நாடகக் கலை மேம்படவும் நடிப்புத்திறன் மூலம் பல் ரசனைத்திறன் நுட்பங்கள் வெளிப்படவும் மேடையேற்றப்பட்ட நாடகங்களையும் அவை அரங்கேறிய காலங்களையும் இடங்களையும் நினைவூட்டியுள்ளமை நூலை வாசிக்கத் தூண்டுகின்றன.

''எனது நாடக வாழ்க்கை'' அவரது துறையின் மேன்மைக்கு உதவியோரின் நாடக வாழ்க்கையையும் வெளிப்படுத்தி நிற்கும் வகை, தேர்ந்த எழுத்து நூலுக்குச் சிறப்பளிக்கிறது. நிழற்படங்கள் நூலுக்கு அழகு சேர்க்கின்றன. நூலாசிரியரின் கலை வாழ்வு வாசிப்பவர் மனதுக்கு மகிழ்வூட்டுகின்றது.




## நல்லூரில்

நல்லூரில்
ஒவ்வொருநாள் திருவிழாவிலும்
உள்வீதியில்
நீ நிற்கிறாய்
வெளி வீதியில்
நான் நிற்கிறேன்.

சாமி வெளியே
வரும்போதுதான்
நீயும் வெளியே வருகிறாய்.
ஒருநாளும்
நான் சாமி பார்த்ததில்லை.

அங்கப் பிரதட்சனை செய்து விட்டு
தேர்முட்டிக்கு அருகில்
நண்பர்களுடன்
அமர்ந்திருக்கும் போது
எனது அருகில் வந்து
உனது காதலி
கண்டிப்பாகக் கிடைப்பாள் என்றாய்.
எனது காதலி
நீ என்று தெரிந்தா?
தெரியாமலா?

செல்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுநிலையா, சூழ்நிலையா?

ஒரு மனிதன் நல்லவனாக இருப்பதற்கும் கெட்டவனாக இருப்பதற்கும் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? பரம்பரைக் குணம்தான் இதற்குக் காரணம் என்று சொல்வதா? இல்லை வளர்ந்த சூழ்நிலைதான் காரணம் என்று சொல்வதா? இதுதான் இன்றைக்குத் தகவல்.

சில பையன்களைப் பார்த்தால்... உடனே "என்னப்பா நீ இன்னாருடைய மகனா?"என்று கேட்கிறோம். அவனும் 'ஆமா' என்கிறான் இது எப்படி? முகச்சாயல் அதைக் காட்டிக் கொடுக்கின்றது. ஒரு பையன் நடந்துபோகிற முறை, அவனுடைய உடல் வாகு, இதை எல்லாம் வைத்துக்கூட அவன் இன்னாருடைய பிள்ளைதான் என்கிறதை ஓரளவுக்கு ஊகிக்க முடியும்.

ஒருத்தருடைய முக அமைப்பு, கண்களின் நிறம், தோலின் நிறம், தலைமுடி, உயரம் இப்படிப் பலவிடயங்களைத் தீர்மானிப்பது அவருடைய பெற்றோர்களிடம் இருந்து பெறப்படுகிற மரபுக் கூறுகள்தான்.

இதைத்தான் ஆங்கிலத்திலே 'ஜீன்கள்'என்று சொல்கிறார்கள். உயிரியல் செயல்கள், அமினோ அமிலங்கள், சுரப்பிகள். என்பனவற்றின் செயற்பாடுகளை நிர்ணயம் செய்வதும் இந்த மரபுக்கூறுகள்தான். இப்படியெல்லாம் இருப்பதாலேயே ஒருத்தருடைய நடத்தைக்குப் பரம்பரைதான் முழுக் காரணம் என்று ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. சூழ்நிலையோட முக்கியத்துவம் பற்றியும் பலபேர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்...

ஒருவருடைய புத்திசாலித்தனம், உணர்ச்சிவசப்படுகிற தன்மை, கோபம், சுலபமாக நண்பர்களைப் பெறக்கூடிய ஆற்றல், சோர்வுத்தன்மை இதெல்லாம் பெற்றோர்களுடைய வசதி, கல்வி, சூழ்நிலை, வளர்ப்புமுறை-இதைப் பொறுத்து அமைகிறது என்கிறார்கள். அப்பா மாதிரிப் பிள்ளை நடக்கிறானென்றால் அதற்கு பரம்பரைக் குணம் காரணமில்லை. பார்த்துக் கற்பதுதான் காரணம் என்பது இவர்களுடைய வாதம். கோட்டஸ்மன்-என்று ஒரு ஆராய்ச்சியாளர். இவர் என்ன செய்தார் தெரியுமா?

ஒரு தாய் வயிற்றிலே பிறந்த இரட்டைப் பிள்ளைகளைப் பிரித்து வெவ்வேறு சூழ்நிலையிலே வளர்த்தார். அப்படி வளர்த்தது மூலமாகவே இரண்டு பேருக்கும் மாறுபட்ட குணம்-திறமை இருக்கிற மாதிரி உருவாக்கிவிட்டாராம். ஒருவன் ஒரு மாதிரியும், மற்றவன் ஒரு மாதிரியும் உருவாக்கப்பட்டார்கள்.

வான்டன் பெர்க் என்று ஒரு ஆராய்ச்சியாளர். இவர் என்ன செய்தார் என்றால், குழந்தைகளை மூன்றுவகையாகப் பிரித்தார். கலகலப்பா இருப்பவர்கள் ஒருவகை. தனிமையாய் இருக்க விரும்புவர்கள் ஒருவகை. உணர்ச்சிவசப்படுகிறவர்கள் ஒருவகை. பாரம்பரிய செல்வாக்குத்தான் இந்த வகைகளுக்குக் காரணம் என்று அழுத்தமாகச் சொல்கிறார் அவர்.

1963இலே 31,000 குழந்தைகளைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார்கள். அது என்னவென்றால்... ஒரு குழந்தையுடைய நடத்தையிலே பாரம்பரியத்தின் பங்கு கொஞ்சம்தான் என்பதே சூழ்நிலையின் பங்கே ஒருவனின் நடத்தையைத் தீர்மானிப்பதில் அதிக பங்கு வகிக்கின்றது.

ஒரு மனிதக் குரங்கை ஒரு குழந்தையுடன் சேர்த்து வளர்த்துப் பார்த்தார்கள். அந்தக் குரங்கு மிகவும் நேசமாகவும், பாசமாகவும் இருக்கக் கற்றுக்கொண்டது.

குணத்தை மட்டும் அல்ல. உடல் வாகையே சூழ்நிலை மாத்திவிடும் போல இருக்கிறது.

ஜப்பான்காரர்கள் உயரம் குறைந்தவர்கள். அவர்களில் கொஞ்சப் பேர் அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே இருந்தார்கள்.

இரண்டு, மூன்று தலைமுறைக்குப் பின் பார்த்தால்... அந்த ஜப்பான்காரர்கள் மூன்று அங்குலம் உயரமாக வளர்ந்திருந்தார்கள்.

இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது நமது பரம்பரையைவிட நமது சூழல்தான் மிகவும் முக்கியம் என்று தோன்றுகிறது. இந்தக் காலத்துப் பையன் தன்னுடைய அப்பாவிடம் போய், "அப்பா...என்னைப் பொறுத்த வரைக்கும் பரம்பரையிலேயும் நம்பிக்கை இல்லை-சூழ்நிலையிலும் நம்பிக்கை இல்லை" என்றான்.

"எப்படி" என்று கேட்டார் அப்பா.

"ஒரு பையன் கணக்கில் நூற்றுக்கு நூறு புள்ளி வாங்கியிருக்கிறான். அவனுடைய அப்பா படிக்கிறபோது கணக்கில் 6 புள்ளிதான் வாங்கினாராம். அந்த அப்பா மாதிரியே இந்தப் பையனும் இருந்திருந்தால் தேர்வில் வெற்றிபெற முடி யாதே" என்றான்.



"அதுசரி...ஆறு புள்ளி வாங்கின அந்த அப்பா யாருடா?" என்றார்.

"நீதான்" என்றான் பையன்.

"எப்படித் தெரிஞ்சுது" என்றார்.

"அம்மா சொன்னவ" என்றான் பையன்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## வீதியைப் புனரமைப்பார்களா?

கனகம்புளியடி- நுணாவில் வீதி சேதமடைந்து காணப்படுவதால் அந்த வீதியினூடே போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த வீதி கனகம்புளியடி ஐந்து சந்தியில் இருந்து ஏ -9 வீதியைச் சந்திக்கும் வீதியாகும்.

இந்த வீதி சாவகச்சேரி - பருத்தித்துறை , யாழ்ப்பாணம் - கனகம்புளியடி - கொடிகாமம், பகுதிகளுக்கு அரச பஸ்ஸும் , தனியார் பஸ்ஸும் போக்குவரத்தில் ஈடுபடும் முக்கிய வீதியாகும்.

மேலும் ஏ-9 வீதியில் இருந்து இந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் கனகம்புளியடி ஐந்து சந்தியை அடைந்து அங்கிருந்து புத்தூர்- வாதரவத்தை, பருத்தித்துறை - நெல்லியடி - மந்திகை, புத்தூர் சந்தியூடாக ஏ-9 வீதியை அடையும் இந்த வீதியானது மட்டுவில் தெற்கு, மட்டுவில் மத்தி, மட்டுவில் கிழக்கையும் ஊடறுத்து தெற்கு வடக்காக செல்கிறது. இந்த வீதியின் கிழக்குப்புறம் சாவகச்சேரி நகர சபையும், மேற்குப்புறம் கிராம சபைகளும் ஆட்சி செய்கின்றன. ஆனால் எவருமே இந்த வீதியின் அவலத்தைக் கண்டு கொள்வதில்லை .

இந்த வீதியால் நாளாந்தம் 500 பேருக்கு குறையாமல் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே உடனடியாக இந்த வீதியை புனரமைத்து தருவார்களா என்று அந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் சார்பில் நான் கேட்கின்றேன்.

எஸ்.பாலசுப்பிரமணியம்
மட்டுவில் மத்தி

## நேர்முகப் பரீட்சை முடிவுகள் எப்போது வெளியாகும்

வடமாகாண சபையின் இளநிலை ஊழியர் வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை வைகாசி ஆரம்ப நாள்களில் நடைபெற்றது.

இந்த நேர்முகப் பரீட்சையினை வடமாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி காணி, நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேர்முகப் பரீட்சை முடிந்து இரண்டரை மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் முடிவுகள் வெளியாகவில்லை. முடிவுகள் எப்போது வெளியாகும் என்பதை குறித்த அமைச்சு அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கிறோம்.

செ. நிதர்சன்
வல்வெட்டித்துறை

## இந்துக் கோயில்களில் கடவுளை தமிழில் அர்ச்சிக்க முடியாதா?

தமிழ் எங்கள் தாய்மொழி. சைவம் எங்கள் வழி ஆனால் சைவக் கோயில்களில் தமிழ்த் தாய்மொழியால் இறைவனை அர்ச்சிப்பதில்லை. மொழி ஆர்வலர்கள் பலர் முயன்றும் தோல்வியடைந்துள்ளனர். இந்துக் கோயில்களில் சமஸ்கிருத மொழியாலேயே இறைவனை அர்ச்சிக்கிறார்கள்.

ஒருவருமே சமஸ்கிருதம் பேசுவதில்லை. ஒருவருக்குமே சமஸ்கிருதம் விளங்காது. தமிழர்கள் வாழும் பகுதியில் பன்னிரு தேவார திருமுறைகள் தமிழில் ஓதப்படுகின்றன. தமிழுக்காக நெற்றிக்கண் திறந்த கடவுள், மதுரை தமிழ் சங்கத்தில் அடியார் ஒருவருக்கு முத்தி கொடுக்க தமிழில் ஓலைச்சுவடி எழுதிய கடவுள், மாணிக்கவாசகரின் பாடலை திருவாசகம் என்னும் தேன் என திருத்தம் செய்த கடவுள் சிவபெருமான். இப்படி இருக்கையில் ஏன் தமிழ் மொழியில் இறைவனை அர்ச்சிக்கக்கூடாது?

சைவர்கள் தங்கள் சமய பாடத்தோடு சமஸ்கிருத மொழியை இணைத்து ஓரளவேனும் கற்கவேண்டும். அதனை சைவசமய ஆர்வலர்கள் செய்ய முன்வருவார்களா? இந்துக்கள் தங்கள் சமய பாடத்தில் பிள்ளைகளுக்கு சமஸ்கிருத மொழியை இணைத்து கற்பிக்க கல்வி அமைச்சு இந்து கலாசார அமைப்புகள் நடவடிக்கை எடுக்குமா?

ஐரோப்பிய மொழிகளைக் கற்கிறோம். பணத்துக்காக பொருளாதார வசதி வாய்ப்புக்காக ஏன் சமஸ்கிருத மொழியை அழியவிட வேண்டும். ஒரு மொழி அழிதல் என்பது ஒருநாளும் ஏற்க முடியாத ஒன்றாகும். எந்த ஒரு இதயம் உள்ள மனிதனும் ஒரு மொழியை அழிக்க துணை போக மாட்டான்.

இந்துக்கள் அனைவரும் சமய பாடத்தில் சமஸ்கிருத மொழியைக் கற்றால் அவர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். இல்லாது போயின் சமஸ்கிருத மொழி அழிவதற்கு நாங்களே காரணமாக இருக்கப் போகிறோம் என்பது கவலைதரும் விடயமாகும்.

மு.ரகுபாலன், சுவிஸ்

## நியாயமான கட்டளைகளை ஏற்பார்களா?

கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசாவின் சட்டரீதியான நியாயமான கட்டளைகளை ஏற்று செயற்படுவதற்கு சிலர் மறுக்கின்றனர்.

தலைமைத்துவம் என்பதன் சிறப்பம்சம் தெரியாதவர்கள் அமைப்புக்களின் தலைவர்களாக இருப்பது எமது பிரதேச மக்களின் தாய்மையான உணர்வுகளை களங்கப்படுத்துவதாகவே அமையும்.

எமது மக்கள் இவ்வாறானவர்களின் சுயநலமான நடவடிக்கைகளை நன்கு விளங்கிக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் எமது பிரதேச மக்கள் பிரதேச சபையுடன் இணைந்திருந்து. பிரதேசசபை சட்டங்களுக்கு கட்டுப்பட்டு, பிரதேசம் வளம் பெற தமது பூரணமான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நான் நம்புகிறேன்.

விஷ்ணு சுவிஷ்கரன்
கிளிநொச்சி

## அருட்சகோதரிகளின் அளவற்ற சேவை

அன்னை திரேசா காட்டிய பாதையில் அன்பு, பாசம், நேர்மைவழி காட்டி வழி நடத்தும் திருக்குடும்ப அருட்சகோதரிகளின் அளவற்ற சேவையை பாராட்டுவதில் ஊர்காவற்றுறை மக்களாகிய நாங்கள் மகிழ்வுறுகின்றோம்.

திருக்குடும்ப அருட்சகோதரிகளின் 140 வருடச் சேவை எமது பகுதி மக்களுக்கு பெரும் பயனை அளித்துள்ளது. எதிர்வரும் காலங்களிலும் அவர்களுடைய சேவை எமது பிரதேசத்துக்கு தேவை என்பதால் இன்னும் பல வருடங்கள் சேவையாற்ற வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கின்றோம்.

வி.பிரான்சீஸ்
ஊர்காவற்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகம் உடையாமல் பாதுகாக்க சில வழிமுறைகள்....

பெண்கள் தங்கள் முக அழகுக்கு செலவிடும் நேரத்தில் ஒரு சில நிமிடங்கள் கூட தங்கள் கை விரல்களுக்கோ அல்லது நகங்களுக்கோ செலவிடுவதில்லை.

விரல்கள் அழகாக காட்சியளிக்க வேண்டுமென்றால் நகங்கள் அழகாக இருக்க வேண்டும்.

நகங்கள் அழகாக, நக பராமரிப்பற்கான சில குறிப்புக்கள் தரமான நகச்சாயங்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும். அப்போது தான் நகத்திற்கு எவ்வித பாதிப்பும் வராது. நகச் சாயம் வாங்கும் போது உங்கள் நிறத்திற்கு ஏற்ற கலராக பார்த்துத் தேர்ந்தெடுங்கள்.

நகச் சாயம் ரிமூவரை அடிக்கடி பயன்படுத்துவது நகத்திற்கு தீங்கு விளைவிக்கும். எனவே, அவற்றை அடிக்கடி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். நகச்சாய ரிமூவருடன், சிறிது கிளிசரின் கலந்து பயன்படுத்துவது நல்லது. தண்ணீரை மிதமாக சூடுபடுத்தி, சிறிது உப்பு கலந்து, அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

தினமும் நகச் சாயம் உபயோகிப்பதால் நகங்களின் நிறம் மங்கிக் காணப்படும். எனவே வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் நகச் சாயம் உபயோகிக்காமல், இருப்பது நல்லது





# முழங்கை கறுப்பை நீக்க சில வழிகள்...

1. ஒரு ஸ்பூன் மஞ்சள் தூளுடன் மூன்று கறிவேப்பிலையை அரைத்து தண்ணீர் விட்டு பேஸ்ட் செய்து, முழங்கையில் தடவி 15 நிமிடம் ஊற வைக்கவும். பின் வெதுவெதுப்பான நீரால் அதனை துடைத்து எடுத்து விட வேண்டும். இதனை தினமும் குளிப்பதற்கு முன் செய்தால், அங்கு இருக்கும் கருப்பு நீங்கிவிடும்.
2. 100 கிராம் காய்ந்த துளசி இலையை பொடி செய்து, அத்துடன் 1 ஸ்பூன் வேப்பம் எண்ணெய், 1 ஸ்பூன் ரோஸ் வாட்டர் மற்றும் அரைத்த புதினா இலை சேர்த்து பேஸ்ட் செய்து, முழங்கையில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் பருத்தித்துணியில் துடைத்து விட்டு பிறகு வெது வெதுப்பான நீரில் கழுவவும்.
3. முழங்கையில் இருக்கும் கருப்பை நீக்க சிறந்த ஒரு வழி, ஒரு வாளி தண்ணீரில் சிறிது சோள மாவை கரைத்து, பின் கையை ஊற வைத்து கழுவினால், கருப்பு நீங்கிவிடும்.
4. தினமும் கடுகு எண்ணெய் வைத்து 10 நிமிடம் முழங்கையில் மசாஜ் செய்து, பின் அந்த இடத்தை பருத்தி துணியால் துடைத்து எடுக்கவும். இவ்வாறு செய்தால் அந்த இடத்தில் உள்ள அழுக்கானது போய்விடும்.
5. ஒரு ஸ்பூன் தயிருடன் ஒரு ஸ்பூன் வினிகரை விட்டு, முழங்கையில் தடவி, தினமும் 10 நிமிடம் மசாஜ் செய்யலாம்.
6. எலுமிச்சை பழத்தை நறுக்கி அதில் உப்பை தடவி, முழங்கையில் 5 நிமிடம் தேய்த்து வரவும். இதனைத் தினமும் செய்தால் சிறிது நாட்களில் முழங்கையில் இருக்கும் கருப்பு நீங்கிவிடும்.
7. தேங்காய் எண்ணெயுடன் சிறிது தேனை விட்டு, எலுமிச்சை தோல் வைத்து முழங்கையில் மசாஜ் செய்து, பின் பருத்தித்துணியால் துடைத்து எடுக்கவும். இதனால் அந்த இடத்தில் இருக்கும் அழுக்கானது நீங்கிவிடும். இத்தகைய வீட்டில் இருக்கும் பொருட்களை வைத்து முழங்கையில் இருக்கும் அழுக்குகளை நீக்கி முழங்கையை அழகாக வைத்துக் கொள்ளலாம். மேலும் மேற்கூறிய அனைத்தையும் முழங்கைக்கு மட்டும் பயன்படுத்தாமல், கழுத்து, கணுக்கால் போன்ற இடங்களிலும் பயன்படுத்தலாம்

# முகக்கறுப்பு மாற

பாதாம் எண்ணெயில் சிறிது எலுமிச்சை சாறு விட்டு குழைத்து முகத்தில் பூசிவந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும்.

வேப்பிலை, புதினா, மருதாணி, குப்பை மேனி இவற்றை நிழலில் உலர்த்தி தனித்தனியாக பொடியாக்கி அதில் சம அளவு எடுத்து பாலில் குழைத்து முகத்தில் பூசி 20 நிமிடம் கழித்து முகத்தை இளம் சூடான நீரில் கழுவி வந்தால் முகக்கறுப்பு மாறும்.

பப்பாளி பழச்சாறு எடுத்து அதை காய்ச்சாத பசும் பால் விட்டு அல்லது தயிர் விட்டு குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் காயவைத்து முகத்தை கழுவினால் முகத்தில் உள்ள முகச் சுருக்கம், கருமை நீங்கும். நன்கு பழுத்த வாழைப்பழத்தைப் பிசைந்து அதனுடன் சிறிதளவு மைதா மாவு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து முகம் கழுவி வந்தால் முகம் கருமை மாறி பளபளப்பாக இருக்கும்.



# கண்களை பாதுகாக்கும் வழிகள்!

.நன்றாக தூங்கினாலே கண்களுக்குப் புத்துண்ர்ச்சி கிடைக்கும். கருவளையம் ஏற்பட்டதும் கவலைப்படாம்ல் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து சரி செய்யுங்கள்.

கண்களை சுற்றியுள்ள திசுக்களை மென்மையாக வைத்திருக்க சிறந்த கண் மாய்ச்சரைப் பயன்படுத்தவும்.

கண்கள் பொங்கியிருந்தால் இரண்டு டீ பேகுகளை குளிர் நீரில் நனைத்து அதனை கண் இமையின் மீது வைத்துக் கொள்ளவும்.

கண்களின் கரு வளையங்களை போக்க உருளைக் கிழங்கை நறுக்கி கண்களின் மீது தினமும் வைத்து வரவும்.

புருவங்களை சாதாரண சீப்பைக் கொண்டு வாராமல் புதிய டூத் பிரஷைப் பயன்படுத்தினால் நல்லது.

சருமத்தின் சுருக்கத்தை மறைக்க அங்கு விற்றமின் ஈ கொண்ட எண்ணெயைத் தடவி சரி செய்யலாம்

# அடர்த்தியான புருவங்கள் பெற

முக தோற்றத்தை மிகவும் எடுப்பாக காட்டுவது புருவங்கள் தான் ஆகவே அங்கிருக்கும் முடி வளர்ச்சியில் அக்கறை காட்டுவது நல்லது. தினமும் உறங்க செல்லும் முன்பு, அல்லது குளிப்பதற்கு முன்பு விளக்கெண்ணெயை புருவத்தின் மயிர் காலில் தேய்த்து இலேசாக மசாஜ் செய்யலாம். இவை புருவங்கள் அடர்த்தியாக வளர உதவும் மேலும் ஹார்மோன்கள் பிரச்சினையால் புருவத்தில் முடி கொட்டியிருந்தாலும் அங்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து அவை திரும்ப வளரவும் இந்த மசாஜ் முறை உதவும்



# அப்பிள் கன்னம் வேண்டுமா?



கன்னங்கள் ஒட்டி, குழி விழுந்துபோன பெண்களுக்கு, அப்பிள் கன்னங்கள் மீது ஆசை இருக்காதா என்ன? தங்களுக்கு அப்படி கும்மென்ற கன்னங்கள் உருவாகாதா என்று ஏங்குவர். அப்படிப்பட்ட உங்கள் கன்னங்களும், அப்பிள் கன்னங்களாக மாற, இதோ சில எளிய வழிமுறைகள்:

* அடிக்கடி வாய்க்குள் காற்றை நிரப்பி, கன்னங்களை பலூன் போல் ஊதி, தொடர்ந்து, ஐந்து நிமிடம் வைத்துக் கொள்ளுங்கள்.

* காலையும், மாலையும் சிறிது நேரம் தண்ணீரை வாய்க்குள் வைத்து பயிற்சி செய்வது போல் அங்கேயும், இங்கேயுமாக குலுக்குங்கள்.

* வாய்க்குள் காற்றை நிரப்ப, இரண்டு கைகளிலும் உள்ள மோதிர விரல், நடு விரல், சிறிய விரல் ஆகியவைகளை ஒன்றாக்கி, கீழே இருந்து மேல் நோக்கி மசாஜ் செய்யுங்கள். தினமும் குறைந்தது, 25 முறை இப்படி செய்து வந்தால் அப்பிள் கன்னங்கள் கிடைக்கும்.

[illegible] கன்னங்களை கொண்டவர்கள், அதிக கவனத்துடன் மேக் - அப் செய்ய வேண்டும். [illegible] எலும்புகள் வெளியே தள்ளிக் கொண்டு தெரியும் விதத்தில் இருந்தால், அதில் சிறிதளவு ரூஜ் பூசுங்கள்; அந்த குறை தென்படாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org